www.padippakam.com

விலை ரூ.7-

# சிந்தனையாளன்

திருவள்ளுவராண்டு 2033 பெரியாராண்டு 123 பிப்பிரவரி 2002




- பாரதியஜனதா ஆதிக்க ஆட்சி பலப்படுவது எதனால்? யாரால்?
- அமெரிக்க ஏகாதிபத்திய பயங்கரவாதமும் அதற்குத் துணைபோகும் திருடர்களும்
- தமிழுக்கு ஒரு கருவூலம் கண்ட தனியொரு தமிழ்மகன் காணீர்!

படிப்பகம்

www.padippakam.com

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி பிப்பிரவரி - 2002

| பெயர் | ஊர் | ரூ.பை |
|---|---|---|
| டாக்டர் பெ. இளங்கோவன் | அரியலூர் | 200.00 |
| புகழ் | சென்னை | 350.00 |
| ச.நாத்திக நந்தனார் | வண்டலூர் | 100.00 |
| ஓர் அன்பர் | சென்னை | 50.00 |
| வ.அருவி, வ.அரிமா | சென்னை | 50.00 |
| சீ.இளமதி, சீ.அகிலா | சென்னை | 100.00 |
| முத்து அன்பழகன் | சீர்காழி | 50.00 |
| அழகு அன்பழகன் | சீர்காழி | 50.00 |
| அ. அறிவுக் கடல்-இராஜ்குமார் | சிதமபரம் | 50.00 |
| கி.கலை | சோளிங்கபுரம் | 50.00 |
| க.குப்புசாமி | சோளிங்கபுரம் | 50.00 |
| வள்ளி விசயன் | திருக்கோவிலூர் | 50.00 |
| பகுத்தறிவன் | அரக்கோணம் | 25.00 |
| ந.அப்துல்ரகுமான் | சென்னை | 300.00 |
| சி.பி.ச. அறிவொளி | இரும்புலிக்குறிச்சி | 50.00 |
| நா.இளங்கோ | அரக்கோணம் | 100.00 |
| ந. கருணாகரன் | திருச்சி | 50.00 |
| ப.ம.அதியமான் | திட்டக்குடி | 50.00 |
| ப.ம. மதிஒளி | திட்டக்குடி | 50.00 |
| இரா. இரத்தினகிரி | தஞ்சை | 200.00 |
| பொ.செல்வன் மற்றும் மனைவி, மகன் | மயிலாப்பூர் | 300.00 |
| வீ. இராசாப்பிள்ளை | சிதம்பரம் | 100.00 |
| சிதம்பரன். கி | ஈரோடு | 100.00 |
| முனைவர். இரா.இளவரசு | சென்னை | 100.00 |
| பூ.குருசாமி | சென்னை | 1000.00 |
| அ.ஆறுமுகம் | திருமழபாடி | 100.00 |
| மு. நரசிம்மன் | உறையூர் | 100.00 |
| கு.ம.சுப்பிரமணியன் | திருச்சி | 100.00 |
| லோ. இர. குமார் | சென்னை | 200.00 |

### மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி

| | | |
|---|---|---|
| ந. அப்துல் ரகுமான் | சென்னை | 300.00 |
| க. முகிலன் | சோளிங்கபுரம் | 50.00 |
| சுகுணா - வடிவேலு | சென்னை | 50.00 |

## தொழிலாளர் தோழர் கே.டி.கே. தங்கமணி மறைவு

எளிமையின் இலக்கணமாய், பொதுவாழ்வில் புடம் போட்ட தங்கமாய், தம் வாழ்நாளை ஏழை எளிய பாட்டாளி மக்களின் ஏற்றத்திற்காகச் செலவிட்ட ஏந்தல் தோழர் கே.டி.கே தங்கமணி 26.12.2001 அன்று தம் 87ஆவது வயதில் மறைவுற்றார். மதுரை அருகேயுள்ள திருமங்கலத்தில் செல்வச் செழிப்புமிக்க குடும்பத்தில் பிறந்து, உயர் கல்வியும் இலண்டன் சென்று வழக்கறிஞர் (பார் - அட் - லா) படிப்பும் முடித்தார். மலேசிய ரப்பர் தோட்ட அதிபர் ஓ.இராமசாமி அவர்களின் மகள் வள்ளியம்மையை மணந்தார். எனினும் வழக்கறிஞர் தொழில் நடத்தி வசதியான வாழ்க்கையை வாழ நாடாமல், சாதாரண நான்கு முழ வேட்டியுடன் காட்சிக்கு எளியராய், விடுதலைப் போராட்ட வீரராய், தொழிற்சங்கத் தலைவராய், பல்லாண்டுகள் சிறைக் கொடுமை ஏற்று மக்கள் தொண்டாற்றிய மாமனிதர். தமது 80ஆம் அகவையில் தமக்களிக்கப்பட்ட பத்து இலக்கம் ரூபாயைக் கட்சிக்கே வழங்கி விட்டார். சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினராய்த் தாம் பதவி வகித்ததற்காய் வழங்கப்பட்டு வந்த ஓய்வூயத் தொகையிலேயே தம் வாழ்க்கை நடத்தி வந்தார். கட்சி அலுவலகத்தில் ஒரு சிறிய அறையில் தங்கி வாழ்ந்தார். தம் துணைவியாரையும் முதியோர் இல்லத்தில் தங்கி வாழச் செய்தார். தோழர் தங்கமணி இலக்கிய ஈடுபாடு மிகுந்தவர். மணிமேகலை குறித்து ஆய்வு நூல் வெளியிட்டுள்ளார். பொதுவுடைமை இயக்கத்தின் உலகத் தலைவர்களான மாசேதுங், ஹோசிமின் மற்றும் நேரு, சிங்காரவேலர், ஹிரேன் முகர்ஜி உள்ளிட்டோருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு பெற்ற தங்கமணி, தந்தை பெரியாரிடத்தும் தனிப்பெரும் மதிப்பு கொண்டவர். 1997-இல் மா.பெ.பொ.க. சார்பில் வெளிவந்த 'பெரியார் அயல்நாட்டுப் பயணக் குறிப்புகள்' நூலை தமது கைகளால் வெளியிட்டுப் பெருமை சேர்த்தவர் தோழர் கே.டி.கே. தங்கமணி ஆவார். வாழ்க அன்னாரின் புகழ்!

## என்.வடிவேலு மறைவு

பெரியாரின் கொள்கைக் குன்றாக விளங்கிய மயிலாடுதுறை என். வடி வேலு மறையுற்றார். இவர் 1957 சட்ட எரிப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டுச் சிறை சென்றவர். இவருடைய நினைவேந்தல் நிகழ்ச்சி 25-1-2002 அன்று மயிலாடு துறையில் நடைபெற்றது. அன்னா ருடைய படத்தை திறந்து வைத்து திராவிடக் கழகத் தலைவர் கி. வீரமணி உரையாற்றினார்.

## பாப்பா அம்மையார் மறைவு

பெரம்பலூர் மாவட்டம் கிழுமத்தூர் சே. செல்லமுத்து அவர்களின் துணைவியார் பாப்பா அம்மையார், தம் 85 ஆம் வயதில், 30-12-2001 ஞாயிறு அன்று மறைவுற்றார். அன்னாரின் நீத்தார் நினைவு நாள் 6-1-2002 ஞாயிறு அன்று நடைபெற்றது. வே. ஆனைமுத்துவின் தமையனாரின் துணைவி இவர். அன்னாரின் குடும்பத்துக்கு மா.பெ.பொ.க ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறது.

மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக வெளியிடுபவர், ஆசிரியர்: வே.ஆனைமுத்து, 19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை - 5. அச்சுக்கோப்பு: 'நம் பிராசஸ்', சென்னை-18. அச்சிட்டோர்: பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம், சென்னை-5. தொலைபேசி: 852 28 62

படிப்பகம்

www.padippakam.com

**சமதர்மக் காவலர்கள்**


மார்க்ஸ்


லெனின்


சிங்காரவேலர்


பெரியார்

**சமூகநீதிக் காவலர்கள்**


புலே


பெரியார்


அம்பேத்கர்


லோகியா

இந்தியாவில் பொதுவுடைமை மலர மார்க்சிய - பெரியாரிய நெறியில் தேசிய இனவழிப்பட்ட சம உரிமை உடைய சமதர்மக் குடிஅரசுகள் ஒருங்கிணைந்த உண்மையான கூட்டாட்சி அமைய ஆவன செய்தல்

**கொள்கை முழக்கம்**

உலகத் தொழிலாளர்களே
ஒன்று சேருங்கள்
- மார்க்ஸ்- எங்கெல்ஸ்

ஒடுக்கப்பட்ட தேசிய இன மக்களே
ஒன்று சேருங்கள்!
- லெனின்

ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே
ஒன்று சேருங்கள்!
- பெரியார்

ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**

**ஆசிரியர் குழு**

வே.ஆனைமுத்து
சங்கமித்ரா
க.முகிலன்
து.தில்லைவனம்
தமிழேந்தி
க.நாகராசன்
வாலாசா வல்லவன்
மங்கலம் அரசன்

*இதழ் வடிவமைப்பு:*
**கோ. அருண்மொழி**

சென்னை பிப்பிரவரி 2001

விலை ரூ.7/-

# சிந்தனையாளன்

சுவடி : 24 | மாத இதழ் | ஏடு:6

## பாரதிய ஜனதா ஆதிக்க ஆட்சி பலப்படுவது எதனால்? யாரால்?

இந்தியாவின் முதலாவது தலைமை அமைச்சர் பண்டித ஜவகர்லால் நேரு 1946 முதல் 1964 வரை தொடர்ந்து பதவி வகித்தார். தான் ஒரு பண்டித வகுப்புப் பார்ப்பனர் என்கிற உணர்வு எப்போதும் அவருக்கு இருந்தது.

என்றாலும் அவர் இங்கிலாந்தில் படித்த போது பெற்ற உலகப் பார்வை, இந்திய விடுதலை உணர்ச்சி காரணமாகவும்; பிரிட்டிஷ் தொழிலாளர்களின் ஈனநிலை — இந்தியாவில் தொழிலாளர்களின் ஈன நிலை இவற்றைக் கண்டும் ஏழைகளின்பால் தனி அக்கறை கொண்டார். 1930களின் தொடக்கத்தில் தம் தந்தையுடன் சோவியத்துக்குச் சென்று வந்ததால் சமதர்மச் சிந்தனைக்கும் ஆட்பட்டிருந்தார். மதவெறிக்கு இடம் தராமல் இருந்திட முயன்றார்.

தம் ஆட்சிக் காலத்தில் பக்ரா-நங்கல் போன்ற பெரிய பாசனத் திட்டங்களை உருவாக்கினார். வாழ்நாள் காப்பீட்டுக் கழகத்தை அரசுப் பொதுத்துறை நிறுவனமாக ஆக்கி, பிற்காலத்தில் பொதுத்துறையில் பல நிறுவனங்களும் வர வழிவகுத்தார்.

ஆயினும் 1955 முதல் காங்கிரஸ் கட்சியின் ஆதிக்கத்தை வளர்ப்பதிலும், காங்கிரஸ் கட்சியில் தன் மகள் இந்திராகாந்தி செல்வாக்குப் பெறுவதிலும் அக்கறை கொண்டு, நேரு குடும்ப ஆட்சி தொடர்ந்து வர வேண்டும் என்கிற உணர்வு வேரூன்றிட வழி அமைத்தார்.

பல மாகாணங்களிலும் பார்ப்பனர்களும் மேல் சாதியினரும் முதலமைச்சர்களாக இருப்பதுபற்றிக் கவலைப்படாதவராக, பிற்படுத்தப்பட்டோருக்குக் கல்வியிலும் வேலையிலும் தனி இட ஒதுக்கீடு தரக்கூடாது (1961) என்ற கொள்கையுள்ளவராக இருந்தார். திட்டமிட்டு இந்தியாவில் எழுத்தறிவு இன்மையை அடியோடு ஒழிக்க வாய்ப்பிருந்தும் - நிலமற்றவர்களுக்கு நிலம் தர வாய்ப்பிருந்தும் அவர்

படிப்பகம்

www.padippakam.com



அவற்றைச் செய்யாமலே, தலைமை அமைச்சராகச் சாவதிலேயே குறியாக இருந்தார்.

நேருவின் மறைவை அடுத்துத் தலைமை அமைச்சரான - காயஸ்தரான லால் பகதூர் சாஸ்திரி இரண்டே ஆண்டுகளில் அய்யத்திற்கிடமான நிலையில் சோவியத்தில் தாஷ்கண்டில் மறைந்தார். இந்தியக் கைத்தறி நெசவாளர்களுக்கு அவர் செய்த நன்மை அளவிடற்கு அரியது.

சாஸ்திரியை அடுத்து வந்த இந்திராகாந்தி, 1971இல் வங்கிகளைப் நாட்டுடைமை ஆக்கினார். ஆனால் 1969 ஆகஸ்டில் காங்கிரசில் பேராதிக்கம் பெற்ற அவர் மானிட உரிமைக் கோட்பாடுகளுக்கு எதிரானவராக 1975க்குள் உருவானார். அரசியல் கொலைகள், வங் மோசடிகள், எதிர்க்கட்சிகளின் ஆட்சிகள் கலைப்பு என்கிற அடாவடித்தனமான அரசியலுக்கு எடுத்துக் காட்டானவராக விளங்கினார்.

1980க்குப் பிறகு தன்னை ஒரு காஷ்மீர் பண்டித வகுப்புப் பார்ப்பனத்தி எனக்கூறிக் கொண்டு, பணமுதலைகளின் கையாளாகி, இந்தியாவை அல்லோலகல்லோலப்படுத்தினார். பார்ப்பன மேல்மட்ட அதிகாரிகளின் ஆதரவுடன், பஞ்சாபியரை அகாலிக் கட்சியின் பிடியிலிருந்து விடுவித்துக் காங்கிரசின் பிடிக்குக் கொண்டு வர அநியாயமாக முயன்று, அந்த முயற்சியிலேயே அவர் பலியானார்.

அன்னையின் படுகொலையின் அனுதாப அலையில் தலைமை அமைச்சரான இராஜீவ்காந்தி — அயோத்தி சிக்கல், இந்து - முஸ்லிம் சிக்கல், ஈழ விடுதலைச் சிக்கல், இட ஒதுக்கீடு சிக்கல் இவற்றில் கற்றுக்குட்டித்தனமாக நடந்து இளம் பருவத்திலேயே படுகொலைக்கு ஆளானார்.

இந்திராகாந்தியின் தோல்வியை அடுத்து, 1977இல் தலைமை அமைச்சரான மொரார்ஜி தேசாய் சில தேசிய காங்கிரசார் — லோகியா சோசலிசவாதிகள் — பாரதிய ஜன சங்கத்தினர், திராவிடக் கட்சியினர் ஆகிய பல கொள்கைப் பிரிவினருக்கும் இந்திய அமைச்சரவையில் இடம் அளித்துப் பதவிப் பவிசு, பதவிச் சுகம், பதவி மூலம் கொள்ளையடிக்க வாய்ப்பு ஆகிய உணர்வுகள் பல கட்சியினரிடமும் நிலை கொண்டிட இடந்தந்தார்.

1977-79இல் அமைச்சர்களாக ஆன அடல் பிகாரி வாஜ்பேயியும், ஜார்ஜ் பெர்னாண்டசும்; அதன்பிறகு அமைச்சரான இராம் விலாஸ் பஸ்வானும் கடந்த 20 ஆண்டுகளாக, காங்கிரஸ் அல்லாத எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் பதவிகளைப் பெற்றுக் கொண்டு பவிசுகளை அனுபவிப்பதில் ஈடு இணையற்றவர் களாக உள்ளனர்; திராவிடக் கட்சியினரும் அவ்வாறே உள்ளனர் என்பதும் உண்மை.

இந்தப் பின்னணியில்தான், 1984 — 1986இல் மிகச் சில நாடாளுமன்ற உறுப்பினர்களையே கொண்டிருந்த பாரதிய சனதாக் கட்சி, லோகியா சோசலிசவாதிகள் - அம்பேத்கரிய வாதிகள் - திராவிடக் கட்சியினர் - மற்ற உதிரிக் கட்சியினர் இவர்களின் அடிமைத், தன்னலப் புத்தியை ஆதரவாகக் கொண்டு, 2000 இல் 185 நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெறுகிற அளவுக்குப் பலம் பெற்று விட்டது. தொடக்கத்தில் தெலுங்கு தேசம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், பா.ம.க.; பின்னர் தெலுங்கு தேசம், திராவிட முன்னேற்றக் கழகம், ம.தி.மு.க, பாட்டாளி மக்கள் கட்சி என்கிற தெலுங்கர் — தமிழர் உள்ளடங்கிய பார்ப்பனரல்லாதார் கட்சிகளையும், லோக் தளக் கட்சி, சமதாக் கட்சி என்னும் லோகியா சோசலிச வாதக் கட்சிகளையும்; ஒரு கட்டத்தில் அம்பேத்கரியக் கட்சியான பகுஜன் சமாஜக் கட்சியையும் இணைத்துக் கொண்டு — இவ்வளவு கட்சிகளையும் பதவி ஆசை, பவிசு ஆசை, பணத்து ஆசைக்கு ஆட்படுத்தி விட்டு — சந்தடிச் சாக்கில் கந்தகப் பொடி தூவி ஊரறிய ஊர்வலம் வருவோரைப் போல, இன்று, பாரதிய சனதாக் கட்சி தட்டியோ, இடித்தோ கேட்பாரின்றித் தானடித்த மூப்பாக ஆட்சி செய்கிறது. இந்தியாவில் இராம இராச்சியத்தை — பார்ப்பன மனுநீதி ஆட்சியை முழுவீச்சில் நிறுவி விட எல்லாவற்றையும் செய்யத் துணிந்து செயல்படுகிறது.

உடுக்கையை இழந்தவனைப் போல எல்லாக் கொள்கையையும் விட்டு விட்டுப் பதவிக்குப் போய்த் — தங்களுக்குள் சொந்த — கொள்ளைப் பங்கு காரணமாகப் பகைமையை மட்டுமே வளர்த்துக் கொண்டு, தில்லிக்கு நல்ல அடிமைகளாகி விட்ட தமிழகத் திராவிட மற்றும் சாதிக் கட்சிகளின் முதலாவது பலம்; தெலுங்கு சுயமரியாதையைக் காத்திடவே தோன்றியதாகக் கூறும் மானங்கெட்ட தெலுங்கு தேசக் கட்சியினரின் இரண்டாவது பலம்; தங்களை அம்பேத்கரின் மறுபிறவிகளாக ஆணவமாகக் கருதிக் கொண்டு, இன்று சமார் சாதி — பாசி சாதிப் பிரிவுகளின் தலைவர்களாக நின்று பிளவுபட்டு மோதிக் கொள்ளுகிற பகுஜன் சமாஜ் கட்சி — லோக் ஜன்சக்தி கட்சியினரின் மூன்றாவது பலம்; யாதவ வகுப்பினரின் மூலபலம், உ.பி இஸ்லாமியரின் ஆதரவு இவற்றை மட்டுமே

படிப்பகம்

www.padippakam.com



பெரிதாகக் கொண்டு, சமார், பாசி எனும் தாழ்த்தப்பட்ட வகுப்பினரைப் புறந்தள்ளி விட்டு உ.பி. ஆட்சியைக் கைப்பற்றி பாரதிய சனதா, காங்கிரஸ் இரண்டுக்கும் எதிராக நின்று ஆட்சி செய்ய விரும்பும் சமாஜ வாதிக் கட்சியினரின் எதிர்மறையான நான்காவது பலம்; யாதவ வகுப்பினர்க்குச் சாதி வெறியை மட்டும் ஊட்டி விட்டு, எல்லா ஏழை மக்களையும் இருட்டிலும் வறுமையிலும் அறியாமையிலும் தள்ளிவிட்டு பீகாரைப் பாழாக்கி வரும் லல்லு பிரசாத் என்கிற கோமாளி அரசியல்வாதியின் எதிர்மறையான அய்ந்தாவது பலம்; லல்லுவுக்கு எதிராக நின்று ஒடுக்கப்பட்டோரைப் பிரித்து, நேரிடையாக பா.ச.க-வுக்கு ஆதரவு தேடும் சமதாக் கட்சியின் ஆறாவது பலம்; இப்போது 2000இல் தேர்ந்தெடுக்கப்பட்டதனால் கிடைத்த நாடாளுமன்றப் பதவியை 2005 வரையில் இழந்து விடக் கூடாது என்பதில் அல்லும் பகலும் கண்ணும் கருத்துமாக இருக்கிற 542 நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவி ஆசை, பண ஆசை என்கிற ஏழாவது உயிரான பலம்; இவை எல்லாவற்றுக்கும் மேலாக இராமாயணமும் பாரதமும் கற்றுத் தந்த — ''மானம் ஈனம் பார்க்காமல் தம் இனத்தின் வாழ்க்கை நலன்களைப் பெருக்கிக் காத்துக் கொள்ளுவதில் கருத்தூன்றி நிற்க வேண்டும்'' என்கிற ஆரியக் கொள்கையை அணுவளவும் பிசகாமல் பின்பற்றுகிற வாஜ்பேயியைத் தலைமை அமைச்சராகப் பெற்றிருக்கிற பலம்; மற்றும் பாரதிய சனதா, விசுவ இந்து பரிசத் — பஜ்ரங்தள் — சாதுக்கள் சங்கம் — ராஷ்ட்ரீய சுயம் சேவச் சங்கம் முதலானவை கொள்கை வரையறைக்குள் உறுதியாக நின்று, 'காற்றுள்ள போதே நூற்றிக் கொள்ள வேண்டும்' என்ற உள்ள உறுதியோடு செயல்படுகிற பார்ப்பன மத ஆட்சி வெறிக்கும்பலின் அசைக்க முடியாத கொள்கைப் பற்று பலம் — ஆக இத்துணைப் பலங்களும் இன்றைய பாரதிய சனதா ஆட்சி நீட்டிப்புக்கு உறுதுணையாக, தாங்கும் தூண்களாக, தூக்கிப் பிடிக்கும் படைகளாக உள்ளன.

சொந்தக் கொள்கையில் பாரதிய சனதாவுக்கு உள்ள உண்மையான நாட்டமும் ஊட்டமும்; கொள்கைச் சோரம்போன பதவிப் பித்துக் கட்சிகளின் அடிமைத்தன — கொள்ளையடிக்கிற கூட்டணி உறுப்புக் கட்சிகளின் புத்தியும்; பார்ப்பன மனுவாதிக்கு எதிரான கோலம் பூணுவது போல் காட்டிப், பிரிந்தே கிடந்து — எதிர்மறையாக நின்று, அதனால் எதிரிக்கு ஆதரவு சேர இடம் தந்துவிட்ட ஒடுக்கப்பட்ட வகுப்புத் தலைவர்களின் ஈனப் போக்குமே இன்றைய பாரதிய சனதாவுக்கு உள்ள மிகக் கெட்டியான பலம் ஆகும்.

சொந்தக் கொள்கை பலம் இன்றி, நேருவின் குடும்பப் பாரம்பரியப் பெருமைப் பலத்தை மட்டுமே ஒரு கருவியாகக் கொண்டு ஆட்சிக்கு வர த் துடிக்கும் காங்கிரசுக் கட்சியின் சிந்தனையும் செயல்பாடும் பாரதிய சனதாவைப் போன்றே மிகத் தீமையானவை.

இந்த நிலைமை 1990 இலேயே துலாம்பரமாகத் தோன்றிவிட்டது. இதற்கிடையிலும் காங்கிரசு ஆட்சிக்கு வர நேர்ந்தது, இராஜீவின் படுகொலைக் குக் கிடைத்த உடனடிப் பலனே ஆகும்; அது காங்கிரசின் கொள்கைக்குக் கிடைத்த வெற்றி ஆகாது.

1990இல் பிற்படுத்தப்பட்டோர் பெற்ற இட ஒதுக்கீட்டை எதிர்த்து வட இந்தியாவில் இராம ரதம் செலுத்தி, இராமர் பேரில் அளவிறந்த பக்தியை வளர்த்து, சோறு - வேலை - மின்சாரம் - வைத்தியம் - குடிநீர் இல்லாமையைக் கூட மறந்து விட்டு இராமன் பெருமையைப் பேசுகிறவர்களாகப் பாமரரான வெகு மக்களை இந்துமத வெறியர்களாகவும் - இஸ்லாமியரை வெறுப்பவர்களாகவும் உருவாக்கு வதில் பாரதிய சனதா வெற்றி மேல் வெற்றியைக் குவித்து வருகிறது.

இராமாயணத்தின் சாரம் இந்தியாவிலுள்ள எல்லா மக்களுக்கும் குறைந்தது ஓராயிரம் ஆண்டாகத் தெரியும். இராமன் கடவுள் அவதாரம் என்பதும் மக்களின் நம்பிக்கை. மொழிவழியான பண்பாடு தனித்து வளரவும் வெகு மக்களுக்கு மொழி வழித் தேசிய உணர்வு மலர்வும் இது ஒரு பெரிய-வலிமையான தடையாகி விட்டது.

இவை எல்லாவற்றுக்கும் மேலான கேடு உள்ளது, இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் பார்ப்பனியச் சிந்தனை ஆதிக்கப் போக்கு ஆகும்.

சாதி அமைப்பு, மூட நம்பிக்கை இவை வெறும் மேல் கட்டுமானங்கள் என்றே 1980 வரை இவர்கள் சாதனையாகக் கூறி வந்தனர். 1984க்குப் பிறகுதான், சாதி அடிப்படையிலான இட ஒதுக்கீட்டை இந்தியப் பொதுவுடைமைக் கட்சி ஆதரித்தது. கேரளத்தில், வேலையில், சாதி அடிப்படையில் - உள் சாதி வாரியாக 1956 முதலே இடஒதுக்கீடு நடப்பில் இருப்பதை அறிந்து கொண்டிருந்தும், 1980 இல், ''வங்காளத்தில் பிற்படுத்தப்பட்டோர் என்ற ஒரு பிரிவே கிடையாது'' என வங்க முதல்வர் ஜோதிபாசு மடத்தனமாகக் கூறினார். 1990இல், ''இராம இரதம்'' புறப்பட்டு, பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீடு தருவதைப் பார்ப்பனர்கள் எதிர்த்த பிறகுதான் - இடஒதுக்கீட்டில் வெகு மக்களுக்கு நன்மை

படிப்பகம்

www.padippakam.com



இருக்கிறது என்கிற சாதாரண அறிவு, இந்திய மார்க்சிஸ்ட் கட்சிக்கு வந்தது. ஆயினும் இன்னமும் சாதி அடிப்படையில் ஒதுக்கீடு கூடாது - பொருளாதார அடிப்படையில்தான் தர வேண்டும் என்றே இக்கட்சி கூறுகிறது.

வரலாற்றியல் பொருள் முதல்வாதக் கண்ணோட்டத்துடன் இந்தியச் சமூகத்தின் பொருளாதார அமைப்பை ஆய்ந்திடும் எவரும் இந்தியப் பொதுவுடைமைக்காரர்களின் இப்போக்குகள் தவறானவை என்பதை அறிவர்.

வெகு மக்களை வழி நடத்திட, இந்திய தேசியக் காங்கிரசுக்குச் சரியான மாற்றுக் கட்சியாக - அனைத்திந்திய அளவில் வலிமை மிக்க ஒரு கட்சியாக வளர்ந்திருக்க வேண்டியது பொதுவுடைமைக் கட்சியே. இன்று இவர்கள் திராவிடக் கட்சிகளை விடக் கேவலமாகக், கூட்டணிகளைத் தேடி - அவற்றின் நிழலில் காலந்தள்ள முயற்சிப்பது, இவர்கள் செய்த வரலாற்றுப் பிழையின் விளைவே ஆகும். நிற்க.

இன்று உள்ள இந்த நிலைமைக்கு உண்மையில் உரம் சேர்ப்பவராகவும் அடித்தளமாகவும் விளங்கிச் செயல்படுகிறவர் இன்றையத் தலைமை அமைச்சர் வாஜ்பேயியே ஆவார்.

இந்தியா கண்ட தலைமை அமைச்சர்களுள் இந்திரா காந்தியை விட, இராஜீவ் காந்தியை விட, நரசிம்மராவை விடக் கல்மனமும், இந்து மதக் கொள்கையில் உறுதி என்கிற திருட்டுப் புத்தியும், வஞ்சகமான பேச்சும், திறமையான நடப்பும் கொண்டவராகத் திகழ்பவர் வாஜ்பேயி.

1. 6-12-1992இல் பாபர் மசூதி இடிக்கப்பட்ட போது மகிழ்ச்சியில் திளைத்தவர்கள் — வாஜ்பேயி, லால் கிஷன் அத்வானி, இராம் மனோகர் ஜோஷி, கோவிந்தாச்சார்யா முதலான பார்ப்பனர்களும்; அசோக் சிங்கால், உமா பாரதி, விநாயக் கடியார் முதலான பார்ப்பனரின் அடிவருடிகளும் ஆவர்.

2. பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்திலேயே இராமருக்குக் குடிசைக் கோயில் அமைத்ததில் மகிழ்ச்சி கண்டவர்கள் — வாஜ்பேயி, அத்வானி, ஜோஷி, அசோக் சிங்கால், கடியார் முதலான ஆர்.எஸ்.எஸ், வி.எச்.பி, பஜ்ரங்தள் அமைப்பினர் ஆவர்.

3. அயோத்தியில் பாபர் மசூதி இருந்த அதே இடத்தில் 2002 இல் இராமர் கோயிலை — ஆயத்தக் கட்டுமானங்களைக் கொண்டு திடீரென அமைத்து விடத் திட்டமிட்டு இராஜஸ்தானிலும், குசராத்திலும் மண்டபங்களை வடிப்பதில் முழு நாட்டம் செலுத்தியவர்கள் மேலே சொல்லப்பட்டவர்கள்.

4. இராஜஸ்தானிலும், குசராத்திலும் ஆயத்தப் படுத்தப்பட்ட சிலைகளும், கட்டப்பட்ட மண்டபப் பகுதிகளும், தூண்களும் பட்டப் பகலில் நேரே அயோத்திக்குக் கொண்டு வரப்பட வழிகண்டவர்கள் இவர்களே.

5. 2001 திசம்பரிலும், 2002 சனவரியிலும் தில்லியில் தங்கிக் கொண்டு எல்லாக் கட்சி எம்.பிக்களையும், எல்லாக் கட்சிகளின் தலைவர்களையும் நேரில் கண்டு, அயோத்தியில் இராமர் கோயில் கட்டிட ஆதரவு திரட்டிட விசுவ இந்து பரிசத், சாதுக்கள் சங்கம் இவற்றுக்கு வழிவிட்டவர்கள் இவர்களே.



6. 128 உயரம், 268 அடி நீளம், 140 அடி அகலம் உள்ளதாக; 212 தூண்களின் மேல் நிற்கக் கூடியதாக இராமர் கோயிலை — 120 கோடி ரூபாய் செலவில் ஒரே நாளில் அடுக்கியும் கோத்தும் பூட்டியம் அமைத்துவிட ஏற்றதாக உருவாக்கப்பட, அயோத்தியில் 3.5 ஏக்கர் நிலத்தை கரசேவக் புரம் (திருப்பணி நகர்) என்ற பெயரில் ஒதுக்கிக் கொண்டு, 1990 முதல் 11 ஆண்டுகளாகக் கட்டுமானப் பணிகளுக்கு இடம் கொடுத்துப் பணியாற்றுபவர்கள் இவர்களே.


படிப்பகம்

www.padippakam.com



அயோத்தியில் மேற்படித் திருப்பணி நகரில் இன்று இராமர் கோவில் தூண்களுக்கு இறுதி வடிவம் தரப்பட்டு வருகிறது.

அத் திருப்பணிநகரில் நடைபெறும் கோயில் கட்டுமானப் பணிகளைக் கண்டுகளிக்க அன்றாடம் ஆயிரக்கணக்கான இராம பக்தர்கள் வந்து பார்வையிட்டுப் போக வழிவகுத்து விட்டவர்கள் இவர்களே.



7. இத்துடன் 208 கிலோ எடையுள்ள ''குழந்தை இராமர் பொம்மை''யை, 125 கிலோ எடையுள்ள பல்லக்கில் தூக்கிக் கொண்டு, 18-1-2002 அன்று ஜெய்ப்பூரிலிருந்து புறப்பட்டு, அயோத்திக்கு ஊர்வலமாகக் கொண்டு வரும் இராமர் பசனை ஊர்வலம் மூலம் — பக்தி வெறியை ஊறறிய ஊட்டிட வழி அமைத்தவர்கள் இவர்களே.



8. உத்தரப் பிரதேசத்தில் 2002 சனவரி 20-21 இல் தொடங்கி, தில்லியை சன்வரி 26 இல் அடைந்து, இராமர் கோயிலை உடனே நிறுவுவதன் முதன்மையை அரசுக்கு — வாஜ்பேயிக்கு உணர்த்துவதற்காக, சாதுக்களின் இராம பக்தி ஊர்வலம் செல்ல வழிவகை அமைத்தவர்களும் இவர்களே.

2002 பிப்ரவரியில் உத்தரப் பிரதேசத்தில் நடைபெறவுள்ள சட்ட மன்றத் தேர்தலில் இந்துக்களின் வாக்குகளை ஒரு முகமாகப் பெற்றிடவும் இது உதவும் என்கிற கள்ள எண்ணத்தின் கருத்தாவும் வாஜ்பேயியே.

இத்தனை அளவுக்கு இந்துமத — இராமாயண — இராமர் பக்திப் பரப்புரைகளும், கோயில் நிறுவனப் பணிகளும் தங்குத் தடையின்றி நடைபெற எல்லா உரிமைகளையும் வழங்கிடும் பாரதிய சனதா ஆட்சி மக்களுக்கு எதிரானதே; நெஞ்சார, மனமறிய இவற்றை ஊக்குவிக்கும் தலைமை அமைச்சர் வாஜ்பேயி 103 கோடி இந்திய மக்களின் எதிரியே; 20 கோடி இஸ்லாமிய — கிறித்துவ — பவுத்த — சமண மதத்தினரின் — மற்றும் பகுத்தறிவுக் கொள்கையினரின் வைரியே.

I. இன்றையத் தலைமை அமைச்சர் வாஜ்பேயி, தான் ஓர் உண்மையான இராம பக்தத் திருடர் என்பதை உறுதிப்படுத்த — கேரளத்தில், குமரகம் விடுதியில், உடல்நலம் காத்திட அவர் ஓய்வெடுத்துக் கொண்ட போது, சென்ற ஆண்டில், 'அதிரடிச் சிந்தனைகள்' I, II (MUSINGS I & II) என்னும் பேரால், சுதீந்திர குல்கர்னி எழுதித்தந்து — வாஜ்பேயி வெளியிட்ட ஒரு கட்டுரையே போதிய சான்றாகும்.

''இராமர் கோயில் என்பது தேசத்தின் — தேசியத்தின் உணர்வுத் துடிப்பு'' என்பதே அக்கட்டுரையின் மூலம் அவர் உலகுக்கு உணர்த்திய உண்மை. இது கடைந்தெடுத்த அயோக்கியத் தனமானதாகும்.

II. முறையான வரலாறு எழுதப்படாத இந்தியாவில் அயல் நாட்டுப் பயணிகள், கிறித்துவ சமய அறிஞர்கள், அய்ரோப்பிய வரலாற்று அறிஞர்கள், இந்தியப் பார்ப்பன மற்றும் பார்ப்பனரல்லாத வரலாற்று ஆய்வாளர்கள் — வரலாற்று ஆய்வு, தொல்லியல் ஆய்வு, மொழியாராய்ச்சி முதலான பல்துறைச் சான்றுகளுடன் கடந்த 300 ஆண்டுகளில் எழுதித் தந்த வரலாற்றை

படிப்பகம்

www.padippakam.com



அடியோடு திரித்து, ''ஆரிய நாடே இந்தியா' என்னும் கோட்பாட்டை நிலைநாட்டிட ஏற்றபடி இந்திய வரலாற்றையே அடாவடியாக — ஆணவமாக மாற்றினார் மனோகர் ஜோஷி.

அப்படி அவர் மாற்றியதை முழுவீச்சில் ஆதரிக்கும் தன்மையில், ''வரலாற்றில் பிழை இருந்தால் திருத்த வேண்டியது தானே'' என்று ஆணித்தரமாகக் கூறித், தன் ஆரியக் கொள்கைச் சார்பை அறிவுக்குப் புறம்பாக அறிவித்த கேடு கெட்டவர் வாஜ்பேயி.

III. அத்துடன், இராமர் கோயில் சிக்கலுக்கு 2002 மார்ச்சு 12க்குள் ஒரு நல்ல தீர்வு காணப்படும் என்ற வர்க்குறுதியை சாமியார்கள் கூட்டத்துக்கு அளித்துவிட்டு, அதற்கு இடையில் இராமர் கோயிலைக் கட்டிட — இராம பக்தி வெறியை ஊட்டிட — இந்து மத வெறியை வளர்த்திட மேலே கண்ட எல்லாம் நடக்க இடந் தந்துவிட்ட திருடரும் வாஜ்பேயியே.

இந்த அளவு மேலான நடிப்புத் திறன் படைத்த திருடருக்கு நல்ல துணையாக — எதிர்மறைச் செயல்பாடுகளின் மூலமும்; நேரடியாகத் துணை நிற்பதன் மூலம் தேசிய மக்கள் நாயகக் கூட்டணி என்கிற போர்வையில் கூட்டணிக் கட்சிகளாகச் செயல்படுவதன் மூலமும், பாரதிய சனதாக் கட்சித் தலைமையிலான ஆட்சி 2005 வரை தொடர்ந்திட இடம் தருவது, கொள்ளிக் கட்டையை எடுத்துத் தலையைச் சொரிந்து கொண்ட கேடு கெட்ட மூடரின் செயலுக்கே ஒப்பாகும்.

இந்த மூடச் செயலுக்கு வெகு மக்களை ஆளாக்கும் எல்லாக் கேடர்களையும் மக்களுக்குச் சரியாக அடையாளம் காட்டுவோம்; மக்களிடமிருந்து இவர்களை அகற்றுவோம் — வாரீர்!

1-2-2002 வே. ஆனைமுத்து

---

# எழுச்சியுடன் நடந்த ''பாவலரேறு தமிழ்க்களம்'' தொடக்கவிழா

சென்னை மேடவாக்கத்தில் பாவலரேறு தமிழ்க்களம் தி.பி. 2033 தை 6ஆம் நாள் (19.1.2002) மாலை 3 மணிக்குத் தொடங்கப்பட்டது. குழந்தை ஈகவ்ரசன் தமிழ் வாழ்த்துப் பாடினார். நிகழ்ச்சிக்குத் தாமரை பெருஞ்சித்திரனார் தலைமையேற்றார். வீ. இறையழகன் வரவேற்புரையாற்றினார். பா. அருளி தொடக்கவுரையாற்றினார். கோ. நிலவழகனார் 'பாவலரேறு தமிழ்க்களம்' திறந்து வைத்தார். கா.பொ. இரத்தினம் 'தாமரையம்மையார் அரங்கைத்' திறந்து வைத்தார். 'தென்மொழி நூலகத்தை' வீ.ப.கா. சொல்லழகனார் திறந்து வைத்தார். அருகோபாலன் பாவலரேறு தமிழ்க்களம் குறுநூல் வெளியிட, அதனை சுப.வீரபாண்டியன் பெற்றுக் கொண்டார். தென்மொழி அன்பர்கள் 91 பேர் பாராட்டப்பட்டனர். மா. பூங்குன்றன் பாராட்டுப் பெறுவோரைக் குறித்து விளக்கினார். தி.மு.க. தலைவர் மு. கருணாநிதியின் வாழ்த்து மடலை இறைக்குருவனார் படித்தார். முன்னாள் மேயர் சா. கணேசன், பழ.நெடுமாறன், இரா. திருமாவளவன், பெ. மணியரசன், தியாகு, இரா. பாவாணன், அரிமாவளவன், கோ. பாவேந்தன், குருசாமி சித்தர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இளவேனில் கழாரம்பன் நன்றியுரையாற்றினார். முன்னதாகச் சுரும்பியன் இசைக்குழுவின் இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

பாவாணர் நூற்றாண்டு விழா தி.பி. 2033, தை 7ஆம் நாள் (20.1.2002) முற்பகலில் தேன்மொழி அருளியின் தமிழ் வாழ்த்துடன் தொடங்கியது. புலவர் இறைக்குருவனார் தலைமை தாங்கினார். வேலூர் குமர. தன்னொளியன் வரவேற்புரையாற்றினார். பொன்னவைக்கோ பாவாணர் நூற்றாண்டு மலரை வெளியிட்டார். பூ.இரா. முத்துக்கிருட்டிணன், கோ. இளவழகன், க. அரசு மலரைப் பெற்றுக் கொண்டனர். 'மொழிஞாயிறு பாவாணர்' என்ற நூலை இளமுருகன் (மறைமலையடிகள் மன்றம், புஞ்சை புளியம்பட்டி) வெளியிட்டார். கு.வள்ளியப்பன், தென்னவன் நூலைப் பெற்றுக் கொண்டனர். புதுவை. இரா. திருமுருகன் பாவாணர் கண்காட்சியைத் திறந்து வைத்தார். 'பாவாணர் பேருரைகள்' என்ற நூலை கோ. இளவழகன் வெளியிட, சிங்கப்பூர் பாத்தேறல் இளமாறன், பதினாறு கவனகர் கனகசுப்புரத்தினம் பெற்றுக் கொண்டனர். பாவரங்கில் பாவாணர் ஒரு தமிழியக்கம், ஒரு பாவாணர், ஒரு படைப்பாளி, ஓர் இலக்கணம், ஒரு வேர்ச்சொல், ஓர் ஆய்வாளர், ஒரு மரபுரை, ஒரு நூலாசிரியர், ஒரு குழந்தை, ஒரு பேராசிரியர் என்ற தலைப்புகளில் — முறையே தரங்கை பன்னீர்ச்செல்வம், கருவூர்ப்பாரி, கடலூர் ப.மணிமாறன், பரணன், நாவை சிவம், மு.மகிழரசன், இளஞ்சித்திரன், மு.வலவன், த. அன்பழகன், ப. எழில்வாணன் ஆகியோர் பாடினர்.

பிற்பகலில், உரையரங்கத்திற்கு, இரா. முத்துக்குமாரசாமி தலைமையேற்றார். பாவாணரின் - பாவாண்மை, மொழியாய்வு, இலக்கண ஆய்வு, தமிழர் வரலாறு, தமிழர் பண்பாடு, பாவாணர் கண்ட குமரிக் கண்ட ஆய்வு ஆகிய தலைப்புகளில் — முறையே இரா. இளவரசு, கு. அரசேந்திரன், சரவணத்தமிழன், அரணமுறுவல், அன்புவாணன், மா. பூங்குன்றன் ஆகியோர் உரையாற்றினர். பிறகு பாராட்டு நிகழ்ச்சியில் முத்தமிழ்மணி அறிமுகவுரையாற்றினார். கோ. நிலவழகனார், சேந்த மாங்குடியார், வி.பொ. பழனிவேலனார், இரா. முத்துக்குமாரசாமி, அருளாளன், பழ. குமரப்பனார், தமிழம் பன்னீர்ச்செல்வம், கா. இளமுருகன், த.ச. தமிழன், முத்துக்கிருட்டிணன், செ. சித்தார்த்தன், கதிர் தமிழ்வாணன், அன்புவாணன், ப. துரையரசன், நா. இளமாறன், தே. மணி, சி.பூ. மணி ஆகியோர் பாராட்டப் பெற்றனர். இந்திய அரசு நிதித்துறை இணை அமைச்சர் செஞ்சி ந. இராமச்சந்திரன் நிறைவுரையாற்றினார். தமிழ் முகிலன் நன்றியுரையாற்றினார்.

செய்தி: கலசம்

''மக்கள் நெஞ்சம்'' வார இதழ்
ஆசிரியர். கோ.ரா.சுந்தரகாந்தம், அறை எண்.22,
இரண்டாவது தளம், எண்.829 அண்ணா சாலை,
சென்னை - 600 002. தனி இதழ் ரூ.2 /-
ஆண்டுக் கட்டணம் ரூ.100.00

படிப்பகம்

www.padippakam.com





# இராமாயணம்

## பரதன், சத்ருக்கனன் முதலானோரைப் பற்றி...

-ஈ.வெ. இராமசாமி

இனி பரதன், சத்துருக்கனன், கோசலை, சுமத்திரை, கைகேயி, சுமந்திரன், வசிஷ்டர், அனுமன், வாலி, சுக்ரீவன், அங்கதன், விபீஷணன், இராவணன் ஆகியவர்களின் சேதிகளைச் சுருக்கமாகக் கவனிப்போம்.

பரதன்: பரதனிடத்தில் எவ்விதப் பெருங்குணமும் இல்லை.

1. பாட்டன் வீட்டில் 10 வருஷ காலம் விளையாட்டுப் பிள்ளையாய் இருந்து கொண்டான்.

2. கூட்டிவர ஆள் அனுப்பப்பட்ட பிறகே அயோத்திக்கு வருகிறான். தாய், தந்தை, வீடு ஆகியவைகளைப் பற்றிக் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை.

3. பாட்டன் வீட்டிலிருந்து வந்தவுடன், இராமன் காட்டுக்கு அனுப்பப்பட்டான் என்று கேள்விப் பட்டதும், 'இராமன் எந்தப் பெண்ணையாவது கற்பழித்து விட்டானா?' என்று கேட்கிறான்.

4. தனக்கு நியாயமான முறையில் கிடைக்க வேண்டிய இராஜ்யத்துக்காக எவ்வளவோ பாடுபட்டு இராஜ்யம் தேடிவைத்த தன் தாயாரை, விஷயம் தெரிந்து கொள்ளாமல் மடத்தனமாக, 'சண்டாளி, பாவி, தீயவளே, தகாத ஒழுக்கமுள்ளவளே, பேயே, நீ கெட்ட நடத்தை உள்ளவள்; நீ செத்துப் போ! இராஜ்யத்தை விட்டு ஓடிப் போ, உன் வயிற்றில் பிறந்தேனே!' என்று முட்டாள் தனமாகவும், அயோக்கியத்தனமாகவும் பேசிக் கடிந்துகொண்டு மிகக் கேவலமாக அவளை நடத்துகிறான்.

5. தன் தந்தையைக் 'கொடியவன்' என்று சொல்கிறான்.

6. இராமனிடம் காட்டில் பேசும்போது, 'அந்தப்புரப் பெண்கள் களிக்கும்படி முடி சூட்டிக்கொள்' என்கிறான்.

7. பரதனுக்கும் பல மனைவிகள் இருந்திருக் கிறார்கள்.

சத்துருக்கனன்: இவன் மகா மூடன்.

1. தனது சிற்றன்னையாகிய கைகேயியை வைகிறான்.

2. உண்மையை ஆதிமுதல் தெரிந்து தனது எஜமானியாகிய கைகேயிக்கு நியாயம் செய்ய வேண்டும் என்று பாடுபட்ட மந்தரையைக் கீழே தள்ளி, கால்கள் முறியும்படி அடித்துக் கொடுமை செய்கிறான்.

(குறிப்பு: தகப்பனையும் தாயையும் இவ்வளவு இழிவாய்ப் பேசிக் கேவலப்படுத்திய பரத சத்துருக்கனன்கள், தமையனிடத்தில் மாத்திரம் இவ்வளவு பக்தி காட்டியிருப்பது பொருத்தமற்ற தாகும்.)

கோசலை: கோசலை ஒரு கீழ்த்தரக் குடும்பத்துச் சக்களத்தி போலவே நடந்து கொண்டிருக்கிறாள்.

1. எப்படியாவது தன் மகனுக்குப் பட்டம் கிடைக்க வேண்டுமே என்கின்ற ஆத்திரம் சதா இருந்து வந்தது.

2. கைகேயி மீது பொறாமையும் துவேஷமும் இருந்து கொண்டே இருக்கிறது.

3. 'நான் கிழவி ஆகிவிட்டேனே; என் சரீரம் தளர்ந்துவிட்டதே; அரசர் என்மீது பிரியமாய் இருக்க மாட்டாரே!' என்று துக்கப்படுகிறாள்.

4. கணவனை மிகக் கேவலமாகவும் அலட்சிய மாகவும் பேசியிருக்கிறாள்.

சுமித்திரை : சுமித்திரை ஒரு அநாமதேயமாகவே இருந்திருக்கிறாள்.

1. இவளுக்குத் தன் மகனுக்குப் பட்டம் கிடைக்காது என்பது தெரிந்ததால் — இராமனுக்கு நாடு கிடைக்க வேண்டுமென்று ஆசை அதிகம்.

2. 'இராமன் 14 வருடங்கள் பொறுத்து நாட்டுக்கு வந்து ஒரு நொடிப்பொழுதில் பரதனை வென்று இராஜ்யத்தைப் பிடுங்கிக் கொள்வான், கவலைப் படாதே' என்று கோசலைக்குச் சொல்லுகிறாள். ஆகவே, பரதனை மோசம் செய்ய வேண்டுமென்கிற கெட்ட எண்ணம் இருவருக்கும் இருந்திருக்கிறது என்பது இதனால் விளங்குகிறது.

கைகேயி: 1. வீரமுடையவள். அழகுள்ளவள்; பட்டத்து அரசியாய் இருந்தவள்.

2. இரண்டு தடவை புருஷனின் உயிரைக் காத்தவள்.

3. புருஷன் உயிரைக் காத்தவளாதலாலும், தசரதன் தன் கலியாணத்தின்போதே நாட்டைக் கைகேயிக்குக் கொடுத்துவிட்டதாலும் ஆகிய இரண்டு காரணங்களாலும் நாடு கைகேயிக்குச் சொந்தமாகி இருக்கிறது.

4. அப்படி இருந்தும் பரதன், 'நாட்டை இராமனுக்குக் கொடுத்து விடுகிறேன் - கொடுத்து விட்டேன்' என்று சொன்ன போதெல்லாம் கைகேயி சிறிதும் ஆட்சேபிக்க வில்லை.

5. தனக்கு உள்ள பாத்தியதையைக் காப்பாற்றப் பாடுபட்டாளே தவிர, யாதொரு கெட்ட எண்ணமும் கொள்ளவில்லை; கெட்ட காரியமும் செய்யவில்லை.

சுமந்திரன்: மந்திரியாக இவன் யோக்கியமாய் நடந்து கொள்ளவில்லை.

1. தசரதனின் சூழ்ச்சிக்கு அனுகூலமாக நடந்து, துர்மந்திரியாகவே இருந்திருக்கிறான்.

2. அரசன் மனைவியான கைகேயியைக் கேவலமாகப் பேசியிருக்கிறான்.

படிப்பகம்

www.padippakam.com



3. பொய்யும் பேசியிருக்கிறான்.

வசிஷ்டர்: குருவான வசிஷ்டர் சாதாரண புரோகிதன் போலவே நடந்து கொண்டிருக்கிறார்.

1. நாடு பரதனுக்குப் பாத்தியதைப்பட்டு விட்டது என்பது இவருக்குத் தெரிந்திருந்தும், இராமனது முடிசூட்டுக்கு இசைந்து சூழ்ச்சி செய்கிறார்.

2. அவசரம் அவசரமாகப் பொய்யான முகூர்த்தம் வைத்துக் கொடுக்கிறார்.

3. இவர் பட்டாபிஷேகத்துக்கு வைத்த முகூர்த்தம் வனவாசத்துக்கு முடிந்தது.

அனுமன்: இவன் ஒரு சாதாரணமான ஆள்; புத்திசாலித்தனமான காரியம் என்று ஒன்றும் செய்து விடவில்லை. இவனது பெருமையெல்லாம் பகுத்தறிவுக்கு ஒவ்வாததும்—அசாத்தியமானதுமான காரியங்கள் பல செய்ததாகச் சொல்லப்படுவதே யாகும். ஒரு நல்ல பரிசுத்தமான அடிமை போல் நடந்து கொண்டிருக்கிறான். மற்றும், நீதிக்கு ஒவ்வாததுமான காரியங்கள் பலவும் செய்திருக்கிறான்.

1. அக்கிரமமாக—நடு இராத்திரியில் இலங்கைக் குத் தீ வைத்து நிரபராதிகளைக் கொன்றும் நஷ்டப் படுத்தியும் இருக்கிறான்.

2. சீதையிடம் கெட்ட வார்த்தைகளைப் (ஆண்குறியைப் பற்றிக்கூட) பேசியிருக்கிறான்.

வாலி: வாலி எவ்விதக் குற்றமும் செய்யவில்லை.

1. தம்பியைக் கொல்ல வேண்டும் என்றும் கருத வில்லை.

2. சுக்ரீவனே வாலியிடம் வலியச் சண்டைக்கு வந்திருக்கிறான்.

3. சுபாவத்திலும் வாலியிடம் குற்றம் இருந்த தில்லை.

4. தம்பியைக் கொல்லவில்லை என்று மனைவி யிடம் வாக்குக் கொடுத்துவிட்டுப் போருக்கு வந்தான்.

5. மிகப் பொறுமையும் வலிமையும் உடையவன்.

6. மிக்க நீதிமான்.

7. நியாயமான முறையிலோ—யோக்கியமான முறையிலோ இவனை யாரும் வெல்ல முடியாது.

8. இவன் அனேகப் பெரியோர்களுக்கு நண்பன்.

9. இராமனை யோக்கியன் என்று நம்பினவன்.

10. இவன் செத்த பிறகு சுக்ரீவன், வாலியின் பெருமையைக் கூறி, 'இப்படிப்பட்ட தமையனை இழந்தபின் நான் உயிர் வாழமாட்டேன்; நெருப்பில் விழுந்து சாவேன்' என்கிறான்.

இப்படிப்பட்டவனைக் கொன்றதற்கு இராமன், 'மிருகங்களைக் கொல்லுவதில் நீதியைக் கவனிக்க வேண்டியதில்லை' என்கிறான். வாலியா மிருகம்?

சுக்ரீவன்: தமையனுக்குத் துரோகம் செய்தவன். தமையனைக் கொல்வதற்காகவே இராமனுக்கு அடிமை ஆனான்.

('குடிஅரசு'-கட்டுரை—15.1.1944)

('பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்', பக்கம்1439-1441)

## நாளை விடியும்

தோழமை வணக்கம்.

16.9.2001 நாளிட்ட இந்து நாளிதழில் (THE HINDU) ஒரு செய்தி: ''மதுரை அழகர்கோயில் கள்ளழகர் கோயில் குளத்தில் மூன்று வேதப் பண்டிதர்கள் மழை வேண்டி வருண செபம் செய்திருக்கிறார்கள்.

இதில் கேலிக்கூத்து என்னவெனில் இந்து அறநிலையத்துறை இணை ஆணையரின் உத்தரவின் பேரில் இது நடத்தப்பட்டதாம். மதச்சார்பற்ற அணித் தலைவி என்றழைக்கப் படுபவரின் கட்சி ஆளும் தமிழ்நாட்டில்தான் இந்நிலை. இப்போதுதான் என்றில்லை. முன்பு ஆண்டாரே பகுத்தறிவில் ஊறித்திளைத்த திரு. கருணாநிதி, அவரின் ஆட்சிக் காலத்தில் மட்டும் என்ன வாழ்ந்ததாம். அப்போதும் அரசு அலுவலர்களின் முன்னிலையில் வருண செபம் என்ற கூத்து நடந்ததே!

ஆட்சி, அதிகாரம், பதவி என்று வந்ததும் இவர்களின் கொள்கைக் கோவணங்கள் தானாய்க் கழன்று விடுகின்றனவே. வேதனைதான்.

அறிவியல் நொடிக்கு நொடி வளர்ந்து வருகிறது. மழையைத் தேவைப்பட்ட போது பொழியச் செய்யவும், தேவையில்லாதபோது நிறுத்தவோ அல்லது வேறு இடங்களில் பொழியச் செய்யுமள வுக்கோ அறிவியலாளர் களின் அறிவியலறிவு மிக விரைவாக முன்னேறி வருகிறது. இக்காலச் சூழலில் மார்பளவு தண்ணீரில் நின்று கொண்டு யாருக்கும் புரியாத மொழியில் தவளைக் கூச்சலாய் மந்திரங்களை முணுமுணுப்பதைக் காண்கையில் நாம் இருப்பது கற்காலத்திலா? என எண்ணத் தோன்றுகிறது.

தோழமையுடன்

- பி.இரெ. அரசெழிலன்

('நாளை விடியும்' - சனவரி, பிப்ரவரி 2002 இதழ்)

ஆசிரியர் : பி.இரெ. அரசெழிலன்

ஆசிரியர் குழு:

ம.கும. வைகறைதாசன், இரா.பே. இராசப்பா

அ.பா. நரேந்திரன், ம.பி. அனுராதா

ந. கருணாகரன்

ஆண்டு நன்கொடை: உரூ. 25/-

ஈராண்டு நன்கொடை: உரூ. 50/-

வாழ்நாள் நன்கொடை (ஆயுள் சந்தா)

உரூ. 250/- (10 ஆண்டுகள்)

நன்கொடைகள் அனுப்பி இதழ் தொய்வின்றித் தொடர உதவுங்கள்.

www.padippakam.com





## சிந்தனையாளன் — 2002 பொங்கல் சிறப்பு மலர் வெளியீட்டு விழா

## மொழிஞாயிறு பாவாணர் நூற்றாண்டு விழா

### கல்வி காவிமயமாக்கல் — ஆங்கில வழிக்கல்வி எதிர்ப்பு மாநாடு

### விளக்கம் நல்கிய தீர்மானங்கள் நிறைவேற்றம்

## 'இராமாயணம்' பற்றிய குறுநூல் 1000 படிகள் விற்பனை!

**சிந்தனையாளன் ஏடு 2002 செப்டம்பரில் வெள்ளி விழாவை எட்டுகிறது**

ஆண்டுதோறும் வெளியிடப்படும் சிந்தனையாளன் பொங்கல் சிறப்பு மலர் இவ்வாண்டு எப்போதையும் விடச் சிறப்பாக அமைக்கப்பட்டு 6-1-2002 ஞாயிறு அன்று வெளியிடப்பட்டது.

**விழா மண்டபம்**

6-1-2002 அன்று காலை 7 மணிக்கே சென்னை அண்ணாசாலை பாவாணர் நூலகக் கூட்ட அரங்கத்தை அடைந்த நாகை மாவட்ட — கடலூர் மாவட்ட மா.பெ.பொ.க செயல்வீரர்கள் மா. முத்துச்சாமி, முத்து. அன்பழகன், முத்து. இரணியன், பா. மோகன், ச.நேதாஜி, கோ.மு. கறுப்பய்யா ஆகியோர் மண்டப முகப்பிலும், நுழைவாயில் பகுதியிலும், மாநாட்டை விளம்பரப்படுத்தும் பாவட்டாக்களையும், மா.பெ.பொ.க கொடிகளையும் அழகுபடக் கட்டி, விழாவுக்குக் களை சேர்த்தனர்.



தி.ர.விசயன் இன்னிசை: திருக்கோவிலூர் தி.இர.விசயன் புரட்சி பொங்கும் பாடல்களை இசைத்து அனைவர்க்கும் மகிழ்ச்சியூட்டினார்.

**பொங்கல் மலர் வெளியீட்டு விழா:**

அறிஞர் மணவை முஸ்தபா ஆய்வுரை

முதலாவது நிகழ்ச்சியாக, 'சிந்தனையாளன்' — 2002 பொங்கல் சிறப்பு மலர் வெளியீட்டு விழா காலை 10 மணிக்குத் தொடங்கியது. உடல் நலக் குறைவால் கவிஞர் தமிழேந்தி இவ்விழாவுக்குத் தலைமை ஏற்றிட இயலாமற் போனது ஒரு குறையாகவே இருந்தது.

விழாவுக்கு வந்திருந்தோரை வரவேற்று, கலச. இராமலிங்கம் உரையாற்றினார். ஆய்வுக் கட்டுரைகளை வழங்கும் ஆசிரியர் குழு உறுப்பினர் து. தில்லைவனம் விழாவுக்குத் தலைமை ஏற்று சிந்தனையைக் கிளறும் செய்திகளை எடுத்துரைத்தார்.

பொங்கல் சிறப்பு மலரை வெளியிட்டு, யூனெஸ் கூரியர் — தமிழ்ப் பதிப்பின் ஆசிரியரும், உலகஞ் சுற்றிய பேரறிஞரும், சீரிய தமிழ் ஆராய்ச்சி யாளருமான மணவை முஸ்தபா உணர்ச்சி ததும்ப உரையாற்றினார். மலரின் முதலாவது படியினை ஒடுக்கப்பட்டோர் ஆசிரியர் — அலுவலர் பேரவையின் செயல் வீரர் பூ. குருசாமி, ரூ 1000/- நிதியாக வழங்கிப் பெற்றுக் கொண்டார்.



சிந்தனையாளன் ஏட்டின் சிறப்புப் பணிகள், பொங்கல் மலரின் சிறப்புகள், மா.பெ.பொ.கவின் 25 ஆண்டு காலப் பணிகளை விளக்கி சீர்காழி மா.முத்துச்சாமி, வடக்கு மாங்குடி பா. மோகன், வழக்குரைஞர் கோவிராமலிங்கம், கீழ்ப்பெண்ணாத் தூர் பொ. சுப்பிரமணியன், பாரியூர் பா. கு. குப்பண்ணா, சிதம்பரம் வீ. இராசாப்பிள்ளை ஆகியோர் சிறப்புரையாற்றினர். ப. வடிவேலு நன்றி நவில, பகல் 12 மணிக்கு மலர் வெளியீட்டு விழா நிறைவேறிற்று.

**பாவாணர் நூற்றாண்டு விழா: அறிஞர் பா. அருளி சிறப்புரை**

மொழிஞாயிறு, மொழியாய்வுலக முன்னோடி பாவாணர் அவர்களின் நூற்றாண்டு விழா பகல் 12-15 மணிக்குத் தொடங்கியது.

www.padippakam.com





அவையோரை வரவேற்று வாலாசா வல்லவன் எழுச்சியுரை ஆற்றினார்.

அம்பேத்கர் வரலாறு நூல் தமிழாக்க ஆசிரியரும், சிறந்த பொருளாதார ஆராய்ச்சியாளருமான க. முகிலன் தலைமையேற்றுப் பாவாணரின் சிறப்பியல்புகளை நிரல்பட விளக்கி உரையாற்றினார்.

சொல்லாய்வறிஞர் பா. அருளி தமக்கே உரிய தனிவீச்சுடன் பாவாணர், பெருஞ்சித்திரனார் முதலான பெருமக்களின் ஆய்வுச் சிறப்புகளையும், அவர்களிடமிருந்து தான் கற்றவைகளைத் தொடர்ந்து மேம்படுத்தி வளர்த்தெடுத்து வருவதையும் விளக்கி அரிய உரை வழங்கினார். மாநில மாணவரணி அமைப்பாளர் ச. நேதாஜி நன்றி நவின்றிட, பிற்பகல் 2-15 மணிக்குப் பாவாணர் நூற்றாண்டு விழா நிறைவெய்தியது.

**கல்வி காவி மயமாதல் - ஆங்கில வழிக்கல்வி எதிர்ப்பு மாநாடு**

**'இராமாயணம்' குறுநூல் பரபரப்பான விற்பனை**

மதிய உணவுக்குப் பின்னர், மாலை 4 மணிக்கு மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கப்பட்டன.

திருச்சி ந. கருணாகரன் நாட்டில் வெளிவரும் பயனற்ற மூடநம்பிக்கை ஏடுகள் — பயனுள்ள பகுத்தறிவு ஏடுகள் பற்றி உரையாற்றி அனைவரையும் வரவேற்றார்.

விழாத் தலைவர் வே. ஆனைமுத்து கல்வி காவிமயமாதல் — இராமாயணம் விளைத்த கேடுகள் பற்றி உரையாற்றினார்.

மாநாடுகளின் நோக்கங்களை விளக்கியும், தமிழ் வழிக்கல்வி வெற்றியாக வந்து சேரத் தமிழர்கள் ஆற்ற வேண்டிய கடமை பற்றியும் விளக்கிப் பேராசிரியர் இரா. இளவரசு சீரிய உரையாற்றினார்.

மாநாடுகளில் நிறைவேற்றப்படுவதற்கான தீர்மானங்களைப் படித்து, வே. ஆனைமுத்து முன் மொழிந்தார்.



மாநாட்டுத் தீர்மானங்களை விளக்கியும், வழி மொழிந்தும் பன்மொழி அறிஞர் சங்கமித்ரா, காஞ்சி சி. நடராசன், ஒடுக்கப்பட்டோர் ஆசிரியர் - அலுவலர் பேரவை செயல்மறவர் இரா. ப. புகழ், பொன். இராசமாணிக்கம், புலவர் இரா. கலியமூர்த்தி, மலர்மணி ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

மாநாட்டை ஒட்டி வெளியிடப்பட்ட இராமாயண ஆராய்ச்சி பற்றிய குறு நூல் (விலை ரூ 2) மாவட்டத் தோழர்களால் 100,50,25 என ஆவலுடன் ஓராயிரம் படிகள் வாங்கிக் கொள்ளப்பட்டன. இனி மறுபதிப்புப் போட்டே விற்பனை செய்ய வேண்டும்.

கோ.மு. கறுப்பய்யா நன்றி நவிலலுடன், இரவு 9-15 மணிக்கு விழா நிகழ்ச்சிகள் இனிதே முடிவுற்றன.

**தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் சார்பில் திண்டிவனத்தில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்கமும், கோரிக்கை மாநாடும்**

தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் சார்பில் திண்டிவனம் நேரு வீதி வேதவல்லி அம்மாள் திருமண மண்டபத்தில், தேவநேயப் பாவாணர் அரங்கத்தில் 25.1.2002 வெள்ளி மாலை 4 மணிக்கு மாநாடு தொடங்கியது.

மு. கந்தசாமி தலைமையில் தமிழிசை அரங்கம் தொடங்கியது. அரசஒளி வரவேற்புரையாற்றினார். மா.செ.தமிழ்மணி தொடக்கவுரையாற்றினார். கருத்தரங்கத்திற்கு கி.த. பச்சையப்பன் தலைமை தாங்கினார். ந.அரணமுறுவல், து. திருநாவுக்கரசு, ப. சிவக்குமார், இரா. பார்த்திபன், இரா. பாலசுப்பிரமணியன், எழில் இளங்கோ ஆகியோர் உரையாற்றினர்.

இராசேந்திர சோழன் தலைமையில் பொது அரங்கம் நடைபெற்றது. பெ.மணியரசன், தியாகு, வாலாசா வல்லவன், பாவலர் செவ்வியன், க. கிருட்டிணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். காஞ்சி கலைக்குழுவினரின் இசை நிகழ்ச்சியும், திண்டிவனம் உரோசனை தாய்த் தமிழ்ப் பள்ளி மாணாக்கர்களின் கலைநிகழ்ச்சியும் நடைபெற்றது.

படிப்பகம்

www.padippakam.com



# மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில், 6-1-2002 ஞாயிறு அன்று சென்னையில் நடை பெற்ற கல்வி சுர்விமயமாதல் - ஆங்கில வழிக்கல்வி எதிர்ப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

தீர்மானம் 1:

**தமிழ்வழியில் மட்டுமே கல்வி என்னும் கொள்கையை ஏற்றிட அரசினர்க்கு வேண்டுகோள்**

தமிழ்நாட்டை உள்ளிட்ட சென்னை மாகாணத்தில், 1938 வரையில் 6ஆம் வகுப்பு முதல் பல்கலைக் கழகப் படிப்பு வரையில் எல்லாத் துறைகளுக்கான கல்வியும் ஆங்கில மொழி வழியிலேயே அளிக்கப்பட்டு வந்தது. 1939இல் இந்நிலை மாற்றப்பட்டு 6 முதல் 11ஆம் வகுப்பு வரையில் தமிழ் வழியிலேயே கல்வி அளிக்கப் பட்டது. அக்கால கட்டத்தில் மெட்ரிகுலேசன் பள்ளிகளில் மட்டும் ஆங்கில வழியில் பாடங்கள் கற்பிக்கப்பட்டன.

1946 முதல் 1967 வரையில் நடைபெற்ற காங்கிரசுக் கட்சி ஆட்சியில், அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும், அரசு நிதி உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகளிலும் 6ஆம் வகுப்புக்கு மேல் ஒரு பிரிவு ஆங்கில வழிப் பிரிவாகத் தொடங்கப்பட 1964இல் அனுமதி அளிக்கப்பட்டது. 1967 முதல் இன்று வரையில் நடைபெறுகிற தி.மு.க, அ.இ.அ.தி.மு.க ஆட்சிகளின் காலத்தில் தொடர்ந்து, உயர்நிலை - மேல்நிலைப் பள்ளிகளில் இவ்வாறு அனுமதிப்பது மேற்கொள்ளப் பட்டதுடன், மெட்ரிகுலேசன் பள்ளிகளைத் தொடங்கு வதற்குத் தாராளமாக அனுமதி அளிக்கப்பட்டது. இதன் விளைவாக இன்று 2,500க்கு மேற்பட்ட மெட்ரிகுலேசன் பள்ளிகள் உருவாகிவிட்டன.

இச்சூழலில் தமிழகத்தில் அறிவியல் பட்ட மேல் படிப்பு, வணிகவியல் பட்டமேல் படிப்பு, தொழிற் கல்வி, தொழில் நுட்பக் கல்வி முதலானவை இன்னமும் ஆங்கில மொழி வழியிலேயே கற்பிக்கப் படுவதனாலும்; தமிழ்நாட்டு ஆட்சி மொழியாக எல்லாத் துறைகளிலும் விரைந்து தமிழ்மொழி அறிமுகப்படுத்தப்படாததாலும்; தமிழ் வழியில் பட்டம் பெற்றவர்களுக்கு மேற்படிப்பில் சேரவோ வேலையில் சேரவோ எந்த வகை முன்னுரிமையும் அளிக்கப்படாததாலும்; கணினி மற்றும் செய்தித் தொடர்பு கல்வியை ஆங்கில வழியில் கற்றவர்களில் சில ஆயிரம் பேர் வெளிநாடுகளில் வேலைக்குச் சேர வாய்ப்பு இருப்பதாலும் ஆங்கில வழியில் படித்திட மாணவர்களும் பெற்றோர்களும் ஈர்க்கப்படும் நிலைமை இருக்கிறது.

தமிழக அரசினரும், காலங் காலமாகக் கல்வி பெற்று முன்னணியில் உள்ள வகுப்பினரும், முற்பட்ட வகுப்புகளைச் சார்ந்த பத்திரிகையாளர்களும், அரசியல்வாதிகளும், கல்வியை ஒரு வணிகப் பொருளாக ஆக்கிக் குறுக்குவழியில் படித்திட செல்வந்தர் களாக ஆக விரும்பும் தனிப்பட்டவர் களும் மேலே கண்டவாறு தமிழ்வழிக் கல்விக்கு எதிரான சூழ்நிலை இருப்பதைப் பயன்படுத்தி ஆங்கில வழிக்கல்வியைத் தூக்கிப் பிடிக்கிறார்கள். இது வெகுமக்களுக்கு - குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட, பழங்குடி, மிகப் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களின் மற்றும் சிற்றூர்ப்புற மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும், வேலை பெறும் முயற்சிக்கும் மிகப் பெருந்தடையாகவும் தீமையாகவும் உள்ளது.

தாய்மொழிக் கல்வியினால்தான் ஒவ்வொரு வரும் எந்தக் கருத்தையும் எளிதில் உள்வாங்கி உணரவும், தன்னம்பிக்கை பெறவும், சுயமாகச் சிந்திக்கவும், சமுதாயத்துக்குப் பயன்படவும் முடியும் என்பது உலகம் முழுவதிலும் உள்ள கல்வியாளர்கள், உளவியல் அறிஞர்கள், புதிய அறிவியல் கண்டு பிடிப்பாளர்கள் ஆகியோரின் தேர்ந்த கருத்தாகும்.

இவற்றைக் கணக்கிலெடுத்துக் கொண்டு, தமிழ்நாட்டு அரசினர் முதலாம் வகுப்பிலிருந்து பட்டப்படிப்பு, தொழிற்படிப்பு வரையில் தமிழ் வழியிலேயே குறிப்பிட்ட காலத்திற்குள் கல்வி அளிக்கப்படும் எனவும்; எல்லாத் துறைகளிலும் தமிழ்மொழியே விரைந்து ஆட்சி மொழியாக ஆக்கப்படும் எனவும்; தமிழ்வழியில் கற்றோருக்கு எல்லாத் துறைகளிலும் முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் கொள்கை முடிவு எடுப்பதுதான் தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கு உகந்ததாகும். இவ்வாறான

படிப்பகம்

www.padippakam.com



கொள்கையை ஏற்க முன்வராத அரசு தமிழ் மக்களுக்கு எதிரானதேயாகும் என இம்மாநாடு திடமாகக் கருதுகிறது.

மேலே சொல்லப்பட்ட நிலைமைகளைச் சீர்தூக்கிப் பார்த்து உணரவும், அவ்வாறு உணர்ந்து அதற்கு இணக்கமான முடிவுகளை மேற்கொள்ளவும் தமிழக அரசினர் முன்வர வேண்டும் என வற்புறுத்தி இம்மாநாடு வேண்டிக் கொள்கிறது.

**தீர்மானம் 2:**

**தமிழ்வழிக் கல்வியில் அக்கறையுள்ள அமைப்புகளுக்கு வேண்டுகோள்.**

தமிழ்வழிக் கல்வியின் இன்றியமையாமையை விளக்கிடும் தன்மையில் சிற்றூர் மட்டத்தில் பரப்புரைப் பயணம் மேற்கொண்டு, வெகு மக்களுக்கு — குறிப்பாக உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி, கல்லூரி மற்றும் தொழிற்கல்லூரி மாணவர்களுக்குப் புரிய வைத்து விழிப்பையும் எழுச்சியையும் உண்டாக்குவதற்குப் போதிய அளவில் தீவிரமான பரப்புரை இயக்கத்தைத் தொடங்குவதற்கும்; அதனை அடுத்து மாணவர்கள், பொதுமக்கள், தமிழ்வழிக் கல்வியில் நாட்டம் கொண்டவர்கள் ஒருங்கிணைந்து அமைதியான வழியில் கிளர்ச்சிகளை மேற்கொள்ளுவதற்கும் வழிகாண வேண்டும் எனவும், அதற்கு ஏற்பத் தமிழ்வழிக் கல்வியில் பற்றுதலும் அக்கறையும் கொண்ட இயக்கங்களும் அமைப்புகளும் உடனடியாக ஒரே குடை அமைப்பாக ஒன்றிணைந்து ஏற்ற திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்திட முன்வர வேண்டும் என்றும் இம்மாநாடு அன்புடனும் பணிவுடனும் அனைவரையும் வேண்டிக் கொள்கிறது.

இவ்வகையில் மேற்கொள்ளப்படும் எல்லா முயற்சிகளுக்கும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி தன்னாலான பங்களிப்பை முழுமனதோடு செய்ய ஆயத்தமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் 3:**

**கல்வி காவிமய மாக்கப்படுவதற்குக் கண்டனம்**

மனிதனின் சிந்தனையை நெறிப்படுத்த ஏற்றதொரு கருவியாக விளங்குவது கல்வி. அக்கல்வி சமயஞ் சார்ந்த கல்வியாக இருப்பதும், அப்படி உருவாக்கப்படுவதும் அறிவு வளர்ச்சிக்கும் அறிவுத் தேடலுக்கும் பெருந்தடையாகும்.

இந்நிலையில் பாரதிய சனதாக் கட்சியின் தலைமையிலான தேசிய மக்கள் நாயகக் கூட்டணி அரசு தானடித்த மூப்பாக:

(அ) திராவிடர் — ஆரியர் இனப் போராட்டம் பற்றிய உண்மையை மறைக்கிற வரலாற்றை அறிமுகப்படுத்தியிருப்பதையும்;

(ஆ) இந்து - இந்தியத் தேசியத்தைக் காப்பது என்கிற பேரால் வேத சோதிடம், வேதக் கணக்கியல், வேத வேதிஇயல், கரும காண்டம் முதலானவற்றைப் பல்கலைக் கழகங்களின் பாடத் திட்டத்தில் வலுக்கட்டாயமாகச் சேர்த்துக் கல்வியைக் காவிமயமாக்குவதையும்;

(இ) சமற்கிருத மொழியைத் தொடக்கக்கல்வி முதல் எல்லா நிலைக் கல்வியிலும் அறிமுகப் படுத்திடத் திட்டமிட்டிருப்பதையும், (ஈ) இந்திய வரலாற்று ஆய்வுக் குழுவில் (ICHR) இடம் பெற்றிருந்த நடுநிலை ஆய்வாளர்களை நீக்கிவிட்டு, ஆரியரையும் ஆரியப் பண்பாட்டையும் உயர்த்திப் பிடிக்கின்ற இந்துமத வெறியர்களை மேற்படி ஆய்வுக் குழுவில் உறுப்பினர்களாக அமர்த்தியிருப்பதையும் இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

திராவிடத் தமிழ்ப் பண்பாடு வேறு, ஆரிய வேதப் பண்பாடு வேறு; தமிழ்மொழி தனியொரு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது, வடமொழி வேறொரு மொழிக் குடும்பத்தைச் சார்ந்தது என்பது வரலாற்று ஆய்வறிஞர்களாலும் மொழியியல் அறிஞர்களாலும் தொன்மை இயல் ஆய்வாளர்களாலும் அய்யமற நிலைநாட்டப்பட்டுள்ளது. இவற்றை அடியோடு புறந்தள்ளி விட்டு, பாரதிய சனதாக் கட்சியின் தலைமையிலான இன்றைய இந்திய ஆட்சியானது பல்வேறு தேசிய இனப் பண்பாடுகளின் இருப்பை மறுத்தும் மறைத்தும் ஒரே இந்து தேசியப் பண்பாடு இருப்பதாக நிலைநாட்டிட முயலுகிறது. இது தமிழ் மக்களின் பேரிலும் தமிழ் மொழியின் பேரிலும் மற்றுமுள்ள மொழித் தேசிய இனங்களின் பேரிலும் மொழிகளின் பேரிலும் அரசு தொடுத்துவிட்ட நேரடியான தாக்குதலே ஆகும்.

எனவே இதனை முறியடிக்கும் தன்மையில் தமிழ்நாட்டு மக்களும், கல்வியாளர்களும், மொழியியல் — வரலாற்றியல் அறிஞர்களும் முயல வேண்டும் என இம்மாநாடு வற்புறுத்தி வேண்டிக் கொள்கிறது.

**தீர்மானம் 4:**

**தொடக்க நிலை நடுநிலை வகுப்புகளில் அரசுத் தேர்வுக்குக் கண்டனம்.**

தரமான கல்வி என்பது ஒவ்வொரு வகுப்புக்கும், ஒவ்வொரு வகுப்பிலுள்ள உள்பிரிவுக்கும் ஓர் ஆசிரியர் அமர்த்தப்படுவதாலும்; கல்வி நிலையங்களைப் பருவந்தோறும் அதிகாரிகள் பார்வையிடு

www.padippakam.com



வதையும் நெறிப்படுத்துவதையும் கட்டாயமாக மேற்கொள்ளச் செய்வதாலும்; பாடங்களைக் கற்பிப்பதற்கான கருவிப் பொருள்களைப் போதிய அளவில் அரசு தருவதனாலும்; குடிநீர், கழிவறை, விளையாடுமிடம் முதலான இன்றியமையாத வசதிகளை அரசு செய்து தருவதாலும் மட்டுமே ஒவ்வொரு குழந்தைக்கும் வந்து சேர முடியும்.

இதனைச் செய்யாமல், கட்டாயத் தொடக்கக் கல்வி தருதல் என்கிற பொறுப்பிலிருந்து அரசு நழுவிக் கொண்டு — கல்வித் துறையில் தனியார் ஆதிக்கம் பெற வழிவகுத்து விட்டு, 5ஆம் வகுப்பு முதல் 9ஆம் வகுப்பு வரையில் கட்டாயமான அரசுத் தேர்வு நடத்திடத் தமிழக அரசினர் முடிவெடுத்திருப்பது சிற்றூர்ப்புற ஏழை மற்றும் கீழ்ச்சாதியாகக் கருதப்படும் வெகு மக்களுக்கு வேண்டுமென்றே கல்வி வாய்ப்பை மறுப்பதாகும்.

எனவே இத்திட்டத்தினைத் தமிழ்நாட்டு அரசு அடியோடு கைவிட்டு விட்டு, தரமான கல்வி கிடைப்பதற்கான மேலே கண்ட ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என இம்மாநாடு தமிழ்நாட்டு அரசினரை வேண்டிக் கொள்கிறது.

*(எல்லாத் தரப்பினரின் எதிர்ப்பு உணர்வுகளைக் கணக்கிலெடுத்துக் கொண்டு, இத்திட்டத்தை, இப்போதைக்கு அரசு ஒத்தி வைத்துள்ளது)*

**தீர்மானம் 5:**

**கண்ணகி சிலையை இருந்த இடத்திலேயே நிறுவிடக் கோரிக்கை.**

தமிழிலுள்ள அய்ம் பெருங்காப்பியங்கள் பிறமொழிகளிலுள்ள காப்பியங்களுக்கு ஈடானவை ஆகும். அய்ம் பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரக் காப்பியத்தின் வரலாற்றுத் தலைவியாகத் திகழ்பவர் கண்ணகி. ஏற்கெனவே 1968இல் சென்னைக் கடற்கரையில் குறிப்பிட்ட இடங்களில் நிறுவப்பட்ட தமிழ்நாட்டுத் தலைவர்களின் சிலைகள் வைக்கப்பட்ட இடத்தில் இருக்கும்போது, தெருக்குத்து — மூலைக்குத்து என மனையடி சாத்திரம், வாஸ்து சாத்திரம் என்னும் மவுடீகக் காரணத்துக்காகக் கரவான முறையில் கண்ணகி சிலையை அரசினர் அகற்றியதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், ஏற்கெனவே இருந்த இடத்திலேயே கண்ணகியின் அதே சிலையை நிறுவ் வேண்டும் எனத் தமிழக அரசினரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

6/1/2002 வே. ஆனைமுத்து

செயலர்

## திருச்சியில் நூல் நுகர்வு விழா

திருச்சி படைப்பாளர் பேரவை ஏற்பாடு செய்த "நூல் நுகர்வு" விழா 9.12.2001 ஞாயிறு மாலை அய்ந்து மணி அளவில் திருச்சி கலையரங்கம் மேல் தளத்தில் நடைபெற்றது.

மலரின் நறுமணத்தை நுகர்கின்றோம், பல மணங்களை நுகர்கின்றோம், ஆனால் தற்போது நாம் நூலை நுகர்கின்ற "நூல் நுகர்வு விழா" என்று விழாவுக்குத் தலைப்புக் கொடுத்த புலவர் குறளன்பனைப் பாராட்ட வேண்டும் என்று இரா.இளங்குமரன் பாராட்டினார்.

முனைவர் கடலூர் மணிமாறன் அவர்களின் 'அகமும் முகமும்' நூலைப் பற்றி, இரா. இளங்குமரன், வீ.ந. சோமசுந்தரம், பி.தமிழகன், முனைவர் கு.திருமாறன், முனைவர் சோ. சத்தியசீலன், பாவலர் வேல் இளங்கோ, ஆகியோர் ஆய்வு செய்தனர் இறுதியாக முனைவர் கடலூர் மணிமாறன் ஏற்புரை நிகழ்த்தினார்.

முனைவர் கு.ப. கணேசன் அவர்களின், 'பாரதிதாசன் பாடல்களில் அகமும் புறமும்' என்ற நூலைப் பேராசிரியர் இராச - முத்திருளாண்டி, முனைவர் இரா. இளவரசு, பேராசிரியர் இரா. சாந்தாராம் ஆகியோர் ஆய்வு செய்து பேசினர். இறுதியாக முனைவர் கு.ப. கணேசன் ஏற்புரை நிகழ்த்தினார்.

நூலாசிரியர்களைப் பாராட்டி நீ.செல்வேந்திரன் சிறப்புரையாற்றினார்.

பெரியார் பாசறைப் பதிப்பாளர் புலவர் குறளன்பன் எல்லா நிகழ்ச்சிகளையும் நெறிப்படுத்தினார். திருச்சி ந. கருணாகரன் நன்றியுரையுடன் இரவு 9.30 மணிக்கு விழா நிறைவுற்றது.

செய்தி: மங்கலம் அரசன், வடக்கலூர்.

**அவசரத் தேவைக்கான தானியங்கி மின்விளக்கு அன்பளிப்பு**

வீரானந்தபுரம் ஆசிரியர் ந. கணபதி அவர்களின் துணைவியர் கோமளவல்லி — சித்தாலட்சுமி ஆகியோர் அவசரத் தேவைக்குப் பயன்படும் தானியங்கி மின்விளக்கு (ரூ 700) ஒன்றினை 23-12-2001 அன்று சிந்தனையாளன் அலுவலகத்திற்கு அன்பளிப்பாக அளித்தனர்.

www.padippakam.com



## ஆசிரியருக்கு...

### தமிழினத்தின் மீது பண்பாட்டுப் படை எடுப்பு நடக்கிறது!

தமிழினத்திற்குப் பெரும் தாக்கம் ஆரியர்களின் வரவால் நிகழ்ந்தது. அது இன்னும் தொடர்கிறது. தமிழினத்தின் பண்பாடு, நாகரிகம், மரபுகளை விளக்கும் தமிழ்நூல்கள் குமரிக் கண்ட கடல்கோள்களால் அழிந்தன. எஞ்சியவற்றை ஆரியர்கள் அழித்தனர். மிஞ்சியதைத் தமிழர்கள் அழித்தனர் என்று பாவாணர் தாம் எழுதிய தமிழர் வரலாறு என்ற நூலில் சுட்டுகிறார். ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன் சிற்றினம் எனக் கூறும் ஆரியர்களால் தமிழர்கள் மீது பண்பாட்டுப் படையெடுப்புகள் நிகழ்ந்தன. இதைக் கண்ணுற்ற பேராசான் வள்ளுவர்

சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்துவிடும் (கு.451)

சிற்றினத்தை அஞ்சி ஒதுக்குவது பெரியோர் இயல்பு. அச்சிற்றினத்தைச் சுற்றமாகத் தழுவிக் கொள்ளல் சிறியோரியல்பு என எச்சரித்து அறிவுரைகூறினார்.

சிற்றினமான ஆரியத்தோடு சேர்ந்து செயல்படு வதால் ஏற்படும் தீமைகளையும் குறிக்கிறார்.

நல்இனத்தின் ஊங்கும் துணைஇல்லை தீ
இனத்தின்
அல்லல் படுப்பதூஉம் இல் கு.460

நல்லினமே துணையாக இருக்கும்; தீயினம் (ஆரியஇனம்) கொடிய பகையாக இருக்கும் எனக் கூறினார். இன்று தீயினம் தமிழின்மேல் பகை வளர்த்து வருகிறது. தமிழர்களுடைய பண்பாட் டோடு போர் தொடுத்து உள்ளது.

2001 டிசம்பர் திங்களில் இரு நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. டெல்லியில் தந்தை பெரியார் மய்யமும், சென்னையில் தமிழர்களுடைய பண்பாட்டுச்சின்னமான கண்ணகி சிலையும் தகர்க்கப்பட்டுள்ளன. இவ்விரண்டுமே தமிழினத்தின் பண்பாட்டுச்சின்னங்கள்.

ஆரியர்களுக்குப் பின் அவர்கள் வழியில் வந்த பிராமணியம் இவ்விரண்டு செயல்களையும் செய்து முடித்து விட்டன. டெல்லியில் பெரியார் மையத்தை இடிக்கக் கரணியமாக இருந்தவர் சுப்பிரமணிய சாமி என்ற பிராமணர்; கண்ணகி சிலையை ஒழித்தவர் கன்னடியப் பிராமணப் பெண் செயலலிதா. இவர்களுக்கு எப்படி இத்துணிச்சல் வந்தது? தமிழர்கள் அச் சிற்றினத்தோடு குலாவியதால் வந்த தீவினை. தமிழர்களிடையே சிற்சிறு கருத்து வேறுபாடுகளால் பிரிந்து சிறு சிறு குழுக்களாக அமைந்து தமிழர்களையே தமிழர்கள் அச்சிற்றினத் தோடு குலாவியதால் வந்த தீவினை.

தமிழர்களிடையே சிற்சிறு கருத்து வேறுபாடு களால் பிரிந்து சிறுசிறு குழுக்களாக அமைந்து தமிழர்களையே தமிழர்கள் பகைத்துத் தாக்கிக் கொண்டார்கள்.

பிராமணியஇனம் தமிழர்களின் ஒற்றுமை யின்மையைப் பயன்படுத்தி, தமிழினத்தின் பண்பாட் டின் மீது படையெடுத்து வெற்றி பெற்று வருகிறது. தமிழினம் அடிமையாகி அழிந்து விடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது.

24.12.2001 நெல்லை அதியமான்

## தமிழிலே முழுப் பெயர்...

சிந்தனையாளன் இதழ் (நவம்பர் 2001) பல சிறப்பு மிக்க கட்டுரைகளை வெளியிட்டுள்ளது. பாராட்டுகிறோம்.

இது போன்று கடைசிப் பக்கக் கவிதையான 'தமிழனே இது கேளாய்' என்ற கவிதையும் சிறப்பு.

''பொங்கி எழுந்து போராட வேண்டும்
பூச்சியாய் வாழ்ந்து சாகிறாய் தமிழா''

- என்ற வரிகள் வைர வரிகள்; பாராட்டுகிறோம்.

தமிழ் மொழி நாள்தோறும் அழிகிறது; சிதைகிறது; கலவை மொழியாகிறது.

இது குறித்தும் கட்டுரைகள் எழுதிடவும். ஒவ்வொரு பக்கத்தின் அடிப்பகுதியில் தமிழ் வளர்ச்சி குறித்துப் பெரிய எழுத்தில் கீழ்கண்டவற்றை வெளியிடவும் வேண்டுகிறோம்.

பெயரை, முத்து மகன் மணி என்றால் மு.மணி என்றே எழுத வேண்டும். மு. MANI என்று யாருமே எழுதார்.

தமிழிலேயே ஒப்பம் இட வேண்டும். தொலைபேசியை எடுத்தவுடன் வணக்கம் என்றே கூறுவீர்; ''அலோ'' என்று கூறாதீர்.

- புலவர் மு. சொர்ணம்.



## இரும்புலிக்குறிச்சி மக்கள் நலத் தொண்டர் பெ.அன்பழகன் மறைவு

இரும்புலிக் குறிச்சி மேல் நிலைப்பள்ளி முதுகலைத் தமிழாசிரியரும் - மக்கள் நலத் தொண்டருமான பெ.அன்பழகன் அவர்கள் 09.12.2001 ஞாயிறு பிற்பகல் 1 மணியளவில் மாரடைப்பால் திடீரென இயற்கை எய்தி விட்டார் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இப்பகுதி பொது மக்களும் - முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பேராசிரியர் தீரன், தியாக. சுப்பிரமணியம், முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர் வே. செல்லக்கண்ணு பள்ளித் தலைமையாசிரியர் க. சண்முகம் ஆகியோரும் பெ. அன்பழகன் உடலுக்கு மலர்வளையம் வைத்து இறுதி மரியாதையை செலுத்தினர்.

பெ. அன்பழகன் உடலுக்கு அவரது மூத்த மகன் இளமாறன் 10.12.2001 திங்கள் மாலை 6 மணியளவில் இடுகாட்டில் தீ மூட்டினார்.

பெ. அன்பழகன் அவர்களின் நினைவு நாள் நிகழ்ச்சி 23.12.2001 ஞாயிறன்று முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தியாக. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பல தோழர்கள் கலந்து கொண்டு இரங்கலுரை ஆற்றினர்.

20.01.2002 ஞாயிறன்று பெ. அன்பழகன் இல்லத்திற்கு வே. ஆனைமுத்து - சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் பொற்கோ ஆகியோர் வந்திருந்து, அன்பழகனின் மறைவு பற்றி விசாரித்தறிந்து அவரது மனைவி, தாய், மகன்கள் ஆகியவர்களுக்கு ஆறுதல் கூறினர்.

பெ. அன்பழகன் அவர்களை இழந்து வாடும் அவரது மனைவி பெண்ணரசி - மகன்கள் இளமாறன், இளவழகன், இளங்கோவன் - தாய் பழனியம்மாள் ஆகியோர்களுக்கு, பொதுமக்களும் - இரும்புலிக்குறிச்சி மார்க்சிய பொதுவுடைமைக் கட்சியும் - சிந்தனையாளர் பேரவையும் ஆழ்ந்த வருத்தத்தையும், மனங்கசிந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கின்றன.

செய்தி. சிகோ.

படிப்பகம்

www.padippakam.com



## வாழ்க்கை ஒப்பந்த நிகழ்ச்சிகள்

### அலெக்சாண்டர் — மீனா

பொன்பரப்பி ஏ. இராஜமூர்த்தி — தங்கம் மகன் அலெக்சாண்டர்; திருச்சி ஏ. இராமலிங்கம் — வில்லரசி மகள் மீனா ஆகியோரின் வாழ்க்கை ஒப்பந்த விழா, திருச்சி கயிலாசபுரம் 'சி' பகுதி திருமண மண்டபத்தில், 18-1-2002 வெள்ளி காலை 10 மணிக்குச் சிறப்புற நடைபெற்றது.

வே. ஆனைமுத்து, தமிழ்நாடு காவல் துறை முன்னாள் தலைவர் வால்டர் தேவாரம், முன்னாள் இந்திய ஆட்சிப் பணியர் சங்கர சுப்பய்யன், பெல் நிறுவனச் செயல் இயக்குநர் கோபிநாத் உள்ளிட்டோர் மணமக்களுக்கு நேரில் வந்து வாழ்த்துக் கூறினர்.

### முத்தமிழ்ச் செல்வன் — மீனா

இரும்புலிக் குறிச்சி ஆசிரியர் பொன். கந்தசாமி — சுலோச்சனா மகன் முத்தமிழ்ச் செல்வன், மேற்படியூர் புலவர் இ.சு. இராசமாணிக்கம் — காந்திமதி மகள் மீனா ஆகியோரின் வாழ்க்கை ஒப்பந்த விழா மணமகன் இல்லத்தில் 20-1-02 ஞாயிறு காலை 10 மணிக்குச் சிறப்புற நடைபெற்றது.

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் முனைவர் பொற்கோ தலைமை ஏற்று அரியதொரு உரையாற்றினார். வே. ஆனைமுத்து வாழ்க்கை ஒப்பந்தத்தை நிகழ்த்தி வைத்தார். மு. கந்தசாமி வரவேற்புரை ஆற்றினார்.

சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் தியாக. சுப்பிரமணியன், முன்னாள் பெருந்தலைவர் வே. செல்லக்கண்ணு, பேராசிரியர்கள் அ.ம. சத்தியமூர்த்தி, வே. இராமசாமி, ந. தங்கவேலு ஆகியோர் அறிவுரை கூறினர். வே. பெ. பச்சைமுத்து நன்றி கூறிட, பகல் 12 மணிக்கு விழா நிறைவேறியது.

### நக்கீரன் — ஜெயலட்சுமி

கோபி அறிஞர் கு.ச. ஆனந்தன் — சூரிய குமாரி மகன் நக்கீரன்; இராசபாளையம் எஸ்.பி. பாலசுப்பிரமணியன் மகள் ஜெயலட்சுமி ஆகியோரின் மன்றல் விழா, 20-1-02 ஞாயிறு காலை 7-30 மணிக்கு கோபியில் ஸ்ரீமுத்து மகால் திருமண மண்டபத்தில் சிறப்புற நடைபெற்றது.

### ஜவஹர்லால் — விஜயலட்சுமி

'நெற்றிக் கண்' ஏட்டின் இணை ஆசிரியர் எம்.பி. திருஞானம் — நாகேஸ்வரி மகன் ஜவஹர்லால்; சென்னை ப. கன்னியப்பன் — தேவகி மகள் விஜயலட்சுமி ஆகியோரின் வாழ்க்கை ஒப்பந்த விழா, 20-1-02 ஞாயிறு காலை 7-30 மணிக்கு, சென்னை அரும்பாக்கம் முரளி கிருஷ்ணா திருமண மாளிகையில், இந்திய அரசின் முன்னாள் அமைச்சர் வாழப்பாடி கூ. இராமமூர்த்தி முன்னிலையில் சிறப்புற நடைபெற்றது.

## பொங்கல் விழா — தமிழர் திருநாள் — திருவள்ளுவர் விழாச் செய்திகள்

### பாவேந்தர் தமிழ்மன்றம், தொழிற்பேட்டை இராணிப்பேட்டை

கடந்த சனவரி 14,15 தேதிகளில் இராணிப் பேட்டையில் பாவேந்தர் தமிழ் மன்றத்தின் சார்பில் முப்பெரும் விழா சிறப்பாக நடைபெற்றது. முதல் நாள் நிகழ்ச்சிக்கு மன்றத்தின் செயலாளர் அ.செ. தமிழ்க்கனல் தலைமை ஏற்றார். காலையில் பேச்சு, கவிதை, கட்டுரை, பாட்டுப் போட்டிகள், திருக்குறள் ஒப்புவித்தல் உள்ளிட்ட பல்வேறு அறிவுத்திறன் போட்டிகள் நடத்தப்பட்டன. கால் பந்து, சடுகுடு, கயிறு இழுத்தல் போன்ற விளையாட்டுப் போட்டிகளும் இடம் பெற்றன. மாலையில் கருத்தரங்கமும் வாலாசா வல்லவன் தலைமையில் 'காவிரி நீர் சிக்கல் தீராமைக்குப் பெருங்காரணம் - தமிழக அரசே, கருநாடக அரசே, இந்திய அரசே' என்னும் தலைப்பில் சுழலும் சொற்போரும் நடந்தன.

2ஆம் நாள் காலை பழ அம்பிகாபதி தலைமையிலும், நவ்லாக் ஊராட்சி மன்றத் தலைவர் க. நந்தகுமார் முன்னிலையிலும் பாவேந்தர் தமிழ் மன்றத்தின் ஆறாம் ஆண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்ச்சியும் நடைபெற்றன. துணைப் பொருளாளர் துரைபாலகிருட்டிணன் வரவேற்புரை யாற்றினார். முகில் பரமானந்தன், பேராசிரியர் இர. நடராசன், பா.ச. அரசமாணிக்கம், பாவலர் சோ.ஏ. உலகநாதன், சங்காநாராயணன், க.முனிசாமி, அ.வீரய்யா ஆகியோர் கருத்துரைக்குப் பின் பேராசிரியர் இன்குலாப் சிறப்புரையாற்றினார். இறுதியில் பரசளிப்பு விழாவும் மாணவ மாணவியற் பங்கேற்ற எழுச்சி மிகுகலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

### இளந்தமிழர் பண்பாட்டுப் பாசறை, கொழப்பலூர்

செஞ்சியை அடுத்த கொழப்பலூரில் பாசறையின் 11ஆம் ஆண்டு விழாவும் தமிழர் திருநாள் விழாவும் 16.1.2002 அன்று சிறப்பாக நடைபெற்றன. பள்ளி மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள், தமிழினமும் பெரியாரும் எனும் தலைப்பில் சொல்லரங்கம், பரிசளிப்பு ஆகியன இடம்பெற்றன. கோ.கி. இரவி, மு. இரவிக்குமார், மு. மருதமலை ஆகியோர் விழா ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

படிப்பகம்

www.padippakam.com



படியுங்கள்! படியுங்கள்!

# 'சிந்தனையாளன்' சிறப்பு மலர்கள்

## - ஒரு வரலாற்றுப் பார்வை -

முனைவர் அ. ஆறுமுகம்

முன்னுரை:

தந்தை பெரியார் அவர்களுடன் நீண்டநாள் பழகி, சரியான தெளிவுடன் அவரது கொள்கைகளைப் பரப்பிடத் தொடர்ந்து தளராது பாடுபடுபவர் தோழர் வே.ஆனைமுத்து அவர்கள். இவரது 'சிந்தனையாளன்' திங்களிதழ் வெள்ளி விழாவை நோக்கி நடை போடுவதாகும். இதுவரை சிந்தனையாளன் சார்பில் வெளிவந்துள்ள ஒன்பது சிறப்பு மலர்கள் பற்றிய செய்திகளை இக்கட்டுரையில் காண்போம்.

பெரியார் பிறந்தநாள் மலர்கள்

தந்தை பெரியார் அவர்களின் 111-ஆவது பிறந்தநாள் சிறப்பு மலர் 17.9.1989 அன்று வேலூரில் வெளியிடப் பெற்றது. இருபத்தைந்து உரூபா விலையில் வெளிவந்த இம்மலரே 'சிந்தனையாளன்' இதழ் வெளியிட்ட முதல் சிறப்பு மலர் ஆகும். மலர் வெளியீட்டுக் குழுவினரும், விழாக் குழுவினரும், அனைவர்க்கும் நண்பகல் உணவுடன் சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

இம்மலரில் அய்ம்பத்தெட்டு கட்டுரைகளும் பதினான்கு கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. பெரியார், மார்க்ஸ் ஆகிய இருவர் படங்களும் கவிஞர் தமிழேந்தியின் அறிமுகக் கவிதைகளுடன் இடம் பெற்றுள்ளன. இம்மலரில் '1930களில் சுயமரியாதை இயக்கம்' என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ள முத்தமிழ்க் காவலர் அவர்களின் கட்டுரையும், 'பெரியார் ஈ.வெ.ரா சிந்தனைகள்' தொகுப்புப் பணி பற்றிய, ஆசிரியர் ந. கணபதி அவர்களின் கட்டுரையும் குறிப்பிடத் தகுந்தவை. இன்றைய ஆர்வலர்கள் தவறாமல் இம்மலரைத் தேடிப் படிக்க வேண்டும்.

பெரியார் ஈ.வெ.ரா அவர்களின் 113ஆவது பிறந்த நாள், பன்மொழிச் சிறப்பு மலர் வெளியீட்டு விழாவாக 19.10.1991 அன்று புதுடில்லியிலுள்ள மாவ்லங்கர் அரங்கில் நடைபெற்றது. அறுபது உரூபாய் விலையுள்ள இம்மலர் தமிழ், தெலுங்கு, மலையாளம், வங்காளி, இந்தி, ஆங்கிலம் ஆகிய ஆறு மொழிகளில் முப்பத்திரண்டு கட்டுரைகளையும், ஆறு கவிதைகளையும் கொண்டு வெளிவந்தது. இம்மலரில் அரிய நிழற்படங்களும், நிழற்படச் செய்திகளும் இயக்க வரலாற்றை எடுத்துக்காட்டு வனவாக அமைந்துள்ளன.

ஓராண்டு இடைவெளிக்குப் பின் 25.12.1993-இல் பெரியார் ஈ.வெ.ரா 115வது பிறந்தநாள் சிறப்புமலர், சென்னையில் 'சிந்தனையாளன்' சார்பில் முப்பது உரூபா விலையில் வெளியிடப் பெற்றது.

தோழர் வே. ஆனைமுத்து அவர்கள் பெரியார் தமிழ்நாடு காங்கிரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற வரலாற்றுச் செய்தியையும், பெரியார் அவர்களின் அறிவு நேர்மை பற்றிய செய்தியையும், பெரியார் அவர்களிடம் முப்பதாண்டுகட்கு மேல் நெருங்கிப் பணியாற்றிய முத்தமிழ்க் காவலர் அவர்களின் பெரியார் பற்றிய கருத்துகளையும் தெளிவுபடுத்தியுள்ளார். இவை இம்மலரில் இடம் பெற்றுள்ள சிறப்புச் செய்திகளாகும்.

வரலாற்றுச் சான்றுகள் பலவற்றுடன் பெரியாரின் கொள்கை விளக்கங்களாக முப்பத்தேழு கட்டுரைகளும் ஏழு கவிதைகளும் இடம் பெற்று மலருக்கு மணமூட்டுகின்றன.

பின்னர் மூன்றாண்டு இடைவெளிக்குப் பிறகு தந்தை பெரியார் பிறந்தநாள் சிறப்பு மலர் என்ற நிலையினை மாற்றி, வேளாண் வெகு மக்களுக்குரிய பொங்கல் சிறப்பு மலராக 1997இல் வடிவம் பெற்றது. இம்மலர் 5.1.1997இல் சென்னையில் எழுபது உரூபா விலையில் வெளியிடப் பெற்றது. இம்மலரில் நாற்பத்தைந்து கட்டுரைகளும், அய்ந்து கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.

இதன்பிறகு ஒவ்வோராண்டும் தவறாமல் சிந்தனையாளன் பொங்கல் சிறப்பு மலர் வெளியிடப் பெற்று வருகிறது. 26.1.1998இல் காஞ்சிபுரத்தில் வெளியிட்ட பொங்கல் சிறப்புமலர் நூறு உரூபா எனக் குறிக்கப் பெற்றது. முன்பதிவு விலையாக அறுபது உரூபாய்க்குத் தரப்பெற்றது. இம்மலரில் முப்பத்தொன்பது கட்டுரைகளும் பதினான்கு கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. 'என் நிலை' என்ற தலைப்பில் உள்ள ஆசிரியரின் கட்டுரை இம்மலரில் குறிப்பிடத் தக்கதாகும்.

அடுத்து 2.1.1999இல் செயங்கொண்டம் நகரில் பொங்கல் சிறப்பு மலர் அய்ம்பது உரூபா விலையில் வெளியிடப் பெற்றது. இம்மலரில் நாற்பத்தாறு கட்டுரைகளும் பதினாறு கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. மார்க்சு முதல் பெரியார் வரை பத்துக்கு

படிப்பகம்

www.padippakam.com



மேற்பட்ட அறிஞர்களின் நிழற்படங்கள் மலருக்கு அழகூட்டுகின்றன. 'ஓராயிரம் ஆண்டை நோக்கு' என்ற ஆசிரியரின் தலையங்கம் சிறப்பாகக் குறிக்கத் தக்கதாகும். 'தமிழர் திருநாள்' பற்றிய பெரியாரின் கட்டுரையும் இடம் பெற்றுள்ளது சிறப்பாகும்.

அடுத்த பொங்கல் சிறப்பு மலர் அறுபது உரூபா விலையில் 1.1.2000 அன்று பழம் பெருமை வாய்ந்த திருமரைக்காடு என்ற வேதாரண்யம் நகரில் வெளியிடப் பெற்றது. இம்மலரில் மார்க்சு, எங்கெல்சு முதல் இராம் மனோகர் லோகியா வரை பதினேழு பெரியோர்களின் படங்கள் இடம் பெற்றுச் சிறப்பூட்டுகின்றன. மேலும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் போராட்ட வரலாறுகளை சிந்தனையாளன் ஆசிரியர் வரலாற்றுக் கண்ணாடியாகத் தொகுத்துத் தந்துள்ளார். உள்ளடக்கமாக அறுபது கட்டுரைகளும் பதினோரு கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. மிகுதியான கட்டுரைகள் இடம் பெற்றது இம்மலரிலேயே ஆகும்.

பின்னர் 6.1.2001 அன்று மேற்குத் தாம்பரத்தில் பொங்கல் சிறப்பு மலர் அறுபது உரூபா விலையில் வெளியிடப்பட்டது. இம்மலரில் அய்ம்பத்தாறு கட்டுரைகளும் பதினெட்டுக் கவிதைகளும் இடம் பெற்றுள்ளன. இம் மலரில் இருந்து மலர் வெளியீட்டு விழா அழைப்பிதழையும் மலரில் சேர்த்து அச்சிடும் நெறியைப் பின்பற்றி வருவது வரலாற்றுக்கு உரம் சேர்ப்பதாகும். இதுவரை வெளிவந்துள்ள சிறப்பு மலர்களுள் மிகுதியான கவிதை இடம் பெற்றுள்ளது இம்மலரிலேயே ஆகும்.

அண்மையில் 6.1.2002இல் சென்னையில் நடைபெற்ற சிந்தனையாளன் பொங்கல் சிறப்பு மலர் வெளியீட்டு விழா குறிப்பிடத்தக்கதாகும். நாற்பத்து மூன்று கட்டுரைகளும் பத்துக் கவிதைகளும் அடங்கியுள்ள இம்மலருக்கு அறுபது உரூபா விலை என்பது மிகவும் குறைவே. அருமையான கருத்துகளின் கருவூலமாக இம்மலர் அமைந்துள்ளது.

இவ்வாண்டுடன் சிந்தனையாளன் சார்பில் பெரியார் பிறந்தநாள் சிறப்பு மலர்களாக மூன்றும், பொங்கல் சிறப்பு மலர்களாக ஆறும் வெளியிடப் பெற்றுள்ளன. இவை ஒன்பதிலும் அய்நூற்றுப் பத்துக் கட்டுரைகளும், நூற்று ஆறு கவிதைகளும் வெளிவந்துள்ளன. அய்ந்தில் ஒரு பங்கு கவிதைகள் இடம் பெற்றிருப்பது குறிக்கத்தக்கதாகும்.

அட்டைப் படங்கள்:

பெரியார் பிறந்த நாள் சிறப்பு மலர்கள் அனைத்திலும் தந்தை பெரியாரின் படமே அட்டையில் அழகுற அச்சிடப்பட்டுள்ளது. பொங்கல் சிறப்பு மலர் அனைத்திலும் அட்டைப் படங்களாகப் பெரியார், திருவள்ளுவர், உழவர் திருநாளுக்குரிய இயல்பான காட்சிகள் ஆகியவை பொருத்தமுற அமைக்கப் பெற்றுள்ளன. அட்டைப் பட அச்சின் முதிர்ச்சி இவ்வாண்டு பொங்கல் சிறப்பு மலரில் தெளிவாகிறது.

நிறைவுரை:

தரமான கட்டுரைகளையும், கவிதைகளையும் தாங்கி வந்துள்ள இம் மலர்கள் அனைத்தும் கருத்துக் கருவூலமாக அமைந்துள்ளவை. பெரியார் பற்றாளர்கள் மட்டுமன்றித் தமிழர் அனைவரும் படித்துப் பயன் பெற வேண்டும். இதுவரை வெளிவந்துள்ள மலர்கள் அனைத்தையும் தொகுத்து வைத்திருப்போர் இளைய தலைமுறையினருக்கு அறிமுகப்படுத்தி அவற்றின் சிறப்பினை உணரச் செய்ய வேண்டும்.

கட்டுரைகளும் கவிதைகளும் ஆழமான கருத்துகளையும் ஆய்வு முடிவுகளையும் கொண்டவை. பெரியாரின் கொள்கைகளைப் புரிந்து கொள்ளவும், பெரியார் பாதையில் சிந்தனையாளன் எவ்வாறு சிறப்புடன் வளர்ந்து வருகிறது என்பதை அறிந்து கொள்ளவும் இம்மலர்கள் உறுதுணையானவை.

எனவே, மலர்கள் அனைத்தையும் தேடி வாங்கிப் படியுங்கள். 'சிந்தனையாளன்' இதழின் உறுப்பினராக ஆகுங்கள். பெரியார் பாதையில் நடை போட இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டுங்கள்.

வளரட்டும் பகுத்தறிவு!

வெல்லட்டும் பெரியாரியம்!!

## புரட்சிக்கவிஞர் கலை இலக்கிய மன்றம், சோளிங்கபுரம்

*16.1.2002* மாலை சோளிங்கபுரம் பு.க.க. மன்றத்தின் சார்பில் பொங்கல் விழா, திருவள்ளுவர் நாள், பாவாணர் நூற்றாண்டு விழா ஆகியன சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. விழாவிற்கு முன் கவிஞர் தமிழேந்தி பள்ளி மாணவர்கள் பங்கேற்ற திருக்குறள் நொடி வினாப் போட்டியை நடத்தி முடித்தார். க. முகிலன் தலைமையில் வெ.சுப்பிரமணி வரவேற்புரையாற்ற, சொல்லாய்வறிஞர் ப.அருளி பாவாணர் படத்தைத் திறந்து வைத்துச் சிறப்புரையாற்றினார்; 1330 குறட்பாக்களையும் ஒப்புவித்த 8ஆம் வகுப்பு மாணவி தமிழரசி, 'பாவாணரும் தனித்தமிழும்' எனும் தலைப்பில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வென்ற மாணவர்கள் திருக்குறள் நொடி வினாப் போட்டியில் பங்கேற்றோர் ஆகியோர்க்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவின் இறுதியில் வண்ணமிகு கலை நிகழ்ச்சிகள் நடந்தன.

படிப்பகம்

www.padippakam.com



# அமெரிக்க ஏகாதிபத்திய பயங்கரவாதமும் அதற்குத் துணைபோகும் திருடர்களும்

க.முகிலன்



அமெரிக்காவின் கையைக் கொண்டே அதன் கண்களைக் குத்தியது போன்று, 2001 செப்டம்பர் 11 அன்று நியூயார்க் நகரில், உலகிலேயே உயரமானவை என்று கருதப்பட்ட உலக வணிக மய்யத்தின் இரண்டு கட்டடங்களை இசுலாமியத் தீவிரவாதிகள் அமெரிக்க வானூர்திகளைக் கடத்திச் சென்று மோதித் தாக்கித் தகர்த்தனர்.

அமெரிக்க அய்க்கிய நாடுகள் (U.S.A) எனப்படும் அமெரிக்கா 1780களில் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுபட்டுச் சுதந்திர நாடானது. அதுமுதல் 2001 செப்டம்பர் 11 வரையில் அமெரிக்காவின் நிலப்பகுதி எதுவும் அந்நிய நாட்டின் தாக்குதலுக்கு இலக்கானதே இல்லை. இரண்டாம் உலகப் போரின் போது சப்பான் அமெரிக்காவின் பெர்ல் துறைமுகத்தின் மீது குண்டு வீசியது ஒரு விதிவிலக்கு!

அமெரிக்கா தன்னை ஒரு சிங்கமாக இறுமாப்புடன் நினைத்திருந்தது. காட்டில் மற்ற விலங்குகள் தமக்குள் சண்டையிட்டுக் கொள்ளும்; சிங்கத்திடம் நெருங்குவதில்லை. ஆனால் 2001 செப்டம்பர் 11 நிகழ்ச்சி சிங்கத்தை சிறு முயலொன்று அதன் குகையினுள் நுழைந்து அதன் பிடரியைப் பிடித்தாட்டியது போலாகி விட்டது. அவமானத்தால் அதிர்ச்சியுற்ற அமெரிக்கா வெகுண்டெழுந்தது. இத்தாக்குதலுக்குக் காரணமானவர் என்று கருதப்பட்ட ஒசாமா பின்லேடன் மீதும், இவருக்குப் புகலிடம் அளித்த ஆப்கானிஸ்தான் மீதும் மட்டுமின்றி, உலகம் முழுவதும் உள்ள பயங்கரவாதத்திற்கு எதிராகப் போர்ப் பிரகடனம் செய்தது. 48 மணி நேரத்திற்குள் உலகத்தின் மீதே தாக்குதல் நடத்த போர் அறிவிப்புச் செய்ய வேண்டிய தேவை என்ன?

நன்கு திட்டமிட்டே, அமெரிக்கா, 'உலக பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' என்று அறிவித்தது. இப்போர் பத்து ஆண்டுகளுக்கு நீடிக்கும் என்று கூறியுள்ளது. எது பயங்கரவாதம் என்பதையும் ஒரு தனிநபரோ, ஓர் அமைப்போ, ஒரு நாடோ பயங்கரவாதியா? இல்லையா? என்பதையும் தீர்மானிக்கும் உரிமையும், இவர்களை எப்போது, எப்படித் தாக்குவது என்று முடி செய்யும் உரிமையும் பொறுப்பும் தனக்கே உண்டு என்று 'உலக பயங்கரவாதத்திற்கு எதிரான போர்ப் பிரகடனத்தின்' மூலம் உலக நாடுகளுக்கு மீண்டும் எச்சரிக்கை விடுத்துள்ளது. 'என் சொல்படி நடக்க வேண்டும்; இல்லாவிட்டால் ஒழித்து விடுவேன்' என்ற வெளிப்படையான மிரட்டலே இது!

அமெரிக்காவின், 'உலக பயங்கரவாதத்திற்கு எதிரான போர்' அறிவிப்பின் நோக்கம், வளர்ந்த நாடுகள் எனப்படும் 7 நாடுகள் (G-7) தவிர்த்து, மற்ற நாடுகளின் இராணுவம், பொருளாதாரம், சமூகம், கலாச்சாரம், தொழில்நுட்பம் முதலான துறைகளில் தான் இப்போது செலுத்தி வரும் ஏகாதிபத்தியத்தை மேலும் பெருக்கி இறுக்கமடையச் செய்ய வேண்டுமென்பதேயாகும். தன்னுடைய ஏகாதிபத்தியத்திற்குப் போட்டியும் எதிர்ப்பும் ஏற்படுவதைத் தடுக்கவும், தனக்கு உறுதுணையாக இருக்கவும், முதலாளியத்தைக் கொள்கையாகக் கொண்ட, தனக்கு அடுத்த நிலையில் வளர்ச்சியும் வலிமையும் பெற்றுள்ள மற்ற ஆறு நாடுகளை இணைத்து ஜி-7 நாடுகள் என்ற அமைப்பை உருவாக்கிக் கொண்டது அமெரிக்கா! அமெரிக்காவின் ஏகாதிபத்தியப் போக்கிற்கு ஒத்துழைப்பு அளிப்பதன் மூலம் உலகின் பிற நாடுகளைச் சுரண்டுவதற்குத் தமக்கும் நல்ல வாய்ப்பு கிடைக்கிறது என்பதால் மற்ற ஆறு நாடுகளும் இக்கூட்டுக் கொள்ளைத் திட்டத்தில் சேர்ந்தன.

இங்கு ஒரு கருத்தை நம் நினைவில் கொள்ள வேண்டும். ஜி-7 நாடுகளின் நலன்கள் என்று கூறப்படுவது அந்தந்த நாடுகளில் உள்ள பெரு முதலாளிகளின், பன்னாட்டு நிறுவனங்களின் நலன்களைக் காப்பது என்பதாகும்.

இன்று, உலகில் குறிப்பிட்டுச் சொல்லும் படியானவை என்று 500 பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளன. இவற்றுள் 200 நிறுவனங்கள் ஏகபோக நிலையில் உள்ளன. இந்த 200 பன்னாட்டு நிறுவனங்களில் பெரும்பாலானவை ஜி-7 நாடுகளில் உள்ளன. எஞ்சியவை மேற்கு அய்ரோப்பாவின் பிற நாடுகளில் உள்ளன. இந்த 200இல் 83 பன்னாட்டு நிறுவனங்கள் அமெரிக்காவில் உள்ளன (Economic and Political weekly Sep.1.2001). ஜி-7 என்பது இப்போது ஜி-8 ஆக உயர்ந்துள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அமெரிக்காவுக்குப் போட்டி வல்லரசாக விளங்கிய சோவியத் ஒன்றியத்தைச் சிதறுண்டுப் போகச் செய்வதற்குத் தனக்குக் கையளாக

படிப்பகம்

www.padippakam.com



இருந்ததற்காக இரஷ்யாவை 8ஆவது நாடாக அமெரிக்கா சேர்த்துக் கொண்டது. இதற்காக இரஷ்யா அமெரிக்காவிடம் பல ஆண்டுகளாகக் கெஞ்சிக் கூத்தாடிக் கொண்டிருந்தது. ஜி-8 நாடுகள் அமைப்பில் இரஷ்யாவிற்கு ஒரு வேலைக்காரனுக்குரிய மரியாதை கூடத் தரப்படுவதில்லை.

இன்றைய நிலையை ஆராய்வதற்கும் புரிந்து கொள்வதற்கும் இதற்கு முன் இருந்த நிலையையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இத்தன்மையில் எவ்வாறு அமெரிக்கா கொடிய வல்லரசாக — ஏகாதிபத்தியமாக நிலை நாட்டிக் கொண்டது என்பதையும் அறிந்து கொள்ள வேண்டியுள்ளது.

1780களில் பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்ற அமெரிக்கா, 1870க்குள் உள்நாட்டிலிருந்த முரண்பாடுகளை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்தது. அய்ரோப்பாவிலிருந்து வந்து பெரும் எண்ணிக் கையில் குடியேறியிருந்த பிற மொழியினரும் ஆங்கிலமே தம் தாய்மொழி என்று ஏற்றுக் கொள்ளுமாறு செய்யப்பட்டனர். மொழி, இன வேறுபாடுகளைக் கடந்து அமெரிக்கர் என்ற 'தேசிய' உணர்வு வளர்த்தெடுக்கப்பட்டது. முதலாளியம் வேகமாக முழு வீச்சில் வளருவதற்கான அடிப்படைக் கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டன.

சொந்த நாட்டு மக்களை மட்டும் சுரண்டி முதலாளியம் வேகமாக வளர முடியாது என்பதால் அமெரிக்கக் கண்டத்தில் உள்ள கவுதமாலா, பனாமா, கியூபா, நிகராகு வா, ஹெய்தி ஹோண்டுராஸ், மெக்சிகோ முதலான நாடுகளில் தன் படை வலிமையின் துணையுடன் அமெரிக்காவின் பெரு முதலாளிகள் சுரண்டிக் கொழுப்பதற்கு வழிவகை செய்தது. ஆசியக் கண்டத்தில் சீனாவிலும் கொரியாவிலும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்க முதலே தன் இராணுவத்தை நிறுத்தி முதலாளியச் சுரண்டலைப் பெருக்கிக் கொண்டது.

முதல் உலகப் போரின் போதே மற்ற நாடுகளுக்குக் கடன் தருமளவிற்கு வளர்ந்திருந்த அமெரிக்கா, இரண்டாம் உலகப் போருக்குள் இராணுவ, பொருளாதார நிலைகளில் மற்ற எல்லா நாடுகளையும் விஞ்சுமளவிற்கு வலிமை வாய்ந்ததாக உயர்ந்திருந்தது. இரண்டாம் உலகப் போரின் முடிவிற்குள் உலக நாடுகளுக்கெல்லாம் தலைவனாக இருக்கக்கூடிய பேராற்றல் கொண்டிருப்பது அமெரிக்காவே என்று தன்னைப் பிரகடனப்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பை எதிர் நோக்கியிருந்தது அமெரிக்கா. சப்பான் பெர்ல் துறைமுகத்தின் மீது குண்டு வீசியதால் அப்பொன்னான வாய்ப்பு அமெரிக்காவுக்குக் கிடைத்தது. இன்னும் சில மாதங்களுக்கு மேல் சப்பான் போரில் தாக்குப் பிடிக்க முடியாது என்பதை அமெரிக்கா நன்கறிந்திருந்த போதிலும், 1945 ஆகஸ்டு 6 ஆம் நாள் சப்பான் நாட்டின் ஹிரோஷிமா நகரத்தின் மீது அணுகுண்டு வீசியது. அந்நகரில் வாழ்ந்திருந்த 3,50,000 மக்களில் 2,00,000 மக்கள் புற்றீசல்கள் போல் மடிந்தனர். மீண்டும் மூன்று நாட்கள் கழித்து ஆகஸ்டு 9ஆம் நாள் நாகசாகி மீது அணுகுண்டு போட்டது. அந்நகரின் 2,70,000 மக்களில் 1,40,000 மக்கள் மாண்டனர்.

இரண்டாம் உலகப் போர் விரைவில் முடிவுக்கு வந்துவிடும் என்று அறிந்திருந்தும் அமெரிக்கா அணுகுண்டுகளைப் போட்டது ஏன்? ஆய்வுக் கூடத்தில் புதிய மருந்தைச் சுண்டெலிகளைக் கொண்டு சோதித்துப் பார்ப்பது போல், அணுகுண்டு வெடிப்பால் எத்தனை மனிதர்கள் எவ்வாறு சாகிறார்கள்; அதன் பின்விளைவின் - பாதிப்புகள் எப்படியிருக்கும், எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதைக் கண்டறிவதற்காகவே இரண்டு நகரங்களின் மீது அமெரிக்கா அணுகுண்டுகளைப் போட்டது. போர் முடிந்த பிறகு பரிசோதித்துப் பார்க்க வாய்ப்பிருக்காது அல்லவா? மனிதர்களைக் கொல்வது என்பது அமெரிக்காவின் தொப்பூழ்க் கொடியுடன் பின்னிப் பிணைத்திருப்பதாகும். அமெரிக்காவின் தொல்குடியினரான செவ்விந்தியரான ஒரு கோடி மக்களை கிறித்தவப் பாதிரிகளின் துணையுடன் கொன்று அவர்களின் பிணங்கள் மீதுதான் இன்றைய அமெரிக்கா கட்டப்பட்டது. 1960க்குப் பிறகுதான் இந்த உண்மை உலகிற்குத் தெரிய வந்தது.

இரண்டாம் உலகப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காகவே அமெரிக்கா அணுகுண்டு போட்டது என்று நம் பாட நூல்களில் எழுதப்பட்டிருப்பது வடிகட்டிய பொய்! இது அமெரிக்காவை உலக சமாதானத் தூதுவனாகக் காட்டும் முயற்சியாகும். 'இனி இவ்வுலகின் சாம்ராட் நானே' என்று தன் வரவை அறிவிக்கும் இடிமுழக்கமே அமெரிக்கா வீசிய அணுகுண்டுகள்! இரண்டாம் உலகப் போர் முடிவுற்றது முதல் ஆப்கான்மீதான போர் வரையில் அமெரிக்கா மேற்கொண்ட அணுகுமுறைகளும், செயல்பாடுகளும் இக்கருத்தை உறுதி செய்கின்றன.

போரினால் சீர்குலைந்த பொருளாதாரத்தை விரைந்து செப்பனிட்டுச் செயல்பட வைப்பதற்காக 1948-இல் 'காட்' (காப்புவரி மற்றும் வணிகம் பற்றிய பொது ஒப்பந்தக் கூட்டமைப்பு - GATT) அமைப்பு உருவாக்கப்பட்டது. இதே போன்று உலக வங்கி, பன்னாட்டு நிதியம் (IMF) ஆகியவையும் ஏற்படுத்தப்பட்டன. இம்மூன்று அமைப்புகளின் மூலம் ஜி-7 நாடுகளான அமெரிக்கா, கனடா, பிரிட்டன், பிரான்சு, செருமனி, இத்தாலி, சப்பான் ஆகியவை தொழில் துறையிலும், பொருளாதாரத் திலும் மற்ற நாடுகளின் இயலாமைகளையும் ஏமாளித்தனத்தையும் பயன்படுத்திக் கொண்டு வேகமாக வளர்ந்தன.

இரண்டாம் உலகப் போரில் மிகுந்த பொருளிழப்புக்குள்ளான நாடு சோவியத் ஒன்றியமே!

படிப்பகம்

www.padippakam.com



அதேபோல் அதிக மக்களை (இரண்டு கோடி) இழந்ததும் அதுவே! இந்நிலையிலும் ஸ்டாலினின் ஒப்பற்ற தலைமையால் சோவியத் ஒன்றியம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்தது. இதனால் கிழக்கு அய்ரோப்பிய நாடுகள் பலவும், கிழக்கு செருமனியும் சோசலிச நாடுகளாயின.

1917-இல் லெனின் தலைமையில் சோசலிச சோவியத் ஒன்றியம் உருவான போதே கம்யூனிசப் புரட்சியை முறியடிக்க 20,000 பேர் கொண்ட தன் கடற்படையை (1918 - 1922) அனுப்பியது, அமெரிக்கா. இரண்டாம் உலகப் போருக்குப் பின் 1949-இல் மாசேதுங் தலைமையில் சீனத்தில் கம்யூனிச ஆட்சி ஏற்பட்டதால் அமெரிக்காவின் கம்யூனிச எதிர்ப்பு ஒரு வெறியாக மாறியது. ஜி-7 நாடுகளின் துணையுடன் கம்யூனிச எதிர்ப்புப் பிரச்சாரத்தைத் தீவிரப்படுத் தியது. இந்தியாவில் ஆதிக்க சக்தியாக இருக்கும் மேல்சாதி - முதலாளிய - நிலப்பிரபுவத்துவக் கும்பல் அமெரிக்காவின் ஊதுகுழலாக கம்யூனிச எதிர்ப்புப் பிரச்சாரத்தை இன்றளவும் செய்து வருகின்றது. இப்போது இந்துத்துவக் கும்பல் இதில் முதலிடம் வகிக்கிறது.

கம்யூனிச ஆட்சி புதியதாக வேறு எந்தவொரு நாட்டிலும் ஏற்படாமல் தடுப்பதற்காக மட்டுமின்றி, எந்தவொரு நாட்டிலும் கம்யூனிஸ்டுகள் வலிமையான சக்தியாக வளர்வதை நசுக்கவும், *1945* முதல் *1990* வரை அமெரிக்கா மனித வரலாறு கண்டிராத எண்ணற்ற கொடுஞ் செயல்களை பல நாடுகளில் கோடிக் கணக்கான மக்கள் மீது கட்டவிழ்த்து விட்டது. மனிதஉரிமை, மனிதச் சுதந்திரம், சனநாயகம் ஆகியவற்றைக் காப்பதற்காகவே இச்செயல்களில் ஈடுபடுவதாகக் கூறிக் கொண்டது. பொதுமக்களிடம் கருத்தை உருவாக்குவதைப் பெரும் தொழிலாக உருவாக்கி வளர்த்தது. இத் தொழிலுக்காகப் பல கோடி டாலர் பணத்தைத் தொடர்ந்து செலவிட்டு வருகின்றது. படை வலிமையை விட பிரச்சார வலிமைதான் தம் ஏகாதிபத்திய நலன்களையும், பொருளாதாரச் சுரண்டலையும் பெருக்கிக் கொள்வதற்கு ஏற்ற சாதனம் என்பதால் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளும் பன்னாட்டு நிறுவனங் களும் தகவல் தொழில் நுட்பத்தை வளர்ப்பதற்கும் அவற்றின் மூலம் பிரச்சாரம் செய்வதற்கும் கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்து வருகின்றன. *1994*இல் உலக நாடுகளின் மொத்த இராணுவச் செலவு *778* பில்லியன் டாலர். *1998*-இல் உலகில் விளம்பரத்திற்காக மட்டும் செலவழிக்கப் பட்ட தொகை *437* பில்லியன் டாலர்.

*1950-53* களில் வட கொரியாவில் கம்யூனிச ஆட்சியை ஒழிக்க வேண்டும் என்பதற்காக அமெரிக்கா அந்நாட்டை ஆக்கிரமிப்புச் செய்து வீடுகள், நகரங்கள், ஆலைகள் மீது குண்டுகளை வீசி *30* இலட்சம் மக்களைக் கொன்றது. இன்றும் தென் கொரியாவில் *40,000* அமெரிக்கப் படைகள் உள்ளன.

*1960-75* காலக் கட்டத்தில் வட வியட்நாமில் ஹோசிமின் தலைமையிலான கம்யூனிச ஆட்சியை அழிக்க *5,50,000* அமெரிக்கப் படையினர் சென்றனர். *30* இலட்சம் வியட்நாம் மக்கள் கொல்லப்பட்டனர். மக்கள் மீதும் காடுகள் மீதும் இரசாயனத் தாக்குதல்கள் நடத்தப் பட்டன. ஆனால் இறுதியில் அமெரிக்கா அவமானப் பட்டுத் தோற்றுத் திரும்பியது.

*1965*-இல் இந்தோனேசியாவில் கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு அதிகரிப்பதைக் கண்டு சி.அய்.ஏ சதி மூலம் சுகர்னோ ஆட்சியைக் கவிழ்த்து கம்யூனிஸ் டுகள் மற்றும் தொழிலாளர்கள் *7* இலட்சம் பேரைக் கொலை செய்தது. இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் மற்ற பல நாடுகளிலும் தொழிலாளர்களுக்கு ஆதரவாக அந்நாட்டு அரசுகள் செயல்பட முனைந்தாலும் அந்த ஆட்சிகளைக் கவிழ்த்து தன் பொம்மை ஆட்சியை நிறுவுவதே அமெரிக்காவின் தலையாய வேலையாக இருந்தது.

இவ்வாறு மூன்றாம் உலக நாடுகளில் நேரடி யாகவும் சி.அய்.ஏ மூலம் மறைமுகமாகவும் தலையிட்டு அமெரிக்காவின் முதலாளிகள் தங்குத் தடையின்றித் தொழில்வளர்ச்சி, வணிகம் என்ற பெயர்களால் தங்கள் பொருளாதாரச் சுரண்டலை வளர்த்துக் கொள்ள வழியமைத்துக் கொடுத்தது. அதே சமயம் கம்யூனிசத் தத்துவம் பரவவும், செயல் வடிவம் பெறவும் சோவியத் ஒன்றியம் ஆதரவு அளிப்பதைத் தடுப்பதற்காக விண்வெளி ஆய்வுப் போட்டி, நட்சத்திரப் போர் முதலானவற்றின் மூலம் சோவியத் நாட்டின் பொருளாதாரத்தைத் திசை திருப்பிச் சீர்குலையச் செய்தது. ஸ்டாலினுக்குப் பிறகு வந்த தலைவர்களையும், முக்கிய பதவிகளில் இருந்தவர்களையும் அவர்களின் பலவீனங்களைப் பயன்படுத்தித் துரோகிகளாக மாற்றியது. சோவியத் நாடு பல் பிடுங்கப்பட்ட பாம்பாக்கப்பட்டது. இறுதியாக கோர்பச்செவ் என்ற தன் கைத் தடியால் ஒரு தட்டு தட்டியது. சோவியத் ஒன்றியம் சிதறுண்டது.

பொதுவுடைமைத் தத்துவத்திற்கு உலகம் முழுவதும் ஏற்பட்ட பின்னடைவை, தனக்குப் போட்டியாக நின்ற சோவியத் நாட்டின் வீழ்ச்சியினைக் கொண்டு வெற்றிக் கனியாக்கிட முயன்றது அமெரிக்கா. *1980*களில் மனிதனின் சுதந்தரமும், உரிமைகளும், திறமைகளும், சனநாயகமும், மகிழ்ச்சியான வாழ்வும் செழிந்தோங்குவதற்குக் கட்டுப்பாடற்ற சந்தை, தாராளமயமாக்கல் உலக மயமாக்கல் என்கிற புதிய பொருளாதாரக் கொள்கையை அமெரிக்கா முன்மொழிந்தது. இதை நடைமுறைப்படுத்துவதற் காக தன் ஆதிக்கத்தில் உள்ள உலக வங்கியையும்,

படிப்பகம்

www.padippakam.com



பன்னாட்டு நிதியத்தையும் கருவியாகப் பயன் படுத்தியது.

மூன்றாம் உலக நாடுகளின் ஆட்சியாளர் களும், பெருமுதலாளிகளும் கையூட்டும் கொள்ளை இலாபமும் பெறுவதற்காக உலக வங்கியும், பன்னாட்டு நிதியமும் கட்டுப்பாடற்ற சந்தையை உருவாக்கு வதற்காக விதித்த நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு கோடிக்கணக்கில் கடன் பெற்றனர். இதன் விளைவு 1980-இல் மூன்றாம் உலக நாடுகளின் மொத்த கடன் 45,000 கோடி டாலர் என்றிருந்தானது, 1994இல் 1,40,000 கோடி டாலராக உயர்ந்தது. இப்போது இது 3,30,000 கோடி டாலர். இக்கடன் பணத்தை அரசியல் வாதிகளும், உயர் அதிகாரிகளும், பெருமுதலாளி களும் பங்கு போட்டுக் கொண்டனர். ஆனால் கடன் பெற்ற நாடுகளோ வட்டியும் கூடக் கட்ட முடியாமல் தவித்துக் கொண்டிருக்கின்றன.

அமெரிக்காவின் தலைமையிலான ஜி-7 எனப்படும் பெருமுதலாளிய நாடுகள் புதிய பொருளாதாரக் கொள்கையை மூன்றாம் உலக நாடுகள் மீது திணித்துத் தம் பொருளாதாரச் சுரண்டலைப் பெருக்குவதற்காக 1986இல் காட் அமைப்பின் அடிப்படையை மாற்றி அமைப்பதற்காக உருகுவே நாட்டில் பேச்சு வார்த்தை தொடங்கின. பல ஆண்டுகள் இப்பேச்சு வார்த்தை தொடர்ந்தது. வளர்ந்த நாடுகளின் சார்பில் பன்னாட்டு நிறுவனங்களே காட் ஒப்பந்த விதிகளைத் தீர்மானித் தன. இந்தியா போன்ற 'மிகப்பெரிய சனநாயக' நாடு கூட இப்பேச்சு வார்த்தையின் முடிவுகளை வடிவமைப்பதில் அனுமதிக்கப்படவில்லை. 1994 டிசம்பரில் காட் புதிய ஒப்பந்தம் உருவாயிற்று. 1995 சனவரி முதல் காட் என்ற பெயரும் ஒழிக்கப்பட்டு உலக வணிக அமைப்பு (WTO)' என்ற புதிய பெயர் சூட்டப்பட்டது. அமெரிக்காவின் தலைமையிலான ஏழு நாடுகளின் பொருளாதார சமூக, கலாச்சார ஏகாதிபத்திய நலன்களைப் பெருக்குவதற்கான அதிகார பூர்வமான அமைப்பே உலக வணிக அமைப்பு — அமெரிக்காவின் ஏகாதிபத்தியத்திற்கு அதிகார பூர்வ முத்திரை குத்துவதற்காக அய்க்கிய நாடுகள் அவை இருப்பது போல!

1990 முதல் இந்தியாவிலும் உலகின் பல நாடுகளிலும் கட்டுப்பாடற்ற சந்தை என்கிற புதிய பொருளாதாரக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. 1980க்கு முன் வரை உற்பத்தி செய்யப்பட்ட சரக்குகளும், பொருள்களும், இயந்திரங்களும், ஆயுதங்களும் உலக வணிகத்தில் பெரும் இடத்தைப் பெற்றிருந்தன. ஆனால் 1990க்குப் பிறகு சரக்குச் சந்தை என்பது தேய்ந்து நிதிச் சந்தை என்பது முதலிடம் பெற்றது. பன்னாட்டு நிறுவனங்கள் எல்லா நாடுகளிலும் உள்ள மற்ற நிறுவனங்களின் பங்குகளை வாங்குவது விற்பது என்ற சூதாட்டத்தில் இறங்கின.

இவற்றின் மூலம் கொள்ளை இலாபம் பெற்று வருகின்றன. இந்நிறுவனங்களுக்கு ஊழியம் செய்ய ஹர்ஷத் மேத்தாக்கள் எல்லா நாடுகளிலும் இருக்கின்றனர். மூலதனம் என்பது நடுத்தர மேல்தட்டு வர்க்கத்தினரின் நுகர்வுக்கான சாதனங்களை உற்பத்தி செய்வதில் மட்டுமே ஈடுபடுத்தப்பட்டு வருகிறது. தொலைக்காட்சிப் பெட்டிகள், குளிர்பதனப்பெட்டிகள், தொலைபேசிகள், செல்போன்கள், கணினிகள், வண்ண வண்ண - பல வடிவ மகிழுந்துகள், ஆடம்பர உணவு விடுதிகள் மட்டுமே பெருகியுள்ளன. தொலைக்காட்சி விளம்பரங்களைப் பார்த்தாலே இது விளங்கும். தொலைக்காட்சி விளம்பரங்கள் மூலம் பன்னாட்டு நிறுவனங்கள் மக்கள் உள்ளங்களை நஞ்சாக்கி வருகின்றன. நுகர்வுக் கலாச்சார நச்சு வலையில் ஏழை எளிய மக்களையும் சிக்க வைக்க வேண்டும் என்பதே அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நோக்கமாகும்.

ஆங்கில வழியில் படித்தால்தான் பெருமை, அறிவு வளரும், வேலை கிடைக்கும், வெளிநாடு போக முடியும், மாதந்தோறும் இலட்சக்கணக்கில் சம்பாதிக்க முடியும் என்று சிற்றூர்களில் வாழும் படிப்பறிவில்லாத ஏழைப் பெற்றோரும் நம்புகிறார்கள். இதுதான் ஏகாதிபத்தியத்தின் வெற்றி! தொழிற்கல்வியும் கணினிப் பயிற்சியும் பெற்ற சில ஆயிரம் அயல்நாட்டு இளைஞர்கள் குறைந்த ஊதியத்தில் பணி செய்திடத் தனக்கு வேண்டும் என்பதற்காக, அமெரிக்கா உருவாக்கியுள்ள ஆங்கில மோகம் இந்திய நாட்டின் கோடிக்கணக்கான குழந்தைகளையும், இளைஞர்களையும் பாழாக்கிக் கொண்டிருக்கிறது. மற்ற நாடுகளின் கல்வித்திட்டம், குளிர்பானம், மதுவகை, தின்பண்டம், திரைப்படம், பொழுதுபோக்குக் கலைகள் முதலானவை எப்படியிருக்க வேண்டும் என்பதையும் பன்னாட்டு நிறுவனங்கள் மூலம் அமெரிக்க ஏகாதிபத்தியம் முடிவு செய்து இயக்கி வருகிறது.

அமெரிக்காவின் ஏகாதிபத்திய நோக்கம் பற்றி அமெரிக்காவிலிருந்து வெளிவரும் 'தேசிய நலன்' (National Interest; Spring 2000) இதழில், ''இன்று பன்னாட்டு அமைப்பு முறை என்பது உலக நாடுகளுக்கிடையே சமத்துவமான அதிகாரப் பகிர்வு என்ற அடைப்படையின் மீது கட்டப்படவில்லை. அமெரிக்காவின் மேலாதிக்கத்தை மய்யப்படுத்தியே அது உருவாக்கப்பட்டுள்ளது. அதேபோன்று பன்னாட்டு நிதி நிறுவனங்களும் அமெரிக்காவின் நலன்களையே முதன்மையாகக் கொண்டு செயல்படுகின்றன. உலகில் உள்ள இராணுவப் பாதுகாப்புக் கட்டமைப்புகள் அமெரிக்காவின் தலைமையில் இருக்கின்ற அணியின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. இன்று அமெரிக்காவுக்குச் சாதகமாக இருக்கின்ற சூழ்நிலை அமெரிக்காவின் திட்டமிட்ட ஆதிக்கச் செயல்களால் உருவானதாகும். அமெரிக்கா தன் மேலாதிக்க நிலையைத் தளர்த்தி மற்ற நாடுகளும் உலகின் போக்கினை இயக்குவதில் இடமளிக்கக்

படிப்பகம்

www.padippakam.com



கூடாது. அரும்பாடுபட்டு உருவாக்கியுள்ள அமெரிக்க ஏகாதிபத்தியத்தை நூலிழையும் நெகிழ்ந்திட இடந்தராமல் இறுக்கமுடன் பின்பற்ற வேண்டும்'' (இந்து, சனவரி 16, 2002) என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

'அமெரிக்கா ஒரு சனநாயக நாடன்று. சனநாயாக நாடாக விளங்கிட வேண்டும் என்று அமெரிக்கா ஒருபோதும் முயன்றதுமில்லை. அரசியல் அகராதியின் இலக்கணப்படி கூறுவதானால், அமெரிக்காவில் இருப்பது "Polyarchy' ஆட்சிமுறை. இதன் பொருள், அரசியல் முறை, பொருளாதாரம், கலாச்சாரமுறை போன்றவற்றின் முக்கிய முடிவுகளை எடுக்கும் அதிகாரம் ஆதிக்கம் பெற்ற ஒரு சிறு கும்பலிடம் இருக்கும் என்பதாகும். பெரும்பான்மை மக்கள் இம் முடிவுகளை எவ்வித எதிர்ப்புமின்றி ஏற்குமாறு பல்வேறு ஊடகங்கள் மூலம் கற்பிக்கப்படுகிறார்கள்'' என்று கடந்த நவம்பர் மாதம் சென்னைக்கு வந்திருந்த அமெரிக்காவின் சிந்தனையாளர் நோம் சோம்ஸ்கி கூறினார். (Frontline டிசம்பர் 7, 2001) அப்போது அமெரிக்காவின் ஏகாதிபத்தியத்தையும் பயங்கரவாதப் போக்கையும் அவர் கடுமையாகச் சாடினார்.

'அமெரிக்கா சுதந்தரமும் உரிமையும் மிகுந்த நாடாயிற்றே, அதனால் மக்கள் உண்மைகளை அறிந்து கொள்ள முடியும் அல்லவா?' என்று நோம் சோம்ஸ்கியிடம் கேள்வி கேட்கப்பட்டது. 'தகவல் பெறும் உரிமை அமெரிக்காவில் இருப்பது போல் வேறு எந்தவொரு நாட்டிலும் இல்லை என்பது உண்மைதான்! இந்த உரிமையை அரசு திட்டமிட்டு மறுப்பதில்லை. ஆனால் அமெரிக்காவின் அறிவாளிகளும், படித்த வர்க்கமும் சுதந்தரப் பத்திரிகை உலகமும் முக்கியமான முடிவுகள் எவ்வாறு எடுக்கப்படுகின்றன என்ற உண்மைகளை மக்கள் அறியவிடாமல் தடுப்பதே தங்கள் தலையாய கடமை என்று கருதிச் செயல்படுகின்றனர். ஆப்கானிஸ்தானில் உண்மையில் என்ன நடக்கிறது என்பது அமெரிக்க மக்களுக்குத் தெரியாது. முக்கிய முடிவுகள் எவ்வாறு ஆளும் வர்க்கத்தால் எடுக்கப்படுகின்றன என்பதை மறைப்பதும், மேலோட்டமான, கவர்ச்சியான, ஈர்ப்பான செய்திகளில் மட்டுமே மக்கள் தம் விருப்பத்தை வளர்த்துக் கொள்ளுமாறு செய்வதும் விளம்பரத் துறையின் வேலையாகும்' என்று விளக்கினார்.

அமெரிக்காவில் படித்த வர்க்கமும் அறிவாளிகள் எனப்படும் கும்பலும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற் கும் பன்னாட்டு நிறுவனங்களுக்கும் கையாள்களாகச் செயல்படுவதைப் போலவே, இந்தியாவிலும் பார்ப்பன பனியாக் கும்பலும் மற்ற பிரிவுகளைச் சேர்ந்த அரசியல்வாதிகளும், உயர் அதிகாரிகளும், கல்வியாளர்களும், சமூகவியல் ஆய்வாளர்களும், பதவி, பணம், புகழ், சொத்து, சுகம், அதிகாரம் போன்றவைகளுக்கு எளிதில் தம்மை விற்றுக் கொண்டு அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைக் கூலிகளாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். கடந்த பத்தாண்டுகளில் இக்கயவர்களே இந்தியாவில் எல்லாத் துறைகளின் தலைமைப் பீடத்தையும் கைப்பற்றிக் கொண்டனர். செப்டம்பர் 11 அன்று நியூயார்க் நகரின் இரண்டு கட்டடங்கள் தகர்க்கப்பட்டதும், ஆப்கான் மீது போர் தொடுக்க அமெரிக்க இராணுவத்திற்கு இந்திய இராணுவத் தளங்களை அளிக்கத் தயாராக இருக்கிறோம் என்று பிரதமர் வாஜ்பாய் வலியச் சென்று ஆதரவைத் தெரிவித்தார். நியூயார்க் நகரக் கட்டடங்கள் மீதான தாக்குதல் இந்தியா மீது நடந்த தாக்குதல் போலவே இந்தியஆளும் வர்க்கத்தால் சித்திரிக்கப்பட்டது.

பொய்களை அம்பலப்படுத்தி உண்மைகளை மக்களுக்கு உணர்த்த வேண்டியது ஒரு நாட்டின் அறிவாளிகளின் பொறுப்பாகும். இது அறிவாளிகளின் வரலாற்றுக் கடமையாகும். ஆனால் இவர்கள் ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்களின் - ஆதிக்கச் சக்திகளின் மக்கள் விரோதக் கொடுஞ் செயல்களுக்குத் தங்க முலாம் பூசுவது, இவர்களின் ஊழல்களை மறைப்பது, இவர்களின் நலன்களைக் காப்பதற்காகப் பிரச்சாரம் செய்வது போன்ற அறிவு நாணயங் கெட்ட செயல்களைச் செய்வதையே தொழிலாக்கிக் கொண்டு விட்டனர். அதனால் கடந்த 50 ஆண்டுகளாக அமெரிக்கா செய்து வந்துள்ள கொடுஞ் செயல் களையும், கொலைகளையும் கண்டிப்பதற்குப் பதிலாக புதிய புதிய விளக்கங்களைக் கூறி வெகு மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

அமெரிக்க ஏகாதிபத்தியம் தன் நாட்டு முதலாளிகள், அறிவாளிகள், மற்ற நாடுகளில் உள்ள முதலாளிகள் அறிவாளிகள் ஆகியோருடன் சுரண்டல் கூட்டணி அமைத்துக் கொண்டு அனைத்து நாடுகளின் வெகுமக்களை வஞ்சித்து 'உலக சாம்ராட்டாக'த் தன்னை முடிசூட்டிக் கொண்டது. தன்னுடைய ஏகாதிபத்திய பயங்கரவாதத்தை மேலும் நிலைக்கச் செய்யவே 'உலக பயங்கரவாதத்தின் மீதான போர்' என்று அது கூச்சலிடுகிறது. படிப்பாளிகள், அறிவாளிகள் என்ற திருட்டுக் கும்பலும் குட்டி நாய் போல் கூடவே குரைக்கின்றன.

அமெரிக்க ஏகாதிபத்திய பயங்கரவாதத்தை வியட்நாம் மக்கள் தம் வீரஞ்செறிந்த போராட்டத்தின் மூலம், ஒப்பரிய தியாகத்தின் மூலம் புறமுதுகிட்டு ஓடச் செய்தனர். அதுபோல் உலக நாடுகள் அனைத்திலும் உள்ள ஒடுக்கப்பட்ட மக்கள் எழுச்சி பெற்று, வீறு கொண்டு அமெரிக்க ஏகாதிபத்திய பயங்கரவாதத்தை முறியடிக்க வேண்டும். மக்கள் சக்தியால் எதையும் சாதிக்க முடியும் என்பது வரலாறு நமக்குப் புகட்டும் பாடமாகும்.

படிப்பகம்

www.padippakam.com



# அறிவியல் தமிழின் தேவை

மருத்துவர் சு. நரேந்திரன்

*(2001 திசம்பர் இதழின் தொடர்ச்சி)*

**இயற்கையின் மீதான பயத்தைப் போக்கும் அறிவியல் நூல்கள்:**

இயற்கையைக் கண்டு பயந்த மனிதன் அப்பயத்தைப் போக்க மழைக்கு 'வருணபகவான்' என்று பெயர் வைத்து வணங்க ஆரம்பித்ததை அறிவியல் அடிப்படையில் மறுத்து உண்மையை நிரூபிக்க இயற்கை தொடர்பான நூல்களான 'பூர்ண சூர்ய கிரஹன விபரம்' (1871), பூகம்பம் எரிமலை இவைகளின் வரலாறு (1884), எரிமலைகளும். பூமியதிர்ச்சிகளும் சிருஷ்டியின் வேறு அதிசயங்களும் (1894) போன்ற நூல்கள் தோன்றின. பிறகு நிலத்தை அளக்க உதவும் சில நூல்கள் கணக்கர்களுக்காகவும் எழுதப்பட்டன (எ.கா. அளவை நூல் 1898. நில அளவு 1893).

**தொழிற் புரட்சியால் உருவான நூல்கள்:**

புதிய கண்டுபிடிப்புகள், (எ.கா) எந்திரங்கள், இயற்கையில் ஏற்படும் வேதியியல் பொருள்கள் தொடர்பான நூல்கள் ஆகியவை முதலில் ஆங்கிலேயர்களால் மொழிபெயர்ப்புகளாகவே எழுதப்பட்டு வந்து, ஒரு கட்டத்திற்குப் பிறகு இங்கிலாந்திலிருந்து பொறிகளை இறக்குமதி செய்யாமல் இந்தியாவில் தொழிற்சாலை தொடங்கும் எண்ணத்துடன் தமிழர்களை எழுத ஊக்குவித்துத் தாம் எழுதுவதை நிறுத்திக் கொண்டனர். (எ.கா) நீராவியையும், நீராவி இயந்திரத்தைப் பற்றியும் சொல்லியது (1898); (2) ஆயில் என்ஜின் (1916); மோட்டார் ரிப்பேர் இரகசியம் 1928 போன்றவை இக்காலத்தில் எழுதப்பட்ட புத்தகங்கள் ஆகும். வேதியியல் பற்றிய நூல்கள் மிகக்குறைவு.

உழுதுண்டு வாழ்பவர்கள் இந்நாட்டில் அதிக விழுக்காட்டினர். மேலும் அப்பொழுது தொழிற் சாலைகள், மருத்துவத்துறைத் தொடர்பு, வேதியியல் பயன்பாடு ஆகியவை வழக்கத்தில் அதிகமாய் இல்லாதிருந்ததால் அன்றாட வாழ்வில் வேதியியல் பயன்பாடு உணரப்படாத நிலை இருந்து வந்தது.

தொழில் மயமாவதற்கு முன் 1920 வரை 25 நூல்கள் உழவுத்தொழில் முன்னேற்றம் குறித்தும், 1940க்கு பிறகு தோட்டப்பயிர் பற்றிய நூல்களும் வெளி வந்துள்ளன. ஏனெனில் தொழில் மயமாக்கும் முயற்சிக்கு முந்தைய மக்கள் வாழ்க்கை வேளாண்மைக் கல்விமுறையை முதன்மையாகக் கொண்டிருந்தது. பிறகு வேளாண்மை தொழிற் புரட்சிக்கு உட்படுத்தப்பட்ட பிறகு தோட்டப்பயிர் குறித்த நூல்களும் அதிகம் வெளிவந்தன.

**பொது அறிவியல் நூல்கள் பள்ளிப் பாடப் புத்தகத் திற்காக வெளியிடப்பட்டமை:**

இதேபோல் அறிவியல் பாடத்திட்ட அடிப்படை யில் எழுந்த பொது அறிவியல் நூல்கள் பல. ஒரே வகுப்பிற்கு, ஒரே பாடத்திற்கு பல ஆசிரியர்கள் எழுதியுள்ள நிலையும் இங்கு உற்றுநோக்க வேண்டியதாக உள்ளது. இவற்றுள் தொடக்கப்பள்ளிப் பாடநூல்களை விட மேல்நிலைப்பள்ளி நூல்களே அதிகம். இந்திய விடுதலைக்குப் பின் பள்ளிகளில் அறிவியல் பாடங்கள் மாற்றியமைக்கப்பட்டு ஒரே வகுப்பிற்கு ஒரே ஆண்டில் 10 நூல்களுக்கு மேல் எழுதப்பட்டுள்ளன.

**இக்கால கட்ட அரசு ஆணைகளும் விளைவுகளும்:**

1937ல் தமிழகத்து உயர் நிலைப்பள்ளிகளில் தமிழே பயிற்று மொழியாயிற்று. பள்ளி இறுதித் தேர்வுக்கான 'ஏ' பிரிவுப் பாடங்களை (வரலாறு, நிலவியல், பொது அறிவியல் போன்றவை) தாய் மொழியில் கற்பிக்கத் தொடங்கி நாளடைவில் 'சி' பிரிவுப் பாடங்கட்கும் (வேதியியல், பௌதிகம், கணிதம் எனும் விருப்பப் பாடங்கள்) நீடிக்கப்படுவதால் தரமான அறிவியல் பாடநூல்கள் எழுதும் முயற்சிகள் அரும்பின.

1941இல் தான் மாணவர்கள் முதலாவதாக தமிழில் பள்ளியிறுதித் தேர்வினை எழுதினர். கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாக்கலாம் என்று தமிழக அரசு 1959இல் ஓர் ஆணையைப் பிறப்பித்தது. அந்த ஆணை 1937இல் பள்ளியின் பயிற்று மொழி பற்றிய ஆணையைப் போன்று திட்டவட்டமானதாக இல்லை. கலைத்துறைப் பாடங்களை விரும்பினால் தமிழில் நடத்தலாம் என்றும் ஆங்கிலமும் பயிற்று மொழியாகத் தொடர்ந்து நீடிக்கும் என்ற நிலையும் இருந்ததால் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. பலர் தடைகளை எழுப்பினர். ஆனால் 1937ஆம் ஆண்டு பள்ளிகளில் தமிழைப் பயிற்று மொழியாக்கிய போது தடைகள் எழும்பவில்லை. அறிவியல் நூல்களை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் வெளியிட்டது. 1938ஆம் ஆண்டு தமிழில் அறிவியலைக் கல்லூரியில் கற்பிக்கும் வகையில் வேதியியல் நூல்கள் இரு தொகுதிகளை வெளியிட்டது. மேலும் 1941இல் இயற்பியல் நூலின் இரு தொகுதிகளையும், 1942ஆம் ஆண்டு உயிரியல் நூலையும் தமிழில் வெளியிட்டது.

தமிழே தெரியாத பிள்ளைகளுக்கு ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு கற்க ஓரிரு பள்ளிகள் மட்டும் அனுமதிக்கப்பட்டன. அவைகள் கூட பட்டணங்களில் தான் இருந்தன. மிகச்சிறந்த

படிப்பகம்

www.padippakam.com



பள்ளிகள். உயர்தரப்பள்ளிகள் எனப் பெயர் கொண்டு நடைபெற்ற பள்ளிகள் கூடத் தமிழில் தான் பாடங்களைப் பயிற்றுவித்து வந்தன.

*1959ஆம்* ஆண்டு தமிழ்நாட்டுக் கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாக்குவதற்கான அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டபோது பள்ளிப் படிப்பையே கூட முடிக்காது சமுதாயத்தில் பண பலத்தால் பதவியும், பெருநிலையும் பெற்றவர்களும் பலதடைகளை எழுப்பினர்; நூல்கள் இல்லையே என்றனர்; தரம் கெட்டுப் போகும் என்றனர். இவற்றையெல்லாம் கேட்ட அரசு தன் ஆணையில் சில நெளிவு. சுளிவுகளை நுழைத்தது. கல்லூரிகளில் கலைத்துறைப் பாடங்களை விரும்பினால் தமிழில் நடத்தலாம், ஆங்கிலமும் பயிற்று மொழியாகத் தொடர்ந்து நீடிக்கும் என்றும்; அதற்கெனக் கற்போருக்கும் கற்பிப்போருக்கும் சில சலுகைகள் தரப்பெறும் என்றும் கூற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

1937இல் தமிழ் பயிற்றுமொழியான காரணத்தால் படிப்பறியாப் பாமரர்களின் பிள்ளைகள் கூடப் பள்ளிகளை எட்டிப்பார்த்தனர்; பலர் பள்ளி இறுதிவரை சென்றனர்; சிலரால் கல்லூரிகளையும் காண முடிந்தது. இவ்வளர்ச்சி நிலையைத் தடுத்து நிறுத்தவே சிலர் இவ்வாறு தடைகளை ஏற்படுத்தினர் என்று சமுதாய ரீதியில் கூர்ந்து நோக்கினால் புரியும். மேலும் பள்ளிகளில் இந்தி கட்டாய பாடமாக்கப்பட்டதும் கூர்ந்து கவனிக்கத்தக்கது.

*1940இல்* மொழியறிவோடு அவ்வப்பாடத்துறை அறிவும் பெற்ற ஆசிரியர்கள் தொகை பெருகியமையால் பாடநூல்களும் பொதுமக்கள் படிப்பதற்குப் பல நூல்களும் வெளிவந்தன. ''அஷ்டாவதனம்'' வீராசாமி செட்டியாரின் ''விநோத ரசமஞ்சரி''; இரங்கூனில் வெளியிடப் பெற்ற ''மானுடமர்ம சாஸ்திரம்''; சிங்காரவேலுவின் ''அபிதான சிந்தாமணி'' *(1910)*; இராஜாஜியின் ''திண்ணை இரசாயனம்''; பெ. நா. அப்புசாமியின் ''மின்சாரம்'', ''வானக்காட்சி'', ''நீங்களும் விஞ்ஞானமும்'', ஆர்.கே. விசுவநாதனின் ''ஆலயமணி'', ''விசுவரூபம்'' அணுவின் ஆனந்தத் தாண்டவம்; ஈ.த. இராஜேஸ்வரியின் ''சூரியன்'', வானக்குமிழ் ஆகிய இவையெல்லாம் முதல் நிலைத்தமிழ்த் தொண்டர்கள் தந்த அறிவியல் ஆக்கங்களாகும்.

*1959இல்* அரசு ஆணையை எதிர்த்தவர்களின் ஆசைக்கு இணங்க மழலையர் பள்ளிகளில் 3ஆம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் பயிற்றுமொழி ஆனது. இதனால் ஆங்கில மொழி வழி கற்பிக்கும் பள்ளிகள் புற்றீசல்கள் போல் தோன்றின. இவை பண்பாட்டினை அடியோடு அழிக்கவல்ல பள்ளிகள் என்பதனை எண்ணிப் பார்க்கக் கூட விரும்பாத நிலை தமிழகத்தில் நீடிக்கிறது.

கல்லூரிகளுக்கான பாடநூல்கள் இல்லை என்ற நிலையைக் களைய *1959இல்* கல்லூரித் தமிழ்க் கல்விக்குழு ஒன்று தோற்றுவிக்கப்பட்டுப், பின்னர், *1962* இல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் புகுமுக வகுப்பு, இளங்கலை, முதுகலைப் பட்டப்படிப்பு வரை நூல்களை வெளியிட்டது. 1975இல் பாட நூல்களின் எண்ணிக்கை 663 ஆக இருந்தது. ஆனால், அதன்பிறகு இந் நிறுவனம் அறிவியல் நூல்களை வெளியிடுவதை நிறுத்திவிட்டது. தமிழில் எழுதி வாங்கிய அறிவியல் நூல்கள் பல இன்னும் கைப்பிரதிகளாகவே இந்நிறுவனத்திடம் கேட்பாரற்றுக் கிடக்கின்றன.

(தொடரும்)


**இரண்டாம் புஷ்யமித்ரன் ஆட்சியில்**

**(வாஜ்பேயி ஆட்சியில்)**

**இராமாயணம் திரும்புகிறது!**




✱ இராமனைச் சொல்லியே நாடாளப் பார்க்கிறது பார்ப்பனக் கும்பல்

✱ இராமன் தென்னக மக்களின் வைரி - எதிரி என்பதே உண்மையான வரலாறு.

✱ இராமன் யாருக்குப் பிறந்தான், இராமன் எப்படிப் பட்ட பண்பினன் என்பதை அறிஞர் சந்திர சேகரப் பாவலர், தந்தை பெரியார் ஆகியோர் படம் பிடித்துள்ளனர்.

இந்த அரிய குறுநூலின் விலை உருவா **2**

✱ 06.1.2002 ஒரே நாளில் 1000 படிகளை மா.பெ.பொ.க.வினரும் மற்றும் ஆர்வலரும் வாங்கி விட்டனர்.

✱ நீங்கள் தலைக்கு 50, 100, 200 படிகள் என வாங்கிப் பரப்புங்கள்.

✱ 2002 பிப்ரவரி 16,17இல் புதுவை கம்பன் கலை அரங்கத்தில் நடைபெறும் பாவாணர் நூற்றாண்டு விழா - நான்காம் தனித்தமிழ் இலக்கிய மாநாடு ஆகிய இருநாள் நிகழ்ச்சிகளில் நிறைய பேர் வாங்குங்கள்!

✱ திருமணம் மற்றும் குடும்ப விழா நடத்துவோர் 500,1000 படிகள் என விலைக்கு வாங்கி விருந்தினர்க்கு அன்பளிப்பாக அளியுங்கள்.

✱ உரிய தொகையை உடனே அனுப்பிப் பெற்றிடுங்கள்.

கோடிக்கணக்கான தமிழர்க்கு இராமாயணம், பற்றிய உண்மையை உரைத்திட இலக்கக் கணக்கான படிகளையேனும் பெற்றுப் பரப்புங்கள்.

*பணம் அனுப்பிட முகவரி*

''சிந்தனையாளன்''

19 முருகப்பா தெரு, சேப்பாக்கம், சென்னை - 5.


படிப்பகம்

www.padippakam.com



மன்னார்சாமியின் மரத்தடி மன்றத்தில் இந்த மாத அரசியல் 9

# மடக்குறதுதான் மன்றமா?

- ஓலைப்பட்டி கந்தையா

(மன்னார் சாமி - மலர் ஆஸ்பத்திரி எதிரில் மரத்தடியில் செருப்புத் தைக்கிறவர். மலைக்குடி மருதமுத்து - மலர் ஆஸ்பத்திரிக்கு இதய அறுவைச் சிகிச்சைக்கு என்று 5 ஏக்கர் நிலத்தை விற்று விட்டு வந்தவர். இன்று மகள் வீடும் மரத்தடியும் என்று ஆகிவிட்டவர். ஏ.ஜி. ஆபீஸ் வெங்கடேசய்யர் - பதவி ஓய்வு பெற்ற அக்கவுண்டன்ட்)

மருதமுத்து : என்ன அய்யரே, ஒரு மாசமா காணாம போயிட்டீர், கண்ணகி சிலை போன மாதிரி.

மன்னார்சாமி : செருப்புக் கூடாரத்தை அந்த இடத்துக்கு மாத்தலாமின்னு இருந்தேங்க - அதுக்குள்ள, ராவோட ராவா ரோடு போட்டுட்டாங்க, கண்ணகி இருந்த இடத்திலே.

வெங்கடேசய்யர் : டெல்லிக்குப் போய் ஒருமாசம் - அய்ஸ் பெட்டிக்குள் இருந்த மாதிரி, உடம்பையும், மனசையும் தேத்திகிட்டு வந்தா - வரச்சேயே உங்கள் ரோதனை - செருப்பு, கண்ணகின்னு.

வந்தவர் : கண்ணகி பத்தி நீ பேசாதே, குடுமி! கனகவிசயன் தலையில் கல் ஏத்தினதுக்கு பழிவாங்கத் தானே — இரண்டாம் புஷ்யமித்திர சுங்கன் பேத்தி செயலலிதா இந்த ஆட்டம் ஆடுறா. நடக்க நடக்க செருப்பு பிய்யுது பாரும்! (கையில் தூக்கிக் காட்டிய பிய்ந்த செருப்பை மன்னார்சாமியிடம் கொடுத்து ஆணியடிக்கச் சொல்றார்)

வெங்கடேசய்யர் (மெல்லிய குரலில்): நடக்க நடக்க செருப்பு பிய்யாம அப்படியே இருக்குமா?

மருதமுத்து : வாயில் கையைப் பொத்தி அமைதி என்று காட்டுகிறார்.

மன்னார்சாமி : உங்க உணர்ச்சிகளைப் பாராட்டணும் அய்யா. காசு ஒன்னும் வேணாம். கண்ணகிக்கு குரல் கொடுத்ததே போதும். இந்தாங்க. (வந்தவர் போகிறார்)

வெங்கடேசய்யர் : மன்னார்சாமி உனக்குப் புத்தி இருக்கா — அவன் மலிவு விலை மதுவைக் குடிச்சி — கல்லிலும் முள்ளிலும் விழுந்து செருப்பைப் பிச்சுகிட்டு வந்தா — நீ பொழப்பத்துப் போய் ஓசியில் தச்சு குடுக்கிறீயே.

மன்னார்சாமி : உங்க நன்மைக்குத் தான் சாமி. எங்கேடா கண்ணகி சிலைன்னு, ரண்டு போட்டுடார்ன்னு வச்சிக்குங்க - உங்களால கண்ணகி சிலையைக் குடுக்க முடியுமா?

மருதமுத்து : கண்ணகி சிலை - அதே சிலை - அதே நிலை-ன்னு தமிழ் அமைப்புகள் குரல் கொடுத்திருக்கு. தினமணி சோதிடர் ராஜகோபாலன் - அதே இடத்தில் கண்ணகிக்குக் கோயில் கட்டுங்க-ங்கறார். தேவை இல்லை செயலலிதாவுக்கு, இதெல்லாம். ஒருபக்கம் ராமர் கோவிலுக்கு ஆதரவு குடுத்துகிட்டு இன்னொருபக்கம் - கண்ணகி சிலையை அப்புறப்படுத்தினா கொடுமை இல்லையா?

வெங்கடேசய்யர் : கண்ணகி - கண்ணகி! மார்பைத் திருகி எறிஞ்சா - மதுரை எரியுமான்னு - பெரியார் கேட்டாரே, அப்ப எங்கய்யா போனீங்க?

மருதமுத்து : அமைதியா இருந்தோம் - பெரியவர் சொல்றார்ன்னு. பாப்பானையும் பாம்பையும் கண்டா - பாம்பை விட்டுட்டு பாப்பானைக் கொல்லுன்னு கூடத்தான் பெரியார் சொன்னார். பெரியார் சொன்னதெல்லாம் கேட்டு நடந்திருந்தா - அ-னான்னு அட்சரம் சொல்ல ஒரு பாப்பாரப் புல் பூண்டு இருந்திருக்காதே! மடச்சாம்பிராணி அய்யரே - பூமியைப் பொளந்துகிட்டு சீதை காணாம போக முடியும்னா - மார்பைத் திருகி - கண்ணகி மதுரையை எரிக்க முடியாதா? பேத்தறதும் - புளுகிறதும் அப்படி என்ன - பாப்பாரக் கும்பலுக்கு காப்பிரைட் சமாச்சாரமா!

மன்னார்சாமி : மூனு கோடி தமிழ்ப் பெண்களில் - பத்து லட்சம் பேருக்கு கண்ணகின்னு பேர் இருக்குதுங்களாம். ஆளுக்கு ஒரு துடைப்பத்தோடு வந்தா - தமிழக அரசு தலைமைச் செயலகம் துடப்பத்தாலே மூடப்பட்டு விடும்.

வெங்கடேசய்யர் : ராஜகோபாலச்சாரி குலக்கல்வியில் கைவெச்ச மாதிரி - இந்தம்மா கண்ணகியில் கை வெச்சிருக்கா. தேவை இல்லாத விஷயம் - ஆண்டிப்பட்டி குறுக்கே வர்றச்சே! மூர்க்கனும், குரங்கும் கொண்டது விடாதாம். ஜெயலலிதாவும்னு சேத்துக்க வேண்டியதுதான். ஏன்யா - டெல்லியிலேயிருந்து வர்றேன் - டெல்லியில் என்ன செய்தின்னு கேக்க மாட்டீங்களா?

மருதமுத்து : எதுக்கு டெல்லிக்கு போனீர்? பாராளுமன்றத்துக்குக் குண்டு வெக்கவா?

படிப்பகம்

www.padippakam.com



**மன்னார்சாமி** : அய்யா, அப்படில்லாம் செய்ய மாட்டாங்களே! பெரியார் மையத்தை இடச்சது வேணா இருக்கும்.

**வெங்கடேசய்யர்** : பாராளுமன்றத்துக்கு குண்டுவெக்க - ஒருகாலத்தில் ஆசை பட்டுட்டன்யா - தேவகவுடா பிரதமரா இருந்தானே - அப்ப! ஒரு சூத்திரப் பிண்டம் - நாலு முழ வேட்டியை கட்டிண்டு பிரதமராம்! ஜவஹர்லால் நேரும் - இந்திராகாந்தியும் கம்பீரமா அமர்ந்த இருக்கையில் இந்த கர்நாடகா - கருப்பு சூத்திரன்!

**மருதமுத்து** ; ஒரு சூத்திரன் வந்ததுக்கே, உமக்கு குண்டு வைக்கத் தோணுதே - தொடர்ந்து ஜவஹர்லால் நேரு, மொரார்ஜி தேசாய், நரசிம்மராவ், வாஜ்பேயி என்று பாப்பானா வந்து வதைக்கிறீங்களே — எங்களுக்கு எப்படி இருக்கும்?

**மன்னார்சாமி** : (செருப்பை தரையில் அடித்து) அப்படிப் போடுங்க! 24 விழுக்காடு பள்ளு, பறை, சக்கிலிங்க ஒரு பிரதமர் வரலை. நாலு விழுக்காடு பிராமணர் ஏழு பிரதமர்! இதுக்குப் பேரு — ஜனநாயகம்.

**வெங்கடேசய்யர்**: அப்ப நீ போய் குண்டு வெக்கிறது தானேய்யா - எதுக்கு பாகிஸ்தான் காரனை உடுறே!

**மருதமுத்து** : யாரு செஞ்சாலென்னா? சத்தியம் வெல்லுகிறது. என்ன அட்டூழியம் பன்றீங்க - நாலு சதவீதம் பிராமணர்கள்.

மொஹஞ்சதாரோவுக்கு முந்தி - சரஸ்வதி நாகரிகமாம். அது பிராமணர்களுதாம்

இந்துக்களுக்காக உயிர் விடும் வலிமையும் மன உறுதியும் எனக்குக் கொடு — இது நான்காம் வகுப்புப் பாடம்.

பார்ப்பன மூதாதையர்களான மனுவும் சத்துருக்கனும்தான் இந்த உலகிற்கே உயிர் கொடுத்தார்கள் - இது 8ம் வகுப்புப் பாடம்

தீயில் பழுத்த குறடுகளால் - சம்பாஜி என்ற இந்துவின் சதைகளைப் பிய்த்து எறிய அவுரங்க்சீப் ஆணையிட்டார் - நான்காம் வகுப்பு புத்தகக் கதை

பண்டைய இந்தியர்கள் மாட்டுக்கறி சாப்பிட்டார்கள் என்று 11-ம் வகுப்புப் பாடம். அதில் மனம் புண்படுகிறதாம். அந்தப் பாடம் நீக்கப்பட்டு விட்டது.

புத்தமதம் பரவியபோது - உயிர்பலி குறைந்து பிராமணர்களுக்கு வருமானம் இல்லாமல் போனது என்று பாடத்தில் வருகிறது. அதிலும் மனம் புண்படுகிறதாம். நீக்கி விட்டார்கள்.

**வெங்கடேசய்யர்** : இதெல்லாம் உமக்கு யார் சொன்னது?

**மருதமுத்து** : இத இருக்கு - சிந்தனைச் சரம் - ஜனவரி 2002ல் - ஜனசக்தி எஸ். சோமு கட்டுரை படியுமே.

**மன்னார்சாமி** : இந்த நவீனயுகத்தில் - எல்லாரும் முழிச்சுக் கிட்ட காலக் கட்டத்தில் பொய் - திருட்டு - பித்தலாட்டம் செய்ய, வெட்கம், மானம், உணர்வு இடந்தருமா சாமி?

**வெங்கடேசய்யர்** : ராமசாமி நாயக்கன் விதைச்ச விஷ விதைகள் - ஈஸ்வரா - இப்படி மூலைக்கு மூலை வெடிச்சுக் கிளம்புதே!

**மன்னார்சாமி** : அதனாலதான் - டெல்லி பெரியார் மையத்தை இடிச்சீங்களா சாமி!

**வெங்கடேசய்யர்** : நான் எங்கய்யா இடிச்சேன் - விதியை மீறின கட்டிடம்னு டிடிஏ - காரன்லே இடிச்சான்.

**மருதமுத்து** : ஏன்யா - சவுண்டித் திலக சாம்பார் பிண்டமே - நீர் இடிக்கலைன்னா இன்னொரு - சாமி இடிச்சான். ஒரு முன்னாள் பிரதமர் திறந்து வைக்கிறார் - டெல்லியின் முதல்வர் ஷீலா தீட்சித் முன்னால் ரூ 5லட்சம் நன்கொடை தருகிறார் - டெல்லியிலிருந்து 40 கிலோ மீட்டர் தள்ளி - இர்கான் மாவட்டத்தில் - டிடிஏவுக்கு உட்படாத பகுதியில் - கோர்ட் தந்த தடை உத்தரவையும் மீறி, இடிக்கிறீங்கன்னா - சங்கரமடம், சங்கர மகாவிஸ்வ வித்யாலயா - 65 அடி சங்கராச்சாரி சிலை - இவைகள் மட்டும் தமிழ் மண்ணில் நிலைச்சுடுமா?

**மன்னார்சாமி** :ஆத்திரப்படாதிங்க சாமி; நாய் ஒரு கடி கடிச்சா - நாம ஒரு கடி கடிக்க முடியுமா?

**வெங்கடேசய்யர்** : சரி சரி. நேரம் சரியில்லை. ஆண்டிப்பட்டி தேர்தல் பத்தி கொஞ்சம் பேசலாம்.

**மருதமுத்து** : ஆண்டிப்பட்டியிலே தேர்தல் எங்கய்யா இருக்கு? போலீஸ்காரர்கள், தேர்தல் அதிகாரிகள் எல்லாருமா 'செயலலிதா வெற்றின்னு' அறிவிக்கப் போறாங்க - அவ்வளவுதானே.

**வெங்கடேசய்யர்** : தேர்தல் கமிஷன் - ஒரு சுதந்திரமான அமைப்புங்கறது உமக்குத் தெரியாதா?

**மருதமுத்து** : கிழிச்சீங்க. நீதிமன்றங்களையும் தான் சுதந்திரமான அமைப்புன்னு நினைச்சோம். காசை உட்டெறிஞ்சா - எல்லா நாயும்தான் தலைகீழா நடக்கும் போல்ருக்கே!

**மன்னார்சாமி** : அம்மாவே கள்ளிப்பால் குடுத்தா - குழந்தை என்னங்க பண்ணும்? ஆட்சியிலே இருக்கிறவங்க அநியாயம் பண்ணினா - மக்கள் என்ன பண்றது?

**மருதமுத்து** : ஆட்சியிலே இருக்கிறவனை அநியாயம் பண்ண வைக்கிறதுதான்யா - இங்கு

படிப்பகம்

www.padippakam.com



வேதம், சட்டம், எல்லாம். துலுக்கன்மசூதியை இடிச்சுப்பிட்டு, அங்கேதான் ராமா கோயில்னு - ராஜஸ்தானில் கல்தூணும், கட்டடப் பகுதியும், ராமர் சிலையும் செய்யறானுவளே! மத விஷயத்தில் - நீதிமன்றத் தீர்ப்பை ஏற்க முடியாதுன்னு - பெரிய பெரிய தலைவன் - அமைச்சன் எல்லாம் பேசறானே.

**வெங்கடேசய்யர் :** மருதமுத்து; இன்னிக்கு ரொம்ப 'காண்டா' இருக்கீர். ஒரு மாறுதலுக்கு கொஞ்சம் அகில உலக அரசியல் பேசலாம். இந்தியப் படைகள் எல்லையில் குவிக்கப்பட்டு விட்டன. முஷாரப் - சீனாவுக்கும் அங்கேயும் இங்கேயும் பீதியில் ஓடிண்டிருக்கார். 'பாகிஸ்தானை அடக்குறியா - இல்லை - பீரங்கிகளை உடட்டுமா' என்கிறார் வாஜ்பேய். ரொம்ப குஷியா இருக்கு.

**மருதமுத்து :** மெச்சிக்கணும். அந்தப் பக்கம் தலிபான் கிட்டே - அமெரிக்காகிட்டே அடி - உள்நாட்டு முஸ்லீம் கலகம் - தத்தளிக்கிற முஷாரப்பை மிரட்டுறது! தேர் காலில் சிக்கின கர்ணனை அம்பு வீசிக் கொன்ற அயோக்கிய சிகாமணிகள் தானே!

**வெங்கடேசய்யர் :** அறிவு இருக்கா உமக்கு? இந்தியாவுக்குள்ளே வந்து பாராளுமன்றத்தை தாக்குறான் - அவனுக்கு பரிஞ்சு பேசுறீரே!

**மருதமுத்து :** சொன்னபடி காஷ்மீர் மக்களுக்கு உரிமைகளை வழங்குங்க-ன்னு அகில உலகச் சமூகம் கேக்குதே - அதுக்கு என்ன பதில்? காஷ்மீருக்குத் தனி நிலை - தனி அரசியல் சட்டம் - தனிப் பிரதமர் தனிக்கொடி - எல்லாத்தையும் அகண்டபாரதக் கனவில் ஆர்.எஸ்.எஸ். கும்பல் முழுங்கிக்கிட்டே வந்தா, எல்லாரும் சும்மா இருக்கணுமா? உள்நாட்டில் மாநில சுயாட்சியை ஒழிச்சிட்டீங்க. வெளியுறவில் பாகிஸ்தானின் காந்தாரத்துக்கும் - பங்களாதேசின் காமபேத்துக்கும் ஆசைப்பட்டீங்க. **பேராசைக்காரனடா பாப்பான் - என்று பாரதி சொன்னது சரியாத்தானே இருக்கு.**

**மன்னார்சாமி :** செருப்பே கதின்னு கிடக்கிறோம் சாமி. இதே பெசன்ட்நகர் மகாலட்சுமி கோவிலில் மணி அடிச்ச அய்யர் மவன் - இப்ப மாருதி காரில் போறான். நாங்க மட்டும் என்ன பாவம் பண்ணினோம்? அம்பது வருட சுதந்திரத்தில் - அரைக்கா அங்குலம்கூட முன்னேற்றம் இல்லை.

**வெங்கடேசய்யர்** (துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு) எப்பிடி வந்தாலும் என்னையே மடக்குறீங்க. மரத்தடி மன்றமும் வாணாம் - ஒரு மசிரும் வாணாம். போங்கய்யா (கோபமாகக் கிளம்பிப் போகிறார்)

திராவிடர்இயக்கச்செயல்வீரர்—முன்னாள்அமைச்சர்

## எஸ்.டி. சோமசுந்தரம்

### படத்திறப்புவிழா



திராவிடர் இயக்கச் செயல்வீரரும், திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தைச் செயல்படு களமாக மாற்றியவரும், அ.இ.அ.தி.மு.க நிறுவனர்களுள் ஒருவரும், தமிழக முன்னாள் அமைச்சரும், நற்பண்பாளருமான எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தம் 79ஆம் அகவையில் 6-12-2001 அன்று மறைவுற்றார்.

அன்னாரின் உருவப் படத்திறப்பு விழா மிகச் சீரிய முறையில் பட்டுக்கோட்டையில், கோமள விலாஸ் திருமண மண்டபத்தில், 30-12-2001 ஞாயிறு காலை 11 மணிக்குத் தொடங்கி, மாலை 4 மணி வரையில் நடைபெற்றது.

விழாவுக்கு வந்திருந்தோரை எஸ்.டி.எஸ். துணைவியார், சகுந்தலா சோமசுந்தரம், மகன்கள் துரைமாணிக்கம், செல்வம் சார்பில் எஸ்.டி.ஆர். கலைச்செல்வன் வரவேற்றார். பா. இறையெழிலன் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார்.

விழா அமைப்பாளரும், முன்னாள் அமைச்சருமான சு. திருநாவுக்கரசர் படத்திறப்பு நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்றார். தமிழக முன்னாள் அமைச்சர் பண்ருட்டி எஸ். இராமச்சந்திரன் எஸ்.டி.எஸ். அவர்களின் திருவுருப் படத்தைத் திறந்து வைத்து அரியதொரு உரை நிகழ்த்தினார்.

எஸ்.டி. சோமசுந்தரம் அவர்களின் இயக்கத் தொண்டு, அமைச்சுப் பணி, பொதுநோக்கு இவற்றை நினைவு கூர்ந்து, இந்திய அரசின் நிதித்துறை இணை அமைச்சர் செஞ்சி. ந. இராமச்சந்திரன், வே. ஆனைமுத்து, ஏ.ஆர். மாரிமுத்து, டாக்டர் சி.என். அண்ணாபரிமளம், என்.ஆர். ரெங்கராசன், ஜெயபாரதி விசுவநாதன், முன்னாள் அமைச்சர் கோ.சி. மணி, முன்னாள் பேரவைத் தலைவர் சேடப்பட்டி முத்தய்யா, எஸ். பழனி மாணிக்கம், சுந்தரேசத் தேவர், கணபதி இராமசுப்பய்யா, எஸ். சிங்கார வடிவேலு, வி. வைத்தியலிங்கம், முன்னாள் அமைச்சர் வெள்ளூர் வீராசாமி, கவிஞர் அ. மறைமலையான், வீ. துரைமாணிக்கம், வீரையா, தெ. தியாகராசன், எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் மற்றும் பலர் உரையாற்றினர்.

புலவர் இளஞ்செழியன் நன்றி நவின்றிட, விழா நிறைவெய்தியது.

படிப்பகம்

www.padippakam.com



# தமிழுக்கு ஒரு கருவூலம் கண்ட தனியொரு தமிழ் மகன் காணீர்!

— து.தில்லைவனம்



பல்லடம் மாணிக்கம்

துறைதோறும் தமிழ்ப் பகைவர் வென்று வரும் காலமிது. இந்த நேரத்தில் தரம் வாய்ந்த தமிழ் நூல்களைக் காப்பாற்றியே தீருவது என்ற சீரிய நோக்கத் துடன், திருமுது குன்றத்தில் (விருத்தா சலத்தில்), உழைப்பால் உயர்ந்த தமிழ்மகன் ஒருவர் செயல்படத் தொடங்கித் தமிழ்க் கருவூலம் ஒன்றை நிறுவியுள்ளார்.

தமிழில் வெளிவந்துள்ள - இனியும் வெளிவரக் கூடிய அனைத்து நூல்களையும் ஒரே இடத்தில் தொகுத்துப் பாதுகாத்துப் பயன்படுத்தும் மாபெரும் நோக்கத்தோடு 'தமிழ் நூல் காப்பகம்' என்ற பெயரில் வசதி மிக்க அழகிய நூல் நிலையம் ஒன்றைத் தொடங்கியுள்ளார் பல்லடம் மாணிக்கம் அவர்கள்.

மாணிக்கம் அவர்கள், சாமி — வள்ளியம்மை என்ற இணையர்க்கு 23-11-1936 இல் பல்லடத்தில் பிறந்தார்.

இவருடைய தந்தையார் சூலூரை அடுத்த காரணம் பேட்டை என்னும் ஊரில் பிறந்தவர். அவர் தம் திருமணத்திற்குப் பின் வள்ளியம்மை பிறந்த ஊரான பல்லடத்திற்கே குடிபெயர்ந்தார். தந்தையார் வணிகத் திலும், வேளாண்மையிலும் ஈடுபட்டிருந்தார். மகன் மாணிக்கமும் அவற்றிலேயே ஈடுபட வேண்டும் எனப் பெரிதும் விரும்பினார். மாணிக்கத்திற்கு மூன்று தங்கைகள்.

பல்லடம் அரசு உயர்நிலைப் பள்ளியில் பயின்று பள்ளியிறுதி வகுப்புத் தேர்வில் வெற்றி பெற்ற மாணிக்கம், இரண்டு ஆண்டுகள் பல்லடத்தில் நூலகராகவும், பின்னர் கோவையில் நூற்பாலையில் இரண்டு ஆண்டுகளும் பணியாற்றினார்.

படிப்பார்வமும் தமிழார்வமும் மிக்க மாணிக்கம் அன்று தமிழ்ப் பல்கலைக் கழகமாகத் திகழ்ந்த அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் புலவர் படிப்பிற்காக 1959இல் சேர்ந்தார். தமிழ்நாட்டில் இன்று தலைசிறந்து விளங்கும் பல தமிழ் அறிஞர் களும், துணைவேந்தர்களும், அரசியல்வாதிகளும், பிற துறை அறிஞர்களும் அன்று அவருடன் ஒன்றாகப் பயின்றனர்; அல்லது அந்தக் கால கட்டத்தில் அண்ணாமலையில் பயின்று கொண்டிருந்தனர்.

பல்கலைக் கழகத்தில் பயின்று கொண்டு இருந்த போதே 1961இல் ''ஆயிரம் பூ'' என்ற இவருடைய கவிதை நூலைப் பாரி நிலையம் வெளியிட்டது. இந்நூலுக்கு கா. அப்பாத்துரை யாரும், பாவேந்தரும் அணிந்துரை அளித்திருந்தனர். பல்கலைக் கழகத்தில் இருந்த தமிழுணர்வாளர்களிடையே இவர் புகழ் பரவ இந்நூல் காரணமாய் அமைந்தது.

புலவர் பட்டம் பெற்றதும் 1962 முதல் சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். ஏ.கே. வேலன் அவர்கள் இவருடைய கவிதை நூலைப் புரட்டிப் பார்த்தார். இவருடைய கவிதை ஆற்றலை உணர்ந்த அவர் அப்போது தான் இயக்கி வந்த 'தேவி' என்னும் திரைப்படத்திற்கான 8 பாடல்களையும் இவரையே எழுதச் சொல்லி அப்படத்தை முடித்தார். மேற் கொண்டும் தாம் எடுக்கும் படங்களில் இவருக்கே வாய்ப்பளிக்கப் போவதாக அனைவரிடமும் கூறினார்.

இதனால் இவருக்குப் படத் துறையில் நாட்டம் அதிகமானாலும், நிலை தாழ்ந்து அத்துறையில் வாய்ப்புக்களைத் தேடிச் செல்லவில்லை. சென்னை யிலும் இவருக்கு முற்போக்குச் சிந்தனையாளர்கள், தமிழுணர்வாளர்கள் நட்பு வட்டம் பெருகிக் கொண்டே இருந்தது. வேலன் மேற்கொண்டு படம் எடுக்கவில்லை. மாணிக்கமும் பட வாய்ப்புக்காக அலையவில்லை.

தம் தங்கையர் திருமணங்களை முடித்து, 1972இல், திருமுதுகுன்றத்தைச் சார்ந்த திலகவதியை மணம் முடித்தார். மாமனார் பழனிச்சாமி பெரிய நகை வணிகர். அத்துடன் செங்கல் சூளை (பிரிக் சேம்பர்) யும் நடத்தி வந்தார். அடிக்கடி திருமுதுகுன்றம் வந்த மாணிக்கம் இத் தொழிலில் நாட்டம் கொண்டார்.

எனவே 1980இல் சென்னையில் ஆற்றிய தமிழ் ஆசிரியப் பணியில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு திருமுதுகுன்றத்திலேயே குடியேறினார்; கவிதா செங்கல் நிலையம் என்பதைத் தொடங்கினார். முத்துச்செல்வி, கவிதா என்ற இரு பெண் குழந்தைகள் பிறந்தனர்.

அவர்களை நன்கு படிக்க வைத்துப் பட்ட தாரி களாக்கி, மணம் முடித்துக்கொடுத்துள்ளார். அவர்களும் நிறைவாழ்வு வாழ்கின்றனர். திருமுது குன்றம் வந்ததும் ''நிறங்கள்'' என்னும் ஓர் இலக்கிய

படிப்பகம்

www.padippakam.com



**தமிழ் நூல் காப்பகம்** - திருமுதுகுன்றம்



அமைப்பை கவிஞர் பழமலய் போன்றோருடன் இணைந்து நடத்தி வந்தார்.

பின்னர், 'திருக்குறள் பண்பாட்டு ஆய்வு மய்யம்' என்ற அமைப்பைத் தொடங்கி நடத்தி வருகின்றார்.

1999 பொங்கல் முதல் இருதிங்கள் இதழாக 'வள்ளுவம்' என்னும் தரமிக்க ஏட்டினைத் தாமும், இ.சுந்தரமூர்த்தியும் (தற்போது தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்) ஆசிரியர்களாக இருந்து, ச.மெய்யப்பன் அவர்களைச் சிறப்பாசிரியராகக் கொண்டு வெளியிட்டு வருகின்றார். இவ் ஏடு தொய்வின்றி வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். ஒவ்வோர் இதழும் ஒரு சிறப்பு மலர் போன்று பாராட்டத்தக்க வண்ணம் வெளியிடப் படுகின்றது. வள்ளுவத்தைப் பரப்பும் சீரிய முயற்சியாகும் இது.

தாம் இதுவரை வாங்கி வைத்துள்ள 50,000க்கு மேற்பட்ட நூல்களையும், இனி வாங்கப் போகும் நூல்களையும் பேணிக்காக்கவும், மற்றவர்கள் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பளிக்கவும் விரும்பிய மாணிக்கம், தம் சொந்தச் செலவிலேயே ஒரு மாபெரும் நூலகமாகத் 'தமிழ் நூல் காப்பகம்' என்பதனைத் திருமுதுகுன்றத்தில், மணிமுத்தாற்றங் கரையில் சேலம் சாலையில், நகரத் தொடர் வண்டி நிலையத்திற்கு அடுத்து அமைத்துள்ளார்.

மொத்தம் 8,000 சதுர அடிப் பரப்பில் தரைத்தளமும், முதல் தளமுமாக இந்தக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. நூல்களை முறையாக அடுக்கி வைத்துப் பேணிப் பயன்படுத்துவோருக்கு வழங்கப் போதுமான இரேக்குகள், அலமாரிகள்; படிப்பவர் களுக்கு வசதியான இருக்கைகள், மேசைகள்; மின் விளக்குகள், விசிறிகள், குடிநீர்க் குழாய் வசதிகள் முதலான அனைத்தையும் மிகவும் கலைநயத்துடன் திட்டமிட்டு உருவாக்கி வருகின்றார். கட்டடம் எங்கும் மொசைக் தளத்தின் தூய்மை மிளிருகின்றது. வரவேற்பு அறை, அலுவலக அறை (கணினி வசதியுடன் கூடியது) மாணிக்கம் படிக்கவும் ஓய்வெடுக்கவும் விசாலமான ஓர் அறை, ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் தங்குவதற்கு வேண்டிய வசதிகள், போதிய குளியல், கழிப்பிட வசதிகள் ஆகிய அனைத்தும் கொண்ட காற்றோட் டமும், வெளிச்சமும் தங்கு தடையின்றிக் கிடைக்கும் வண்ணம் இந்தத் தமிழ்நூல் மாளிகை உருவாக்கப் பட்டுள்ளது பெரும் பாராட்டுக்கு உரியதாகும்.

முதல் தளத்தின் ஒரு பகுதியைப் படிப்பகமாகவும், இன்னொரு பகுதியைக் கூட்ட அரங்கமாகவும் பயன் படுத்தத் திட்டமிட்டுள்ளார். நூலகத்தில் நூல்களின் எண்ணிக்கையும், பயன்படுத்துவோர் எண்ணிக்கை யும் மிகும்போது இவற்றை (எதிர்காலத்தில் கட்ட நினைத்துள்ள) இரண்டாம் தளத்திற்குக் கொண்டு சென்று விட்டு, தரைத் தளத்தையும் முதல் தளத்தையும் நூல்களை அடுக்கி வைக்கவே பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளார்.

நகரச் சந்தடியிலிருந்து ஒதுங்கியுள்ள, படிப்பதற் கேற்ற, ஆராய்ச்சி செய்வதற்கேற்ற சூழ்நிலை மிகவும் இயற்கையாகவே இங்கு அமைந்து விடப் போகின்றது.

தமிழ் நூல் காப்பகக் கட்டட வேலை 2000 தைத் திங்களில் தொடங்கப்பட்டது. 2002 ஏப்பிரலுக்குள் முழுவதுமாக முடிந்துவிடும். ஏறத்தாழ 35 இலக்க ரூபாய்கள் கட்டடம், தளவாடம் ஆகியவற்றுக்கு மட்டுமே ஆன செலவு ஆகும். நூல்களின் விலையையும் சேர்த்தால் இதன் தொடக்க நிலைச் செலவே ஒரு கோடிக்கு மேல் செல்லுகின்றது.

இந்தக் காப்பகத்தைச் சுற்றிலும் ஓர் ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தில் பூங்கா அமைப்பதற்கான பணிகளும் தொடங்கப்பட்டுள்ளன. எட்டிப் பார்த்தால் தெரியும் மணிமுத்தாறு.

காப்பகம் செயல்படத் தொடங்கியதும் நாள்தோறும், திங்கள் தோறும் நடைமுறைச் செலவுகள், பணியாளர்கள் ஊதியம் முதலியவை வேறு உள்ளன. நினைத்தாலே மலைப்பை ஏற்படுத்துகின்றது. ஆனால் தன்னடக்கம் மிக்க சாதனையாளரான மாணிக்கம் மிகவும் நம்பிக்கை யுடனிருக்கின்றார்.

தம்முடைய முழுக் கவனமும் இந்தத் தமிழ்நூல் காப்பகத்தின் மீது மட்டுமே இருக்க வேண்டும் என்பதற்காகவே, தன்னுடைய பொருளாதார வளர்ச்சிக்குக் காரணமாக இருந்த செங்கற் சூளையையே இப்போது குத்தகைக்கு விட்டு விட்டார். அதிலிருந்து கிடைக்கும் தொகை காப்பகத்தின் நடைமுறைச் செலவுகளுக்குப் பற்றாது. இதற்கு வழி வகை காண முயன்று கொண்டுள்ளார்.

இவர் சேர்த்து வைத்துள்ள நூல்களின் பட்டியல் மிக மிக விரிவானது. ஆங்கிலம், தமிழ் மொழிகளில்

படிப்பகம்

www.padippakam.com



பல்வேறு கலைக் களஞ்சியங்கள், மருத்துவ நூல்கள், வரலாறு, தத்துவம், அரசியல், ஆய்வியல் நூல்கள், எண்ணற்ற இலக்கிய நூல்கள் இவருடைய கருவூலத்தில் உள்ளன. 1830 தொடங்கிப் பதிப்பிக்கப் பட்ட பல்வேறு துறை சார்ந்த நூல்களும் சேகரித்துப் பாதுகாக்கப்பட்டுள்ளன. திருக்குறளுக்குள்ள பல்வேறு பழம் பதிப்புகளும் இதில் அடங்கும்.

தமிழுணர்வுள்ளவர் எல்லோரும் இந்தத் தமிழ் நூல் காப்பகத்தை வளப்படுத்தவும் பயன்படுத்தவும் முன்வர வேண்டும்.

தங்களிடமுள்ள நூல்களைக் கால காலத்திற்கும் பயன்படும்படிப் பாதுகாத்து வைக்க இது ஓர் அரிய வாய்ப்பாகும்.

தமிழ் நூல்களைக் காப்பதின் மூலம், தமிழனின் வரலாறு, பண்பாடு, இலக்கியம் போன்ற தமிழனின் அனைத்துச் சிந்தனைகளும் அழியாமல் காப்பாற்றப் படுகிறது.

நிறைய நூல்களிருந்தாலும், குறைவாக நூல்கள் இருந்தாலும் காப்பகத்திற்கு அளிக்கலாம். அதைக் கொடுப்பவர் பெயரைக் காலத்திற்கும் நினைவு படுத்தும் வண்ணம் காப்பாற்றப்படும்.

தமிழ்நாட்டிற்குச் சொந்தமாக்கப்படும் இந்தத் 'தமிழ் நூல் காப்பகம்' ஓர் அறக்கட்டளையின் கீழ் இயங்கும்.

திருக்குறள் பற்றி மட்டும் 1500 நூல்களையும், 3000 கட்டுரைகளையும் இவர் திரட்டி வைத்துள்ளார். 'வள்ளுவம்' இதழில் திருக்குறள் தொடர்பானவை மட்டுமே வெளியிடப்படும் என்பதில் உறுதியாக இருக்கின்றார்.

எல்லாத் துறை நூல்களையும் — புதினங்கள் உட்பட, ஒரே இடத்தில் தொகுத்து வைத்துப் பயன்படுத்தும் பெரு நோக்கத்துடன் இக்காப்பகம் அமைக்கப்படுகின்றது.

நூல்கள் மட்டுமின்றி பி.எச்டி, எம்.பில், பட்ட ஆய்வேடுகள் ஆகியவற்றையும் தேடித் தொகுக்கத் தொடங்கிவிட்டார்.

தமிழ்நாட்டிலும், வேறு இடங்களில் வாழும் தமிழர்களிலும் பலர் தம் வாழ்நாளில் எண்ணற்ற நூல்களைப் பணம் கொடுத்து வாங்கிப் படித்துப் பயன் பெற்றுள்ளனர். தம் காலத்திற்குப் பின் அவற்றைப் பயன்படுத்துவோர் இல்லையே என்று கவலை கொள்ளுகின்றனர். அப்படிப் பட்டவர்களிட மிருந்து மாணிக்கம் அந்த நூல்களைப் பெற்று வருங்காலத் தலைமுறையினரின் பயன்பாட்டுக்கு அளிக்க அணியமாக உள்ளார்.

கோவை ஞானி, கவிஞர் 'சிற்பி', பேராசிரியர் க.ப. அறவாணன், பதிப்புச் செம்மல் ச.மெய்யப்பன் ஆகியோர் தாங்கள் சேகரித்த நூல்களில் பெரும் பகுதியைத் தமிழ்நூல் காப்பகத்திற்கு அளித்துள்ளனர்!



து. தில்லைவனம்

பெரும் எண்ணிக்கையில் நூல்கள் அளித்தால், அவர்கள் விரும்பும் பெயரிலேயே அவற்றைத் தனிப்பிரிவாக வைத்துப் பேணவும் தயாராக உள்ளார். எல்லா நூல்களிலும் யாரிடம் இருந்து பெறப்பட்டவை என்பதை நன்றிப் பெருக்குடன் அந்தந்த நூலிலேயே அடையாளங் எண்ணியுள்ளார். இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளத் தமிழர்கள் முன் வர வேண்டும்.

பல்லடம் மாணிக்கம் அவர்கள் கடந்த 40 ஆண்டு களாகவே தமிழ் உணர்வாளர் களில் மிகப் பெரும்பாலா னோரிடம் உவப்பத் தலை கூடி உள்ளப் பிரியும் தொடர்பு கொண்டுள்ளவர்.

இத்துணைப் பெரும் சுமைகளுக்கு இடையேயும்:

திருக்குறள் களஞ்சியம் கொண்டு வருதல்

விருத்தாசலத்திற்குத் திருமுதுகுன்றம் எனப் பெயர் மாற்றம் செய்தல்

தொன்மை வரலாற்றில் தோய்ந்த திருமுதுகுன்றத் தின் வரலாற்றை ஆய்வு நோக்கில் தொகுத்தளித்தல் போன்ற வேலைகளிலும் மிக்க கவனம் செலுத்திக் கொண்டுள்ளார்.

தனியொரு மனிதராக முயன்று அவரால் இவ்வளவையும் எவ்வாறு செய்ய முடிகின்றது என்று நாம் எண்ணும்போது, அவருடைய குடும்பத்தினரின் ஒத்துழைப்பின் அளவு புலப்படும். ''மாணிக்கத்திற்கு 'தமிழ்தான் உணவு, குடிநீர், சுவாசம்'' என்று 'நக்கீரன்' இதழ் குறிப்பிட்டது நூற்றுக்கு நூறு உண்மையாகும்.

'தமிழுக்கு ஒரு கருவூலம் கண்ட தனியொரு தமிழ்மகனைக் காணீர்' என, நெஞ்சாரப் பாராட்டி மகிழ்கிறது, சிந்தனையாளன்.

வரலாற்றில் நிலையான ஒரு தடம் பதிக்கும் இவருடைய தமிழ்ப் பணியில் சிறிதளவேனும் ஈடுபட விரும்புவோர், அன்பு கூர்ந்து: பல்லடம் சாமி மாணிக்கம், கவிதா நிலையம், 31, பணி பூண்டார் தெரு, விருத்தாசலம் 606 001, தொலைபேசி 04143-31611; 30411

என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ள வேண்டுகின்றோம்.

செயற்கருஞ்செயல் செய்துள்ள நம் மாணிக்கத்தின் பணிகளைக் கண்டபின் 'மெல்லத் தமிழினிச் சாகும்' என்ற அச்சம் சற்றே விலகியது.

மாணிக்கத் தமிழ்ப் பணியில் நம்மையும் இணைத்துக் கொள்வோம். வாரீர்!

*('சிந்தனையாளன்' - 2002 பொங்கல் சிறப்பு மலர்)*

படிப்பகம்

www.padippakam.com



## ''சிந்தனையாளன்'' தமிழ் மாத ஏட்டில் விளம்பரம் வெளியிட முந்துங்கள்!



★ 'சிந்தனையாளன்' ஏடு - 2002 செப்டம்பரில், 25ஆம் ஆண்டைத் தொடங்குகிறது.

★ 'சிந்தனையாளன்' ஏடு தமிழ்நாடு மற்றும் இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலும் படிக்கப்படுகிறது.

★ 'சிந்தனையாளன்' ஏடு அமெரிக்கா, இங்கிலாந்து, கனடா, பிரான்சு, ஆஸ்திரேலியா, மலேசியா, சிங்கப்பூர் முதலான அயல்நாட்டினரால் விரும்பிப் படிக்கப் படுகிறது.

★ 'சிந்தனையாளன்' ஏடு அரசியல், சமுதாயம், பொருளியல், ஈழ விடுதலை, இந்தியாவில் உண்மையான கூட்டாட்சி, தமிழ் வழிக் கல்வி, இட ஒதுக்கீடு பற்றிய செய்திகளில் ஊட்டமான - தெளிவான கருத்துக்களைத் தாங்கி வெளிவருகிறது.

★ 'சிந்தனையாளன்' ஏடு 1989 முதல் ஆண்டு தோறும் சிறப்பு மலரை வெளியிடுகிறது. தீபாவளி மலர்களே அதிக எண்ணிக்கையில் வெளிவரும் தமிழ்நாட்டில் இது ஒரு சிறந்த சாதனை.

வணிகப் பெருமக்களே! தொழில் உரிமையாளர்களே! பெரியார் கொள்கை - அம்பேத்கர் கொள்கை பரவ விருப்பம் உள்ளவர்களே!

மாதந்தோறும் 'சிந்தனையாளன்' ஏட்டில் விளம்பரங்கள் தந்து உங்களின் முன்னேற்றம், ஏட்டின் முன்னேற்றம் இவ்விரண்டிற்கும் உதவி புரியுங்கள்.

### விளம்பரக் கட்டண விவரம்

| | | | |
|---|---|---|---|
| ★ உள்ளே முழுப்பக்கம் | 2000 | ★ உள்ளே அரைப்பக்கம் | 1000 |
| ★ அட்டை 2,3 ஆம் பக்கம் | 5,000 | ★ உள்ளே கால் பக்கம் | 500 |
| ★ அட்டை 4 ஆம் பக்கம் | 10,000 (மூவண்ணம்) | | |

பணம் , விளம்பர விவரம் அனுப்ப வேண்டிய முகவரி :

**சிந்தனையாளன், SINTHANAIYALAN**

19 முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை 600 005 தொலைபேசி : 852 28 62

ஆசிரியர் குழுவினர் 'சிந்தனையாளன்'




## ''சிந்தனையாளன் - 2002 பொங்கல் சிறப்பு மலர்''

**520 பக்கங்கள் * பலவண்ண முகப்பு * அழகிய அச்சு * 42 அறிஞர்களின் கட்டுரைகள் * 11 பாவலர்களின் பாடல்கள் அரிய படங்கள் * பழைய வரலாற்றுச் செய்திகள் அடங்கிய ஒரு பூங்கொத்து இது.**

தமிழரின் பண்பாடு, பொங்கல் விழாச் சிறப்பு, தமிழிலக்கியங்கள் தரும் காட்சி, தமிழீழ விடுதலையின் முதன்மை, தமிழ் வழிக் கல்வியின் தேவை, சுய மரியாதை இயக்கத்தின் தோற்றம், தமிழரின் இன்றைய அவல நிலை, தமிழக வேளாண்மை - தொழில் சிக்கல்கள் பற்றிய அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய ஒரு கருத்துப் பேழை, இம்மலர்.

பண்டித அயோத்திதாசர், அர்த்த நாரீச வர்மா, தந்தை பெரியார், மேதை அம்பேத்கர், பாவேந்தர், தேவ நேயப்பாவாணர் முதலானோரின் சிந்தனைகளைக் கொண்ட ஒரு பெட்டகம், இது.

**இவ்வளவு சிறப்புகளையும் கொண்ட மலரின் விலை ரூ.60/-**

அஞ்சலில் பெற விரும்புவோர் ரூ. 75 விடுத்திடுங்கள்.

பணம் அனுப்பிட :

**சிந்தனையாளன் - SINTHANAIYALAN**

19, முருகப்பா தெரு, சேப்பாக்கம், சென்னை 600 005 தொலைபேசி : 852 28 62

படிப்பகம்

www.padippakam.com



## மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி மாவட்டப் பொறுப்பாளர்களுக்கு வேண்டுகோள்

★ மாவட்டந்தோறும் சுயமரியாதை, சமதர்மக் கொள்கைப் பயிற்சி வகுப்பு நடை பெற வேண்டிய நாள்கள் விவரம் கீழே தரப்பட்டுள்ளது.

★ அந்தந்த மாவட்டத்தில் எந்த ஊரில், எந்த இடத்தில் பயிற்சி வகுப்பு நடத்துவது என்பதை இப்போதே முடிவு செய்யுங்கள்.

★ பயிற்சியாளர்களுக்கு உணவு அளித்திடவும், ஒரு நாள் பொதுக்கூட்டம் நடத்திடவும் ஆகும் செலவுக்கு வழி காணுங்கள்.

**எல்லா ஏற்பாடுகளையும் இறுதி செய்து கொண்டு, 22.2.2002க்குள் சென்னை தலைமை அலுவலகத்துக்குத் தெளிவான விவரங்களைத் தெரிவியுங்கள்.**

*பயிற்சி வகுப்பு நடப்பது பற்றிய முழு விவரம் 2002 மார்ச்சு 'சிந்தனையாளன்' இதழில் வெளியிடப்பட வேண்டும். இதற்கு உதவுங்கள்.*

*பயிற்சி வகுப்பு நடைபெறவுள்ள இடங்கள், நாள்கள்*

**நிகழ்ச்சி நிரல் : 2002 ஏப்பிரல், மே, சூன்**

**கொள்கைப் பயிற்சி வகுப்பு: சனி, ஞாயிறு இரண்டு நாள்கள்**

2002

ஏப்பிரல் *13, 14 - காஞ்சி மாவட்டம் - பயிற்சி வகுப்பு*
*13 அன்று மாலை - பவழ விழா நிறைவு நாள்*
*வெள்ளி விழா நிறைவு நாள் பொதுக்கூட்டம்.*
*20, 21 -சென்னை மாவட்டம் - பயிற்சி வகுப்பு*
*20 அன்று மாலை - பவழ விழா நிறைவு நாள்*
*வெள்ளிவிழா நிறைவு நாள் பொதுக்கூட்டம்*
*27, 28 வேலூர் மாவட்டம் - பயிற்சி வகுப்பு*
*27 அன்று மாலை - பவழ விழா நிறைவு நாள்*
*வெள்ளிவிழா நிறைவு நாள். பொதுக்கூட்டம்,*

மே *4, 5 - திருவண்ணாமலை மாவட்டம் - பயிற்சி வகுப்பு*
*4 அன்று மாலை - பவழ விழா நிறைவு நாள் -*
*வெள்ளிவிழா நிறைவு நாள் பொதுக்கூட்டம்*
*11, 12 - தருமபுரி மாவட்டம் - பயிற்சி வகுப்பு*
*11 அன்று மாலை - பவழ விழா நிறைவு நாள்*
*பொதுக்கூட்டம், வெள்ளிவிழா நிறைவு நாள்*
*18, 19 அரியலூர் - பெரம்பலூர் - திருச்சி மாவட்டங்கள் - பயிற்சி வகுப்பு*
*18 அன்று மாலை - பவழ விழா நிறைவு நாள்*
*வெள்ளி விழா நிறைவு நாள் - பொதுக்கூட்டம்*
*25, 26 - கடலூர் - விழுப்புரம் மாவட்டங்கள் - பயிற்சி வகுப்பு*
*25 அன்று மாலை - பவழ விழா நிறைவு நாள்,*
*வெள்ளி விழா நிறைவு நாள் பொதுக்கூட்டம்.*

சூன் *1, 2 நாகை - தஞ்சை - திருவாரூர் மாவட்டங்கள் - பயிற்சி வகுப்பு*
*1 அன்று மாலை - பவழ விழா நிறைவு நாள்*
*வெள்ளிவிழா நிறைவு நாள் பொதுக்கூட்டம்*
*8, 9 - திருநெல்வேலி மாவட்டம் - பயிற்சி வகுப்பு மற்றும் அரங்கக் கூட்டம்*
*15, 16 - சேலம் மாவட்டம் - பயிற்சி வகுப்பு மற்றும் அரங்கக் கூட்டம்*

**மேலே உள்ள நிகழ்ச்சி நிரலிற் கண்டபடி பயிற்சி வகுப்பு - பவழ விழா நிறைவு நாள் - வெள்ளி விழா நிறைவு நாள் நிகழ்ச்சிகளைச் சிறப்புற நடத்திட, இப்போது முதற் கொண்டே ஆயத்தம் ஆகுங்கள்.**

**'சிந்தனையாளன்' ஏட்டின் வெள்ளி விழாவும் நம் கதவைத் தட்டுகிறது.**

**'சிந்தனையாளன்' வெள்ளி விழாவை முன்னிட்டு, ஒவ்வொரு மாவட்டத்தின் சார்பிலும், தனித் தனியே 50 ஆண்டுக் கட்டணமும், 5 வாழ்நாள் கட்டணமும் திரட்டி, அந்தந்த மாவட்டத்தில் பவழ விழா நிறைவு- வெள்ளி விழா நிறைவுப் பொதுக்கூட்டத்தில் வழங்கிட முன் வாருங்கள்.**

**இதுகாறும் வருந்தி உழைத்த நம் தோழர்கள் தாம் இனியும் மேலும் மேலும் துன்பம் பாராமல் ஓடி ஆடி உழைத்திடல் வேண்டும்.**

**உழைப்புக்கு ஏற்ற உயர்ந்த பயனும், கொள்கைப் பயிற்சிக்கு ஏற்ற தெளிந்த புரிதலும் நம் இயக்கத்தையும், ஏடுகளையும் வாழ வைக்கும். நம் இயக்கத்தின் குறிக்கோள் வெற்றி பெற்றிட இப்பணிகள் உரம் சேர்க்கும்.**

**உள்ளத்தில் உறுதி பூண்டு உழைத்திடுங்கள்!**

தோழமையுள்ள,

*1.2.2002* வே.ஆனைமுத்து

www.padippakam.com

## உள்ளே...

### தலையங்கம்

* பாரதிய ஜனதா ஆதிக்க ஆட்சி பலப்படுவது எதனால்? யாரால்?

### கட்டுரைகள்

* அமெரிக்க ஏகாதிபத்திய பயங்கரவாதமும் அதற்குத் துணை போகும் திருடர்களும் – க. முகிலன்
* அறிவியல் தமிழின் தேவை – சு. நரேந்திரன்
* மடக்குறது தான் மன்றமா? – ஓலைப்பட்டி கந்தையா
* தமிழுக்கு ஒரு கருவூலம் கண்ட தனியொரு தமிழ் மகன் காணீர் – து. தில்லைவனம்

### கவிதை

* வீரத்தின் நடுகல் -தமிழேந்தி

**சிந்தனையாளன்**
(தமிழ் மாத இதழ்)

| | |
|---|---|
| தனி இதழ் | ரூ.7 |
| ஓர் ஆண்டுக் கட்டணம் | ரூ.80 |
| வாழ்நாள் கட்டணம் | ரூ.1000 |

* வாழ்நாள் கட்டணமாகப் பகுதித் தொகை செலுத்தியவர்கள், மீதித் தொகையை உடனே அனுப்புங்கள்.

பணம், டி.டி. அனுப்பிட
'சிந்தனையாளன்'
SINTHANAIYALAN
13, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம் சென்னை 5.
தொலைபேசி: 852 28 62.

இன்றே சந்தா செலுத்துங்கள்!
ஒவ்வொருவரும் உறுப்பினராகுங்கள்!

## ஒலி நாடாக்கள் விற்பனைக்கு

6-1-2002-ல் நடைபெற்ற சிந்தனையாளன் பொங்கல் மலர் வெளியீட்டு விழா மற்றும் மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் நூற்றாண்டு விழாவில் வே.ஆனைமுத்து மணவை முஸ்தபா, ப. அருளி ஆகியோர் ஆற்றிய உரைகள் அடங்கிய (சி.டி - ஒலிநாடா) எம்.பி-3 1 நாடாவின் விலை - ரூ 250/-

மூவரின் பேச்சுக்கள் தனித்தனியாக உள்ள ஒலிநாடா (ஆடியோ ஒலிநாடா) - ரூ 35/-

மொத்தமாகவோ, தனித்தனியாகவோ கீழ் குறித்துள்ள முகவரியில் கிடைக்கும்.

**யு.ரா. பாவேந்தன்,** கணினி தொழில் நுட்பம்,
**நிலவு கணினி மையம்,**
கணினி விற்க, வாங்க மற்றும் பழுது சரி செய்யவும்,
நெட்வொர்க் மற்றும் மென்பொருள் டெவலப்மெண்ட்,
ஏ.எம்.சி. மற்றும் ஏ.எஸ்.சி.
nilavu-c"hotmail.com
முகவரி: 29, இராசாசி வீதி,
அரக்கோணம் - 631 001.
தொலைபேசி - 04177 - 31872, 32069.

## காஞ்சி சி. நடராசன் தாயார் மறைவு

மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர் தோழர் சி. நடராசன் அவர்களின் தாயார் சி. சிங்காரம்மாள் தம் 83ஆம் அகவையில் 1-1-2002 அன்று மறைந்தார். அன்றே அவருடைய கண்கள் தானமாக வழங்கப்பட்டது. 2-1-2002 அன்று சி. நடராசன் இல்லத்தின் முன் சிங்காரம்மாள் மறைவு இரங்கல் கூட்டம் அரங்க. சானகிராமன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மா.பெ.பொ.க. செயலாளர் வே. ஆனைமுத்து, க. முகிலன், வடக்கு மாங்குடி மோகன் மற்றும் பல அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் இரங்கல் உரையாற்றினார்கள். எவ்விதமான சடங்கும் செய்யாமல் எளிய முறையில் அன்னார் உடல் எரியூட்டப்பட்டது. 27-1-2002 அன்று காஞ்சியில் சி. நடராசன் இல்லத்தில் சிங்காரம்மாள் நினைவு ஏந்தல் நிகழ்ச்சியும் படத்திறப்பும் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு அரங்க. சானகிராமன் தலைமை வகித்தார். சிங்காரம்மாள் படத்தைத் திறந்து வைத்து வே. ஆனைமுத்து உரை நிகழ்த்தினார். பல்வேறு முற்போக்கு அமைப்புகள், அரசியல் கட்சிகளைச் சார்ந்த தோழர்களும் உரையாற்றினர்.

## பரிசளிப்பு விழா

சிறுநாத்தூர் ஊ.ஒ. நடுநிலைப் பள்ளியில் 26-1-2002 சனிக்கிழமை அன்று குடியரசு தினவிழா தலைமையாசிரியர் டி. ஜினேந்திரன் தலைமையில் பஞ்சாயத்து தலைவர் ச. சாம்பசிவம் தேசிய கொடி ஏற்றினார். இப்பள்ளியின் முன்னாள் மாணவர் ப. வடிவேலு பி.எஸ்சி, 8 ஆண்டாக தொடர்ந்து அனைத்து வகுப்பு மாணவர்கட்கும் 1,2,3வது மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசினை வழங்கி சிறப்புரை ஆற்றினார். டி. சுந்தரமூர்த்தி ஆசிரியர் உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் அனைத்து ஆசிரியர்கள், மாணவர்கள், பஞ்சாயத்து உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். திருமதி எ. சாந்தி ஆசிரியை நன்றியுரை ஆற்றினார்

– கோ. அருண்மொழி

படிப்பகம்

www.padippakam.com

Licenced to post without prepayment WPP No. 344
Registrar of Newspapers of India under licence No. 24452 / 74. 'Sinthanaiyalan' TN/ Chief PMG/618/2001

# வீரத்தின் நடுகல்

அலைவந்து தாலாட்டும் ஈழ மண்ணில்
அமைதிவந்து தாலாட்ட விரும்பித் தானே
பலப்பலவாய் முயற்சிகளும் நடக்கு தங்கே!
'பயங்கரவா தம்' என்னும் சொல்லுக் கான
எலிவளையில் ஒளிந்தபடி சிலபேர் இங்கே
என்னமாய்க் குதிக்கின்றார்! எதை எடுங்கள்
புலிபுலிஎன் றேபீதி கிளப்பும் இந்தப்
புண்ணாக்குத் தலையர்கள் தொலைய வேண்டும்

துயர்தொடங்கி யதுஅங்கே இன்றா நேற்றா?
தொல்தமிழர் படுகொலைதான் என்றும் மாற்றா?
உயிர்ஒடுங்கிக் கிடக்கின்ற எம்மக் கட்கு
ஒருகாவல் அரண்தானே புலிகள்! இங்கே
மயிர்பிடுங்கி வாதங்கள் நடத்து கின்ற
மடத்தலைவர் இதனைஏன் உணர்ந்தா ரில்லை
பயிர்ஒடுங்கச் செய்கின்ற களைகளாம், இப்
பன்னாடை கள்திருவாய் மூட வேண்டும்

விழிப்பெடுத்த இனமாக்கப் பெரியார் வந்தார்
வெளியேறிய அண்ணா தமிழி னத்தை
அழக் கொடுத்தார் ஒருநடிகன் பின்னால்; அந்த
அரிதாரப் புதருக்குள் முளைத்த கள்ளி
கொழுப்பெடுத்துத் திரிகிறது இன்று; குன்றிக்
குற்றேவல் செய'வீர மணி'கள் உண்டு
முழுப்பொறுப்பும் ஏற்காமல் மஞ்சள்துண்டில்
முகம்புதைத்து அழத்தானா தலைவர் இங்கு?

மண்ணன்று கல்லன்று சிலம்புச் செல்வி
மாத்தமிழர் வீரத்தின் நடுகல்; ஓரக்
கண்களிலே மேய்கின்ற ஆரி யத்தின்
கதகதக்கும் திமிர்அடக்க நாளை எங்கள்
புண்பட்டுக் கிடக்கின்ற தமிழ ரெல்லாம்
பொங்கிடுவர்; புலிஎதிர்ப்பில் குளிர்காய் கின்ற
கண்கெட்ட துக்ளக்சோ சுப்ர மண்ய
கழிசடைசாமி எல்லாம் ஒழிந்தே போவர்

– 'தமிழேந்தி'

19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை-600 005. தொ.பே.எண். 852 28 62

படிப்பகம்